வெற்றியின் முகவரி
SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

TNPSC MAINS

# TNPSC GROUP - II ASPIRANTS

## JULY -2022 CURRENT ISSUES

SOCIO ECONOMIC ISSUES | TAMILNADU ADMINISTRATION | SCIENCE & TECHNOLOGY | STATE CURRENT ISSUES | NATIONAL CURRENT ISSUES

ARISE AWAKE ACHIEVE
சுரேஷ் பாடசாலை


தூத்துக்குடி
162-A, எட்டையபுரம் ரோடு
0461 - 4000970
99445 11344

திருநெல்வேலி
8A/1, இலந்தைகுளம் ரோடு,
பாளையங்கோட்டை
0462-2560123
98942 41422

இராமநாதபுரம்
82, புளிகாரத்தெரு,
கண்ணன் கோவில் அருகில்
75503 52916
75503 52917

மதுரை
மாஸ்டர் மஹால் பின்புறம்
முடக்குச்சாலை, காளவாசல்
0452 - 2383777
98431 10566

விரைவில் சென்னை

# July Month Current Affairs

## பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1. | **மத்திய நிகழ்வுகள்** | |
| | – தொழில் முனைவு இந்தியா | 05 |
| | – G-7 மாநாடு | 05 |
| | – கிரிப்டோ கரன்சி – சைபர் கிரைம் எச்சரிக்கை | 05 |
| | – பிரதமர் ஆயுஷ்மான் பாரத் திட்டம் | 06 |
| | – இந்தியாவின் விண்வெளி மேம்பாடு | 06 |
| | – விண்வெளி தொழில் பூங்கா | 07 |
| | – மண்ணைத் தொட்டதும் மரணம் | 08 |
| | – ஜனாதிபதி அரசியலமைப்புப்படி உச்ச அதிகாரம் பெற்றவர் | 09 |
| | – குடியரசுத் தலைவர் தேர்தல் : வாக்களிக்கும் உறுப்பினர்களில் 10% மட்டுமே பெண்கள் | 10 |
| | – குடியரசுத் தலைவர் | 10 |
| | – மக்கள் ஜனாதிபதி | 11 |
| | – போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர் | 12 |
| | – 16-வது குடியரசுத் தலைவர் தேர்தல் | 12 |
| | – குடியரசுத் தலைவருக்கான அதிகாரங்கள் | 13 |
| | – 15-வது குடியரசுத் தலைவர் | 14 |
| | – ஆங்கிலேயர் காலம் முதல் வெள்ளை சிவப்பு நிற கொடியுடன் | 14 |
| | – GST | 15 |
| | – உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம் | 16 |
| | – புதிய ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு | 16 |
| | – அரிசிக்கு 5% ஜிஎஸ்டி | 17 |
| | – வின்ட்ஃபால் டேக்ஸ் – கொள்ளை லாப தடுப்பு வரி | 17 |
| | – அல்லூரி | 18 |
| | – சுற்றுச்சூழல் | 18 |
| | – சுற்றுச்சூழல் அடிப்படை உரிமை | 19 |
| | – பிரபஞ்சத்தின் ஆரம்ப காலம் | 20 |
| | – பிரபஞ்சப் புதையல்கள் | 20 |
| | – சர்வதேச விண்வெளி நிலையம் | 21 |
| | – தொலைதூர கிரகத்தில் தண்ணீருக்கான அறிகுறி | 22 |

– அபீலியன் நிகழ்வு ........ 22
– சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டு திட்டம் ........ 22
– புதிய நாடாளுமன்ற கட்டிடம் ........ 22
– தேசிய கல்விக்கொள்கை ........ 23
– பாரத் ஆல்ட் ப்யூல் – மின் வாகன தயாரிப்பு ........ 23
– மோரே ........ 24
– மக்கள் தொகைப் பெருக்கம் ........ 24
– நிலைத்த வளர்ச்சி இலக்குகள் தற்போதைய நிலை ........ 25
– பாலின சமத்துவமின்மை : இந்தியாவுக்கு 135–ஆவது இடம் ........ 26
– நானோ உரங்கள் ........ 27
– நிலையான வளர்ச்சி இலக்குகள் ........ 27
– பிணை தனிச்சட்டம் ........ 28
– உணவு தானியங்கள் ஏற்றுமதி ........ 28
– சர்தார் சரோவர் அணை ........ 28
– குரங்கு அம்மை நோய் ........ 28
– இணையதள சேவை ........ 30
– மக்கள்தொகைப் பெருக்கம் – கட்டுப்படுத்துவது அவசியம் ........ 30
– மக்கள்தொகை வரமா, சாபமா? ........ 31
– இந்திய–ஆப்பிரிக்க வளர்ச்சி கூட்டுறவு மாநாடு ........ 32
– கடற்படையிலிருந்து விடைபெற்றது ஐஎன்எஸ் சிந்துத்வஜ் ........ 32
– நெடுஞ்சாலைகளின் நடுவே : அரளிச்செடிகள் வளர்ப்பது ஏன்? ........ 32
– குறைந்தபட்ச ஆதரவு விலை ........ 32
– நான்காம் தொழிற்புரட்சி ........ 33
– இசைவுத் தீர்வு முறை ........ 34
– முதல் பிரஜையும் முதன்மை பிரஜையும் ........ 35
– நூலகம் ........ 35
– பொய்க்காமல் பெய்யும் மழை ........ 37
– அண்டார்டிக் மசோதா ........ 37
– கங்காரு நீதிமன்றம் ........ 37
– செர்ன் ........ 38
– விண்வெளியிலும் சீனா தனி ராஜ்ஜியம் ........ 40
– ஜனாதிபதி மாளிகை ........ 40
– ஆட்சிமொழி செயலாக்கம் ........ 40
– பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம் ........ 40
– ஒற்றைக் கட்டளையின் கீழ் விரைவில் முப்படை செயல்பாட்டுப் பிரிவுகள் ........ 41
– அடிப்படை மாறாமல் கல்வியில் மாற்றம் ........ 41
– மின் வாகன உலகம் ........ 42

- ரூ. 2 லட்சம் மாத ஓய்வூதியம் ........ 42
- மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி திட்டம்........ 43
- மெட்டாவெர்ஸ்........ 43
- குழந்தைகளுக்கு முட்டை........ 44
- இல்லந்தோறும் மூவண்ணக்கொடி........ 45
- பட்டினியின் பிடி ........ 45
- 5ஜி அலைக்கற்றை ........ 46
- சூழலியல் தூதுவர் ........ 47
- ஐசிசிஆர்........ 47
- காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம்........ 47
- செஸ் ஒலிம்பியாட்........ 48
- செஸ் ஒலிம்பியாட் போட்டி........ 49
- செஸ் விளையாட்டின் பூர்விகம் தமிழ்நாடு ........ 50
- பண மோசடி தடுப்பு சட்டம் ........ 50
- 11–வது வேளாண் கணக்கெடுப்பு தொடக்கம் ........ 51
- வாக்காளர் பட்டியல் ........ 51
- பிரபஞ்ச ரகசியம் ........ 51
- இந்திய ஒற்றுமையை சிதைக்க முயற்சி........ 54
- சோலார் பேனல் தொடர்பான இணையதளம்........ 54
- அனைவருக்கும் நீதி ........ 54
- கொடியின் வரலாறு ........ 55

## 2. மாநில நிகழ்வுகள்

- தமிழக எம்.எல்.ஏ. ஓட்டு மதிப்பு 176........ 56
- கல்விக் குறியீடு தமிழகம் முன்னிலை........ 56
- தமிழக அரசு அமைத்த மாநில கல்வி குழு........ 57
- தொழில் புரிய உகந்த மாநிலம் ........ 58
- தமிழக போலீசுக்கு சிறப்பு கொடி ........ 58
- 36–வது உலக மக்கள்தொகை தினம் ........ 59
- தமிழகத்தில் காற்றாலை மின் உற்பத்தி........ 60
- கிங்மேக்கர் காமராஜர் ........ 60
- காலை சிற்றுண்டி ........ 61
- கல்வி சிறந்த தமிழ்நாடு ........ 61
- தமிழ்நாடு........ 62
- பள்ளிக்கரணை, பிச்சாவரம் சதுப்புநிலங்கள் ராம்சர் பட்டியல் ........ 63
- 2026 – க்குள் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு ........ 63
- இல்லம் தேடிக் கல்வி திட்டம் ........ 64

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

# 01 மத்திய நிகழ்வுகள்

## தொழில் முனைவு இந்தியா

- எம்.எஸ்.எம்.இ. துறையின் செயல்திறனை அதிகரித்தல் மற்றும் துரிதப்படுத்தல் திட்டத்துக்கு அடுத்த ஐந்து ஆண்டுகளில் ரூ.6,000 கோடி செலவிடப்பட உள்ளது. இந்தத் திட்டம் உலக வங்கியுடன் இணைந்து முன்னெடுக்கப்படுகிறது.
- இந்தியப் பொருளாதாரத்தில் மூன்றில் ஒரு பங்கு எம்எஸ்எம்.இ துறை மூலம் கிடைக்கிறது. அந்த வகையில் எம்எஸ்எம்இ துறையை மேம்படுத்துவது ஒட்டுமொத்த சமூகத்தை மேம்படுத்துவதாகும்.
- சுயசார்பு இந்தியா (ஆத்ம நிர்பார்) திட்டத்துக்கு எம்எஸ்எம்இ துறையின் பங்களிப்பு மிக முக்கியமானது.
- சிறு, குறு, நடுத்தர நிறுவனங்கள் தங்கள் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை அரசுக்கு வழங்குவதற்கு அரசு இ-சந்தை சிறந்த தளமாக உள்ளது.

## G-7 மாநாடு

### G-7

- வளர்ச்சியடைந்த பொருளாதார நாடுகள் ஒருங்கிணைந்து உருவாக்கிய அமைப்பே ஜி7 கூட்டமைப்பாக செயல்பட்டு வருகிறது.
- ஆறு நாடுகள் இணைந்து 1975-இல் உருவாக்கிய அமைப்பில் 1976-இல் கனடாவும் 1998-இல் ரஷியாவில் இணைந்தன.
- உக்ரைனின் ஒரு பகுதியாக இருந்த கிரீமியாவை ரஷியா ஆக்கிரமித்ததால், 2014-இல் ஜி8 நாடுகளிலிருந்து ரஷியா நீக்கப்பட்டது.

### அறிக்கை

- மக்களின் பேச்சு சுதந்திரத்தைக் காக்க முன்னுரிமை அளிக்கப்படும்; அமைதிவழி போராட்டங்களுக்கு மதிப்பளிக்கப்படும்; இணையவழி பாதுகாப்பு உறுதி செய்யப்படும்; பருவநிலை மாற்றம், கரோனா தொற்றுப்பரவல், சர்வதேச விதிகள் அடிப்படையிலான செயல்பாடு ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துச் செயல்படுவோம் என்று ஜி7 மாநாட்டுக் கூட்டறிக்கை கூறுகிறது.

### பிஎஸ்எல்வி சி-53 ராக்கெட்

- பிஎஸ்எல்வி சி-53 ராக்கெட் மூலம் சிங்கப்-பூர் நாட்டின் 'டிஎஸ்-இஓ' உள்ளிட்ட 3 செயற்கைக்கோள்கள் நேற்று வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டன.
- தரையில் இருந்து புறப்பட்ட 19 நிமிடங்களில் 3 செயற்கைக் கோள்களும் திட்டமிட்ட சுற்றுப்பாதையில் வெற்றிகரமான நிலை-நிறுத்தப்பட்டன.
- முதன்மைச் செயற்கைக் கோளான டிஎஸ்-இஓ 365 கிலோ எடை கொண்டது. இது ஒரே நேரத்தில் பல்வேறு கோணங்களில் பூமியை வண்ணப்படம் எடுக்கும் திறன் உடையது. மேலும் பேரிடர் மீட்புக்குத் தேவையான மனிதவளங்களை கண்டறியும் பணிகளையும் மேற்கொள்ளும்.
- இரவு, பகல் உட்பட அனைத்து பருவ நிலை-களிலும் துல்லியமாக படங்களை எடுத்து வழங்கும்.
- கல்விசார் பணிக்காக சிங்கப்பூர் நான்யாங் தொழில்நுட்ப பல்கலை மாணவர்கள் வடிவமைத்த ஸ்கூப்-1 என்ற செயற்கைக்கோளும் (2.8 கிலோ) விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

## கிரிப்டோ கரன்சி - சைபர் கிரைம் எச்சரிக்கை

- கிரிப்டோ கரன்சி என்பது டிஜிட்டல் பணம். இது **'block chain'** எனப்படும் கணினி தொழில்நுட்ப முறையில் உருவாக்கப்படும் மின்னணு பணமாகும்.
- கிரிப்டோ கரன்சியை உங்கள் கண்களால் பார்க்க முடியாது.
- பிட்காயின் என்பதுதான் கிரிப்டோ கரன்சி உலகின் ராஜா. தற்போது ஒரு பிட்காயின் மதிப்பு ரூ.15,93,833. இதன் விலை எப்போது உயரும், எப்போது வீழும் என்பதை யாரும் கணிக்க முடியாது.
- 'Ethereum', 'Cardano', 'Solana', 'Tron', 'Sushi', 'bake', 'cake', 'banana', 'shibu', 'chia', 'safemoon', என பல்லாயிரக்கணக்கான கிரிப்டோகரன்சிகள் உள்ளன.

- ஆசியாவில் பிட்காயின் பயன்படுத்தும் 2-வது பெரிய நாடாக இந்தியா உள்ளது.
- முழுக்க, முழுக்க 'ஆன்லைன்' கரன்சியாக இருப்பதால் 'சைபர்' கிரிமினல்கள் கிரிப்டோ கரன்சிகளை தவறாக பயன்படுத்தி எளிதாக மோசடி செய்கிறார்கள்.
- இந்தியாவில் கிரிப்டோ கரன்சி வர்த்தகம் செய்ய தடை விதித்து 2018 ஏப்ரல் 16-ல் ரிசர்வ் வங்கி சுற்றறிக்கை வெளியிட்டது.
- சுப்ரீம் கோர்ட்டு 2020-ம் ஆண்டு மார்ச் 4-ம் தேதி அந்த தடையை விலக்கி, மீண்டும் கிரிப்டோ கரன்சிகளுக்கு அனுமதி அளித்தது.
- கிரிப்டோ கரன்சி வர்த்தகத்தில் ஒருவர் ஈடுபட்டால் அந்த லாபத்தில் 30 சதவீதம் வரி கட்ட வேண்டும் என்று இந்திய அரசு அறிவித்துள்ளது.

## பிரதமர் ஆயுஷ்மான் பாரத் திட்டம்

- உலக வங்கி ரூ.13,834 கோடி கடனுதவி.
- பிரதமர் ஆயுஷ்மான் பாரத் திட்டம் 2021-ம் ஆண்டு அக்டோபர் மாதம் அறிமுகம் செய்யப்பட்டது.
- இதன் மூலம் பொது சுகாதார கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். குறிப்பாக ஆந்திரா, கேரளா, மேகாலயா, ஒடிசா, பஞ்சாப், தமிழ்நாடு, உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட 7 மாநிலங்களில் முன்னுரிமை திட்டப்பணிகளுக்கு இதில் நிதி ஒதுக்கப்படும்.
- இந்தியாவின் சுகாதார திட்ட செயல்பாடுகள் கடந்த சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க வளர்ச்சியை எட்டியுள்ளது. இதனால் மக்களின் வாழ்நாள் 69.8 ஆண்டுகளாக அதிகரித்துள்ளது.
- ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் இறப்பு விகிதம், முதியோர் இறப்பு விகிதம் கணிசமாகக் குறைந்துள்ளது.
- தரமான மருத்துவம் ஒருங்கிணைந்த வகையில் அனைவருக்கும் கிடைப்பதை உறுதிப்படுத்த அதற்குரிய நிதி ஆதாரங்களும் அவசியம்.
- கரியமிலவாயு வெளியேற்றத்தைக் குறைக்க அரசு ஒப்புக்கொண்ட இலக்கை எட்ட நாட்டின் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி யல் (ஜிடிபி) 1.5 சதவீதம் செலவிட வேண்டியுள்ளதாகவும் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

## இந்தியாவின் விண்வெளி மேம்பாடு

**வகைகள்**

1. ஏவுதல் வாகன தொழில்நுட்பம் (PSLV, GSLV, SSLV, RLV)
2. ரிமோட் சென்ஸிங் செயற்கைக்கோள்கள்
3. INSAT அமைப்பு (தொலைத்தொடர்பு, வானிலை முன்னறிவிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது.
4. சந்திரன், செவ்வாய், சூரியனுக்கான விண்வெளிப் பயணம்

**பின்புலம்**

- 1962-ல் இந்திய தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் குழு (INCOSPAR) அமைக்கப்பட்டதன் மூலம் நாட்டில் 7 துரித நடவடிக்கைகள் தொடங்கப்பட்டன.
- அதே ஆண்டில் திருவனந்தபுரம் அருகே தும்பா பூமத்தியரேகை ஏவுதளத்தின் (TERLS) பணியும் தொடங்கப்பட்டது.
- 1969 ஆகஸ்டில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (ISRO) நிறுவப்பட்டது.
- 1972 ஜூனில் விண்வெளி ஆணையம், விண்வெளி துறை (Department of Space) ஆகியவை அமைக்கப்பட்டன. 1972 செப்டம்பரில் இத்துறையின் கீழ் இஸ்ரோ கொண்டுவரப்பட்டது.

**இந்தியாவில் உள்ள விண்வெளி மையம் மற்றும் அவற்றின் செயல்பாடுகள்**

1. திருவனந்தபுரம் விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் மேற்கொள்ளப்படும் முக்கிய திட்டங்கள் : போலார் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் (PSLV), ஜியோ சின்க் ரோனஸ் சாட்டிலைட் லாஞ்ச் வெஹிக்கிள் (GSLV) மற்றும் (GSLV) Mk-III, ரோகிணி சவுண்டிங் ராக்கெட்டுகள் மற்றும் சிறிய செயற்கைக் கோள் ஏவுகணை மேம்பாடு (Small Satellite Lunch Vehicle) ஆகியவை அடங்கும்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- மீண்டும் பயன்படுத்தக்கூடிய ஏவுகணை வாகனம் (Reusable Launch Vehicle) சோதனை வாகனத் திட்டம் (Test Vehicle Project), காற்று-சுவாச உந்துதல் மற்றும் மனித விண்வெளிப் பயணத்தை நோக்கிய முக்கியமான தொழில் நுட்பங்கள்.

2. மகேந்திரகரி இஸ்ரோ புரொபல்ன் காம்ப்ளக்ஸ் (ஐபிஆர்சி) : இந்திய விண்வெளி திட்டத்துக்கான அதிநவீன உந்துவிசை தொழில்நுட்ப தயாரிப்புகளை செயல்படுத்த தேவையான அதிநவீன வசதிகளுடன் இந்த வளாகம் அமைக்கப்பட்டுள்ளது.
3. ஹைதராபாத் தேசிய தொலை உணர்வு மையம் : செயற்கைக் கோள் தரவுகளை பெறுவதற்கான தரை நிலையங்களை நிறுவுதல், தரவு தயாரிப்புகளை உருவாக்குதல், வான்வழி தொலை உணர்தல் தரவு கையகப்படுத்துதல், பயனர்களுக்கு பரப்புதல், பேரிடர் மேலாண்மை ஆதரவு உள்ளிட்ட தொலைநிலை உணர்திறன் பயன்பாடுகளுக்கான நுட்பங்களை மேம்படுத்துதல் ஆகியவை இதன் முக்கிய பணிகள்.
4. கர்நாடகாவின் ஹாசனில் உள்ள மாஸ்டர் கன்ட்ரோல் ஃபெசிலிட்டி (MCF) : இது 140-க்கும் அதிகமான ஜியோ-ஆர்க் தெரிவுநிலையுடன், தெற்காசியப் பிராந்தியத்தில் ஒரு சிறந்த கட்டுப்பாட்டு மையமாகும்.
5. நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் (NSIL) : இந்த நிறுவனம் 2019 மார்ச் 6-ம் தேதி மத்திய விண்வெளி துறையின் நிர்வாக கட்டுப்பாட்டில், இந்திய அரசு நிறுவனம் / மத்திய பொதுத்துறை நிறுவனமாக (CPSE) இணைக்கப்பட்டது. செயற்கைக் கோள்களை உருவாக்குதல், தேவைக்கேற்ப அவற்றை ஏவுதல் : ஏவுகணைகளை உருவாக்குதல், இந்திய தொழில் துறைக்கு ஏற்ப தொழில்நுட்ப மாற்றங்களை உருவாக்குதல் ஆகியவை இதன் பணி.

## MOM

- கிரகங்களுக்கு இடையேயான இஸ்ரோவின் முதல் பணியான Mars Orbiter Mission (MOM) 2021 செப்டம்பர் 24-ம் தேதி அதன் சுற்றுப்பாதையில் 7 ஆண்டுகளை நிறைவு செய்தது.

### சந்திராயன்

- சந்திராயன்-2 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன.
- 'சந்திராயன்-3' பணியானது தரையிறங்கும் இடத்துக்கு அருகில் உள்ள இடத்திலேயே மாதிரி பகுப்பாய்வு நடத்துவதற்காக நிலவின் மேற்பரப்பில் தரையிறங்குவதையும், உலவுவதையும் நிரூபிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ஆதித்யா L1 Mission

- சூரியன்-பூமி அமைப்பின் லாக்ராஞ்சியன் புள்ளி 1(L1) ஐ சுற்றியுள்ள ஒரு ஒளிவட்டப்பாதையில் இருந்து சூரியனை ஆய்வு செய்யும் முதல் விண்வெளி அடிப்படையிலான இந்தியப் பணி.
- ஃபோட்டோஸ்பியர், குரோமோஸ் பியர் மற்றும் சூரியனின் வெளிப்புற அடுக்குகளை 7 'பேலாடு'களுடன் இது கண்காணிக்கிறது.
- ககன்யான் (Gaganyan) திட்டம் : 3 பேர் கொண்ட குழுவினரை 'லோ எர்த் ஆர்பிட்'டுக்கு ஏற்றிச் சென்று, பூமியில் உள் முன் வரையறுக்கப்பட்ட இடத்துக்கு பாதுகாப்பாக திருப்பி அனுப்புவதே மனித விண்வெளிப் பயணம் ஆகும். இது இந்திய விண்வெளி திட்டத்தின் முக்கிய மைல்கல் ஆகும்.
- ரிமோட் சென்ஸிங் செயற்கைக் கோள் : 1988 முதல் செயல்பட்டு வரும் இந்திய ரிமோட் சென்ஸிங் செயற்கைக்கோளான IRS-1A ஐ அறிமுகப்படுத்தி இயக்குவதன் மூலம் செயல்பாட்டு ரிமோட் சென்ஸிங் சேவைகள் தொடங்கப்பட்டன ; இதன் மூலம் வானிலை, புயல்கள் குறித்து முன்னறிவிப்பு செய்வது எளிதாகிறது.

## விண்வெளி தொழில் பூங்கா

- இஸ்ரோ எனும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் இரண்டாவது ராக்கெட் ஏவுதளம், தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினத்தில் அமைக்க, தமிழக அரசு 2,000 ஏக்கர் பரப்பளவு நிலத்தை, இஸ்ரோவுக்கு வழங்கி உள்ளது.
- எஸ்.எஸ்.எல்.வி., என்ற சிறிய வகை ராக்கெட்டுகளை விண்ணில் அனுப்புவதற்கான ராக்கெட் ஏவுதளம் அமைப்பதற்கான பணிகளை இஸ்ரோ மேற்கொண்டு வருகிறது.
- ராக்கெட் ஏவுதளம் அருகில், விண்வெளி தொழில் பூங்கா அமைக்க **'டிட்கோ'** ஆலோசித்து வருகிறது.
- இந்த பூங்காவில், ராக்கெட் உருவாக்குவதற்கு தேவையான கருவிகள் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு நிலம் ஒதுக்கப்படும்.

## மண்ணைத் தொட்டதும் மரணம்

- அதிகம் மாசுகொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாவது இடத்தில் இந்தியா
- டெல்லி, பீகார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் காற்று மாசு அதிகரித்து வருகிறது.
- 'தூய காற்றை' விலை கொடுத்து வாங்க வேண்டிய காலம் வந்தாலும் வரும்.

### விழிப்புணர்வு இல்லை

- காற்று மாசுவால் கருவில் வளரும் சிசுக்கள் முதல் முதியவர்கள் வரை பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.
- இந்தியர்களின் ஆயுட்காலம் சராசரியாக 5 வயது வரை குறையும்.
- உலகளவில் மக்களின் சராசரி ஆயுட்காலம் 2.2 ஆண்டு குறையும்.
- ஆண்டுக்கு 46 லட்சம் பேர் சுவாசப் பிரச்சனை காரணமாக இறக்கின்றனர்.
- 2019-ம் ஆண்டில் இந்தியாவில் மட்டும் 1,16,000 பச்சிளம் குழந்தைகள் பிறந்து ஒரே மாதத்தில் இறந்துள்ளன.
- நுரையீரல் பாதிப்பு, இருதய நோய் மற்றும் புற்றுநோய் உள்ளிட்ட பல்வேறு நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளன. நகரங்களில் மட்டும் காற்று மாசு அதிகரித்த நிலையில் கிராமங்களிலும் காற்று மாசு அதிகரித்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் காற்று மாசுபாடு குறித்து விழிப்புணர்வு இல்லாததுதான் நகரம்.

### காரணம்

- கிராமங்களில் எரிக்கப்படும் குப்பைகள், விவசாயிகள் எரிக்கும் பயிர்க் கழிவுகள், பருவநிலை மாற்றத்தால் எரியும் காடுகள். அதிகரித்து வரும் தொழிற்சாலைகள், வாகனங்களில் இருந்து வெளியாகும் புகை போன்றவையே காற்று மாசு அதிகமாக முக்கிய காரணங்கள் ஆகின்றன.

### பேட்டரி வாகனம்

- 72 சதவீதம் காற்று மாசு டீசல், பெட்ரோல் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் புகையால் ஏற்படுகிறது என்று ஒன்றிய அரசின் மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.
- இதை தவிர்க்க பேட்டரி வாகனங்களை மக்கள் அதிகளவில் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு வருகிறது.
- காற்று மாசு அதிகரித்துக் கொண்டே சென்றால், அடுத்த தலைமுறையினர் கடும் பாதிப்புகளை சந்திக்க நேரிடும். எனவே நாடு முழுவதும் காற்று மாசை கட்டுப்படுத்த புதிய திட்டம் ஒன்றை ஒன்றிய அரசு வகுக்க வேண்டும்.

### 2-வது இடத்தில் இந்தியா

- இந்தியாவின் கங்கை சமவெளிப் பகுதிதான் உலகத்திலேயே மிக மோசமாக மாசடைந்த பகுதி என்பது தெரிய வந்துள்ளது.
- அதிகமாசு கொண்ட நாடுகளில் வங்கதேசம் முதலிடத்திலும், இந்தியா 2வது இடத்திலும் உள்ளன.

**6 வகையான மாசு**

| | |
|---|---|
| 0 - 50 | மக்களுக்கு பாதிப்பு ஏற்படாது; பாதுகாப்பானது |
| 51 - 100 | மிதமான பாதிப்பை ஏற்படுத்தும் |
| 101 - 150 | நோயாளிகள் உடல் நலனுக்கு தீங்கானது |
| 151 - 200 | ஆரோக்கியமான மக்களின் உடல் நலத்துக்கும் தீங்கு விளைவிக்கும். |
| 201 - 300 | மக்களின் உடல் நலனுக்கு அதிக பாதிப்பை ஏற்படுத்தும் |
| 301 - 500 | மிக மிக அபாயகரமானது |

### தப்பிக்க சில வழிமுறைகள்

- பொது போக்குவரத்தை பொதுமக்கள் பயன்படுத்தினால், நகரில் போக்குவரத்து நெரிசல் குறையும். இதன் மூலம் காற்று மாசை கட்டுக்குள் கொண்டு வரலாம். காற்று மாசு அதிகம் உள்ள நகரங்களில் இதை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- தொழிற்சாலைகளில் இருந்து வெளியேறும் 'காற்றின் தரத்தை' அடிக்கடி அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். திடீரென காற்று மாசு அதிகரித்தால், அதற்கான காரணத்தை உடனே கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தூய காற்றின் தோழனான மரங்களை அதிகளவில் வளர்க்க வேண்டியது மிக அவசியம். ஒவ்வொருவரும் மரங்களை வளர்ப்பதில் அதிக அக்கறை காட்ட வேண்டும்.
- காற்று மாசுபாடு குறித்து பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை அதிகளவில் நடத்த வேண்டும்.

## டெல்லி மக்கள் மொத்த ஆயுளில் 10 ஆண்டு காலி

- உலக சுகாதார அமைப்பின் மதிப்பீட்டின்படி டெல்லி, பீகார், உத்தரப்பிரதேசம் மாநிலங்களில்தான் மிக மோசமான காற்று மாசு பிரச்சனை உள்ளது.
- தற்போதைய நிலை தொடர்ந்தால் டெல்லி மக்களின் ஆயுட்காலம் 10.1 ஆண்டுகள் குறையும்.
- உத்தரப்பிரதேச மக்களின் ஆயுட்காலம் 8.9 ஆண்டுகளும், பீகார் மக்களின் ஆயுட்காலம் 7.9 ஆண்டுகளும் குறையும்.
- ஆய்வில் வெளியான அதிர்ச்சி தகவல்கள்

# ஜனாதிபதி அரசியலமைப்புப்படி உச்ச அதிகாரம் பெற்றவர்

- அலங்கார பதவி என்று வர்ணிக்கப்பட்டாலும், இந்திய அரசியல் சாசனத்தின்படி நாட்டின் அதி உச்ச அதிகார நபர் ஜனாதிபதி தான். சட்டங்கள் அனைத்தும் அவரது ஒப்புதல் பெற்றே நிறைவேறுகின்றன. முப்படைகளின் தலைவரும் அவரே.
- இந்திராகாந்தி, ராஜீவ் காந்தி என இரு பிரதமர்களின் ஆட்சிக்காலத்தில் ஜனாதிபதியாக இருந்த கியானி ஜெயில் சிங் 1982 முதல் 1987 வரை நாட்டின் 7-வது ஜனாதிபதியாக பதவி வகித்தார்.
- பொற்கோவிலில் புகலிடம் பெற்ற காலிஸ்தான் பயங்கரவாதிகளை காலி செய்வதற்கான ஆபரேசன் 'புளூஸ்டார்' பற்றி முப்படைகளின் தலைவரான ஜனாதிபதி ஜெயில்சிங்கிடம் தெரிவிக்கப்படவே இல்லை.
- 'ஆபரேசன் புளூஸ்டார்' நடவடிக்கைக்கும், தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று சீக்கிய தலைவர்களுக்கு விளக்கம் அளித்தார்.
- அரசியல் சாசனத்தின் 74-வது பிரிவின்படி, மந்திரிகள் குழுவின் உதவி, ஆலோசனைக்கு ஜனாதிபதி உட்பட்டவர் என்றாலும், பிரதமரை ஜனாதிபதி நியமிக்கலாம்.
- பிரதமரின் ஆலோசனைப்படி மந்திரிகளும் அவரால் நியமிக்கப்படலாம் என்று 75-வது பிரிவு கூறுகிறது.
- மக்களவையில் பெரும்பான்மை எம்.பி.க்களின் ஆதரவு உள்ளவரை பிரதமராக தேர்வு செய்வதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கிறது என்று தெளிவு பெற்றேன்.

## குடியரசுத் தலைவரின் தனித்த அதிகாரம்

- 1986-ல் நடந்த எந்த தபாலையும் ஆய்வுக்கு உட்படுத்தும் அதிகாரத்தை அரசுக்கு தரும் இந்தியத் தபால் அலுவலக திருத்த மசோதா, நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- ஜனாதிபதியின் ஒப்புதலுக்காக அது அனுப்பப்பட்டபோது ஜெயில் சிங் ஒப்புதல் அளிக்கவுமில்லை, மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்பவுமில்லை.
- அமெரிக்க நடைமுறையைப் பின்பற்றி, ஜனாதிபதியின் 'பாக்கெட் வீட்டோ' அதிகாரத்தை பயன்படுத்தினார்.

## ஜனாதிபதி தேர்தலும்..... தமிழகமும்.....

- 3 ஜனாதிபதிகளை தமிழகம் தந்திருக்கிறது.
- நாட்டின் 2-வது ஜனாதிபதியான சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், திருத்தணியில் பிறந்தவர். மாணவராகவும், ஆசிரியராகவும் பெரும்பாலான நாட்களை தமிழ்நாட்டிலேயே கழித்தார்.
- துணை ஜனாதிபதி, ஜனாதிபதி என 15 ஆண்டுகள் நாட்டின் தலைநகரில் வசித்தவர், சென்னை திரும்பி 1975-இல் இங்கு இறந்தார்.
- ஆர்.வெங்கட்ராமன் 1980-84 காலகட்டத்தில் இந்திராகாந்தி மந்திரிசபையில் நிதி, ராணுவ மந்திரி பொறுப்புகளை வகித்தது.
- மக்கள் ஜனாதிபதியாக திகழ்ந்த ஏ.பி.ஜே. அப்துல் கலாம், அரசியல் வாதியாக இல்லாமல் இப்பதவிக்கு வந்தவர். மாணவர்கள் மத்தியில் இருப்பதிலும், அவர்களை ஊக்குவிப்பதிலுமே அதிக ஆர்வம் கொண்டிருந்த கலாம், 2015 ஜுலையில் ஷில்லாங்கில் மாணவர்கள் முன் பேசிக் கொண்டிருக்கும் போதே இறுதி மூச்சை விட்டார்.

## இருமுறை ஜனாதிபதி பதவி வகித்தவர்

- இந்திய ஜனாதிபதிகளிலேயே இருமுறை இப்பதவி வகித்தவர். முதலாவது ஜனாதிபதியான ராஜேந்திர பிரசாத்தான்.

## குடியரசுத் தலைவர் தேர்தல் : வாக்களிக்கும் உறுப்பினர்களில் 10% மட்டுமே பெண்கள்

- குடியரசுத் தலைவர் தேர்தலில் வாக்களிக்கவுள்ள 4,759 எம்.பி., எம்எல்ஏ-க்களில் 10 சதவீதம் பேர் மட்டுமே அதாவது 477 பேர் மட்டுமே பெண்கள்.
- இந்தத் தேர்தலில் எம்.பி., எம்.எல்ஏ-க்களுக்கான வாக்குகளின் எண்ணிக்கையைப் பொருத்தவரை மொத்தமுள்ள 10,74,364 வாக்கு மதிப்பில் பெண்களின் வாக்கு மதிப்பு 1,30,304 (13%) மட்டுமே.
- அதில் மக்களவை எம்.பி.க்களை பொருத்தவரை மொத்தமுள்ள 3,79,400 வாக்குகளில் 81 பெண் உறுப்பினர்களின் வாக்குகள் 56,700 (15%) மட்டுமே.
- மாநிலங்களவை எம்.பி.க்களை பொருத்தவரை மொத்தமுள்ள 1,58,200 வாக்குகளில் 31 பெண் உறுப்பினர்களின் வாக்குகள் 21,400 (14%) மட்டுமே.
- மாநில சட்டப் பேரவைகளைப் பொருத்தவரை, உத்தரப்பிரதேச மாநில சட்டப்பேரவை அதிக பெண் உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. மொத்தமுள்ள 403 எம்.எல்.ஏக்களில் 47 பேர் பெண்கள்.
- மேற்கு வங்கத்தில் 294 எம்.எல்.ஏக்களில் 41 பேர் பெண்கள்

## குடியரசுத் தலைவர்

- இந்தியாவில் ஜனாதிபதி பதவி மிகவும் வித்தியாசமானது. அவர்களுக்கு ஏராளமான அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ள போதிலும், அவற்றை பயன்படுத்த முடியாது.
- அமைச்சரவையின் ஆலோசனைப்படி செயல்படுபவராக மட்டுமே ஜனாதிபதிகள் காட்டப்படுகின்றனர்.
- ஆட்சி செய்யவோ, நிர்வாகம் செய்யவோ இயலாத ஒரு தலைவன்
- ஜனாதிபதி என்பவர் வெறும் அரசின் ரப்பர் ஸ்டாம்பாக மட்டுமே இருக்க வேண்டுமா? என்று கேட்டால், நிச்சயமாக இல்லை.... என்பதே பதிலாக இருக்கும்.

SURESH'

### No Rubber stamp

- உண்மையிலேயே அதிகாரங்கள் இல்லாதவராக இருந்தாலும், ஓர் ஜனநாயக பாதுகாவலராக, அரசியலமைப்பை உறுதி செய்வதன் மூலம் அதன் மதிப்புகளை ஜனாதிபதியால் செழுமைப்படுத்த முடியும்.
- மக்களின் எண்ணத்தையும், உண்மையான பிரச்சனையையும், கோரிக்கையையும் அரசின் கவனத்திற்கு கொண்டு செல்பவராகவும், பெரும்பான்மை வகிக்கும் அரசுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் தங்களை குறைகளை வெளிப்படுத்துவதற்க்கான கடைசி ஆபத்பாந்தவனமாகவும் இருக்க முடியும்.
- சமூக பிரச்சனைகள் குறித்து அரசின் கவனத்தை உடனடியாக திசை திருப்ப வேண்டிய ஒரு முக்கிய நபர் ஜனாதிபதியே.
- எந்த ஒரு விஷயத்திற்காகவும் சம்பந்தப்பட்ட ஒன்றிய அமைச்சரை நேரில் அழைத்து மக்கள் குறைகளை தெரிவித்து, அரசாங்கத்தை முடுக்கிவிடும் அதிகாரம் படைத்தவர்.
- மக்களையும் சமூகத்தையும் பாதிக்கும் மசோதாக்களுக்கு ஒப்புதல் தராமல் தடுக்கக்கூடிய சக்தி படைத்தவரும் அவரே.

### என்னென்ன அதிகாரங்கள்

- நாட்டின் அனைத்து விவகாரங்களும் ஜனாதிபதிக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.
- நாடாளுமன்றத்தின் 2 அவைகளிடையே ஏதாவது சட்டரீதியான பிரச்சனை உருவானால் இரண்டு அவைகளையும் கூட்டுவதற்கான அதிகாரம் படைத்தவர்.
- நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அனைத்து மசோதாக்களும் ஜனாதிபதியின் ஒப்புதல் பெற்ற பிறகே சட்டமாக நடைமுறைக்கு வரும்.
- ராணுவத்தின் சுப்ரீம் கமாண்டர் என்ற பொறுப்பு ஜனாதிபதிக்கு உண்டு. முப்படைகளின் தளபதிகளை ஜனாதிபதியே நியமிப்பார்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY MOST TRUSTED SINCE 2006

- இதர நாடுகளுடன் உறவுகளைப் பேணக்கூடியவர் ஜனாதிபதி. வெளிநாட்டுக்கான இந்திய தூதர்கள் அனைவரும் அவரின் பிரதிநிதிகளாக வெளிநாட்டில் வலம் வருகின்றனர்.
- பிரதமர், அமைச்சர்கள் உள்ளிட்ட அரசியல் சாசன ரீதியான உயர்நிலைப் பதவிகளை நியமிக்கவும், நீக்கவும் அதிகாரம் கொண்டவர்.
- குற்றவாளிகளுக்கு விதிக்கப்பட்ட தண்டனையை குறைக்கவும், மாற்றவும், நிறுத்தவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. தூக்குத் தண்டனையை மாற்ற குற்றவாளிக்கு கருணைஅளிக்கலாம்.

## மக்கள் ஜனாதிபதி

- நாட்டின் 11-வது ஜனாதிபதியான தமிழகத்தின் ஏ.பி.ஜே.அப்துல்கலாம் இந்தியாவின் மிகப் பிரபலமான ஜனாதிபதியாக இருந்தார்.
- காங்கிரஸ் அரசு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்தது. அதன்படி, வழக்கில் தண்டனை பெற்ற அரசியல்வாதி அதை தேர்தல் கமினுக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை என்ற ரீதியில் இந்தச் சட்டத் திருத்தம் இருந்தது.
- மேலும் 2 முறை தண்டனை பெற்ற அரசியல்வாதியை தேர்தலில் போட்டியிடுவதில் இருந்து தடுக்கும் தேர்தல் கமிஷனின் விதிமுறையையும் இந்தச் சட்டம் தளர்த்தியது.
- இதற்கு ஒப்புதல் அளிக்க கலாம் மறுத்து திருப்பி அனுப்பினார். ஆனால் 2வது முறையாக எந்த திருத்தமும் இன்றி ஒன்றிய அரசு அதே சட்டத்தை அனுப்பியதால் வேறு வழியின்றி ஒப்புதல் அளித்தார்.

### இந்திய ஜனாதிபதி

- இந்தியாவில் முதன்முதலில் 1952-ல் ஜனாதிபதி தேர்தல் நடந்தது. தற்போது 16வது ஜனாதிபதி தேர்தல் நடக்க உள்ளது.
- ஜனாதிபதியின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்
- மக்களவை, மாநிலங்களவையை சேர்ந்த 543 எம்பிக்களும், மாநிலங்களவையின் 233 எம்பிக்களும் உட்பட 776 எம்பிக்களும், 4,033 எம்.எல்.ஏக்களும் வாக்களிக்க தகுதியானவர்கள்.
- ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட ரூ.2,500 ஆக இருந்த டெபாசிட் தொகை 1997-ல் ரூ.15,000 ஆக உயர்த்தப்பட்டது. தற்போது வரையிலும் இது தொடர்கிறது.
- எந்த கட்சிகளும் தங்கள் எம்பி, எம்எல்ஏக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென கட்சி கொறடா உத்தரவு பிறப்பிக்க முடியாது. யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்பது எம்பி. எம்எல்ஏக்களின் தனிப்பட்ட விருப்பமாகும்.
- வாக்குப்பதிவு மையத்தில்தரப்படும் பிரத்யேக பேனா மூலமாக மட்டுமே வாக்கை பதிவு செய்ய வேண்டும்.
- நியமன எம்பிக்கள் வாக்களிக்க தகுதியில்லை.
- மாநிலத்தின் மக்கள் தொகை அடிப்படையில் எம்பி, எம்எல்ஏக்களின் ஓட்டுகளுக்கு மதிப்பு தரப்படும். அந்த வகையில் மெ ாத்த ஓட்டுக்களின் மதிப்பு 10.80 லட்சமாகும்.
- **ராஜேந்திரபிரசாத் :** நாட்டின் முதல் ஜனாதிபதி என்ற பெருமைக்குரிவர். இப்பதவியை தொடர்ந்து 2 முறை வகித்தவரும் இவர் மட்டுமே. பெரும்பான்மை பலம் கொண்ட அரசு ஆட்சியில் இருந்தாலும் ஜனாதிபதியை ஆட்டிப்படைக்க முடியாது என்பதை உணர்த்தியவர்.
- பிரதமர் நேருவுடன் சமூக உறவை கொண்டிருக்கவில்லை.
- **ஜெயில்சிங் :** 1984-ல் பிரதமர் இந்திராகாந்தி படுகொலை செய்யப்பட்டிருந்த போது, அடுத்த பிரதமராக யாரை நியமிப்பது என்ற கேள்வி எழுந்தது. அப்போது, நாட்டின் 7வது ஜனாதிபதியாக இருந்த ஜெயில் சிங், ராஜிவ் காந்தியை பிரதமராக நியமித்து, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- எம்பிக்கள் தங்கள் தலைவரை தேர்ந்தெடுக்கும் வரை நான் காத்திருக்க வேண்டியதில்லை. நெருக்கடியான சூழலில் பிரதமரை நியமிக்கும் தடையில்லா உரிமையும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு என தனக்கான அதிகாரத்தை சுட்டிக்காட்டினார்.
- 1987-ல் நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட ஒரு சர்ச்சைக்குரிய மசோதாவிற்கு அவர் ஒப்புதல் அளிக்க வில்லை. அந்த மசோதா பின்னர் அரசால் வாபஸ் பெறப்பட்டது.
- **சங்கர் தயாள் சர்மா :** ஒன்பதாவது ஜனாதிபதியாக இருந்த சங்கர் தயாள் சர்மாவும் 1996-ல் இரண்டு நிர்வாக உத்தரவுகளை அமைச்சரவைக்கு திருப்பி அனுப்பி வைத்தார்.
- **கே.ஆர்.நாராயணன் :** கே.ஆர்.நாராயணன் இந்தியாவின் மிகவும் உறுதியான ஜனாதிபதிகளில் ஒருவராக புகழப்பட்டார். அரசின் அனுமதி இல்லாமல் பல அறிக்கைகளை வெளியிட்டார்.

- மரபுகளை மீறி, மூத்த பத்திரிக்கையாளருக்கு சிறப்பு பேட்டியும் அளித்தார்.
- உ.பியில் நேரடி ஆட்சியை திணிக்கும் அமைச்சரவையின் முடிவை திருப்பி அனுப்பினார்.
- அமெரிக்க அதிபர் பில்கிளிண்டன் உள்ளிட்ட உலக தலைவர்களை சந்தித்து, இந்தியா உடனான உறவை வளர்த்தார். பொதுவாக வெளிநாட்டு தலைவர்களை பிரதமர்களே சந்திப்பது வழக்கம்.
- **பிரணாப்முகர்ஜி :** அவசர சட்டங்கள் மூலமாக புதிய சட்டங்களை உருவாக்குவதற்கான வழியை நாட வேண்டாம் என்று அவர் கடுமையாக அறிவுறுத்தினார்.

## போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர்

- நாட்டின் 75 ஆண்டுகால சுதந்திர வரலாற்றில் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே குடியரசுத் தலைவர் என்ற பெருமை **நீலம் சஞ்சீவ ரெட்டி** வசம் உள்ளது.
- குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர் உள்ளிட்டோரை மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கின்றனர். அவர்களை மக்கள் மறைமுகமாகத் தேர்ந்தெடுப்பதாகப் பொருள்.
- தேர்தலில் போட்டியிட நீலம் சஞ்சீவ ரெட்டி உட்பட 37 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.
- மக்களவை, மாநிலங்களவை, மாநில சட்டப்பேரவை உறுப்பினர்கள் ஆகியோர் தேர்தலில் வாக்களிக்கத் தயாராக இருந்த நிலையில், நீலம் சஞ்சீவ ரெட்டி தவிர மற்ற வேட்பாளர்களின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.
- அதன் காரணமாக, தேர்தல் நடத்த வேண்டிய அவசியம் இல்லாமல் போனது
- நீலம் சஞ்சீவ ரெட்டி மட்டுமே வேட்பாளராக இருந்ததால், அவர் போட்டியின்றி வெற்றி பெற்றதாகத் தேர்தல் நடத்தும் அதி காரி அறிவித்தார்.
- 1977-க்கு முன்பும் பின்னரும் நடைபெற்ற அனைத்து குடியரசுத் தலைவர் தேர்தல்களிலும் ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்களே போட்டியிட்டுள்ளனர்.
- 1997-ஆம் ஆண்டுக்குப் பிறகு குடியரசுத் தலைவர் தேர்தலில் இருவர் மட்டுமே போட்டியிட்டு வருகின்றனர்.

### 1977-ல் நடந்த ருசிகரம்

- 1977-ல் 7வது தேர்தலில் அந்த ருசிகர சம்பவம் நடந்தது. 37 பேர் வேட்புமனு தாக்கல் செய்த நிலையில், 36 பேரின் ம னுக்கள் பல்வேறு காரணங்களுக்காக தள்ளுபடி செய்யப்பட்டன.
- நீலம் சஞ்சீவ ரெட்டி போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார். வரலாற்றில் இதுபோல போட்டியின்றி எந்த ஜனாதிபதியும் தேர்ந்தெடுக்கப்படவில்லை.
- 1997க்குப் பிறகு டெபாசிட் கட்டணம் உயர்வு, பல்வேறு விதிமுறைகள் காரணமாக 2 பேர் மட்டுமே போட்டியின்றி தேர்தலாக ஜனாதிபதி தேர்தல் மாறி உள்ளது.

## 16-வது குடியரசுத் தலைவர் தேர்தல்

- வாக்காளர்கள் : 4,809
- மக்களவை உறுப்பினர்கள் : 543
- மாநிலங்களவை உறுப்பினர்கள் : 233
- மாநிலசட்டப்பேரவை உறுப்பினர்கள் : 4,033

### வாக்குமதிப்பு

| உறுப்பினர்கள் | தலா மதிப்பு | மொத்த வாக்குகள் |
|---|---|---|
| நாடாளுமன்ற உறுப்பினர்கள் | 700 | 5,43,200 |

### அதிகமுள்ள மாநிலங்கள்

| | | |
|---|---|---|
| **உத்தரப்பிரதேசம்** | 208 | 83,824 |
| **தமிழகம்** | 176 | 41,184 |
| **ஜார்க்கண்ட்** | 176 | 14,256 |
| **மகாராஷ்டிரம்** | 175 | 50,400 |
| **பீகார்** | 173 | 42,039 |
| **ஆந்திரப் பிரதேசம்** | 153 | 27,825 |

### குறைவாக உள்ள மாநிலங்கள்

| | | |
|---|---|---|
| **சிக்கிம்** | 7 | 224 |
| **அருணாச்சலப் பிரதேசம்** | 8 | 480 |
| **மிஸோரம்** | 8 | 320 |
| **நாகலாந்து** | 9 | 540 |
| **மேகாலயா** | 17 | 1,020 |
| **மணிப்பூர்** | 18 | 1,080 |
| **கோவா** | 20 | 800 |


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

## குடியரசுத் தலைவருக்கான அதிகாரங்கள்

- நாட்டின் தலைவர்
- அரசமைப்புச் சட்டத்தின் பாதுகாவலர்
- முப்படைகளின் தலைவர்
- நாட்டின் முதல் குடிமகன்

### நிர்வாக அதிகாரங்கள்

- பிரதமரையும் மற்ற அமைச்சர்களையும் நியமிக்கும் அதிகாரம்.
- அரசின் அனைத்து நடவடிக்கைகளும் குடியரசுத் தலைவரின் பெயரிலேயே மேற்கொள்ளப்படும்.
- மத்திய அரசின் தலைமை வழக்குரைஞரை (அட்டர்னி ஜெனரல்) நியமிக்கும் அதிகாரம்.
- தலைமை கணக்குத் தணிக்கையாளர், தலைமைத் தேர்தல் ஆணையர், மற்ற ஆணையர்கள், மத்திய பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம்.
- மாநிலங்களின் ஆளுநர்களை குடியரசுத் தலைவரே நியமிப்பார்.
- நாட்டில் உள்ள யூனியன் பிரதேசங்களை குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் நிர்வாகிகளே நிர்வகிப்பர்.
- அரசாங்கம் சார்ந்த எந்தவொரு தகவலையும் பிரதமரிடமிருந்து கோர முடியும்.
- நாட்டின் எந்தப் பகுதியையும் பழங்குடியின, பட்டியலினப் பகுதியாக அறிவித்து, அவற்றை நிர்வகிக்கும் அதிகாரம்.
- அமைச்சரவையில் முடிவுகளை மறுபரிசீலனை செய்யுமாறு கூறும் அதிகாரம்.

### நிதிசார் அதிகாரங்கள்

- பண மசோதாக்களை குடியரசுத் தலைவரின் ஒப்புதலின்றி தாக்கல் செய்ய முடியாது.
- குடியரசுத் தலைவரின் பெயரிலேயே நிதிநிலை அறிக்கை (பட்ஜெட்) தாக்கல் செய்யப்படுகிறது.
- அவசரகால நிதியில் இருந்து நிதியை விடுவிக்கும் அதிகாரம்.
- 5 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிதிக் குழுவை நியமிக்கும் அதிகாரம்.

### நீதிசார் அதிகாரங்கள்

- உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி, மற்ற நீதிபதிகள், உயர்நீதிமன்ற நீதிபதிகள் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமிப்பார்.
- குறிப்பிட்ட சட்டம் தொடர்பான கருத்துகளை உச்சநீதிமன்றத்திடம் கோரும் அதிகாரம்.
- நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிகளுக்கு மன்னிப்பு வழங்கவும், தண்டனையைக் குறைக்கவும் குடியரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

### பாதுகாப்புசார் அதிகாரங்கள்

- ராணுவ தலைமைத் தளபதி, கடற்படை தலைமைத் தளபதி, விமானப் படைத் தலைமைத் தளபதி ஆகியோரை நியமிக்கும் அதிகாரம்.
- எந்தவொரு நாட்டின் மீதும் போர்தொடுக்க உத்தரவிடும் அதிகாரம்.

### நெருக்கடிநிலை அதிகாரங்கள்

- நாடு முழுவதுமோ அல்லது குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுமோ நெருக்கடி நிலையை அமல்படுத்தும் அதிகாரம்.
- மாநிலங்களில் குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்தும் அதிகாரம்.
- நிதிசார் நெருக்கடியை அமல்படுத்தும் அதிகாரம்.

### சட்டம் சார்ந்த அதிகாரங்கள்

- இந்திய நாடாளுமன்றம் குடியரசுத் தலைவரையும் உள்ளடக்கியது.
- குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளித்தால் மட்டுமே நாடாளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்கள் சட்டவடிவு பெறும்.
- நாடாளுமன்ற கூட்டத்தொடரை நடத்துவதற்கான அழைப்புவிடுக்கும் அதிகாரம்; முடித்துவைக்கும் அதிகாரம்.

- நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடைபெறாத சமயங்களில் அவசரச் சட்டங்களைப் பிறப்பிக்கும் உரிமை.
- மக்களவை, மாநிலங்களவையின் கூட்டுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கும் அதிகாரம்.
- ஆண்டின் முதல் கூட்டத்தொடரின் முதல்நாளிலும், புதிய அரசு பதவியேற்ற பிறகு நடைபெறும் முதல் கூட்டத்தொடரிலும் குடியரசுத்தலைவர் சிறப்பு உரையாற்றுவார்.
- மாநிலங்களவைக்கும் 12 நியமன உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம்.
- மக்களவையைக் கலைக்கும் அதிகாரம்.
- எம்.பி.க்களின் பதவிநீக்கம் குறித்து இந்திய தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்து முடிவெடுக்கும் அதிகாரம்.
- நாடளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களைத் திருப்பி அனுப்பவும், காத்திருப்பில் வைக்கவும் அதிகாரம்.
- மத்திய பணியாளர் தேர்வாணையம், நிதிக் குழுவின் ஆண்டறிக்கைகளை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கும் அதிகாரம்.
- மாநில ஆளுநர்கள் அனுப்பிவைக்கும் மாநில மசோதாக்களை எவ்வளவு காலத்துக்கு வேண்டுமானாலும் குடியரசுத் தலைவர் காத்திருப்பில் வைக்கலாம்.

**கட்டுப்பாட்டுக்கு உட்பட்டவை**

- குடியரசுத் தலைவருக்குப் பல்வேறு அதிகாரங்கள் வழங்கப்பட்டிருந்தாலும், அவை அனைத்தையும் தன்னிச்சையாக அவர் செயல்படுத்த முடியாது.
- பெரும்பாலான அதிகாரங்களை மத்திய அமைச்சரவையின் ஒப்புதலைப் பெற்ற பிறகே அவரால் செயல்படுத்த முடியும்.
- மத்திய அமைச்சரவையின் அறிவுரைப்படியே செயல்பட வேண்டுமென அரசமைப்புச் சட்டம் குடியரசுத் தலைவருக்குக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது.

**பதவி விலகலும் தகுதிநீக்கமும்**

- குடியரசுத் தலைவர் பதவி விலக விரும்பினால், ராஜினாமா கடிதத்தை குடியரசுத் துணைத் தலைவரிடம் வழங்க வேண்டும்.
- குடியரசுத் தலைவரை தகுதிநீக்கம் செய்வதற்கு, நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

SURESH'

## 15-வது குடியரசுத் தலைவர்

- நாட்டின் 15-வது குடியரசுத் தலைவராக திரவுபதி முர்மு (64) பதவியேற்றார். அவருக்கு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா, பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.
- பதவியேற்ற பிறகு மரபுப்படி ராம்நாத் கோவிந்தும், திரவுபதி முர்முவும் இருக்கைகளில் மாறி அமர்ந்தனர்.
- ராணி லட்சுமிபாய், ராணி வேலுநாச்சியார், ராணி கெய்டின்லியு, ராணி சென்னம்மா போன்ற துணிச்சலான பெண்கள் தேசத்தை பாதுகாப்பதில் பெண் சக்தியை உலகுக்கு பறைசாற்றினர்.
- பன்முகத் தன்மை நிறைந்த நமது நாட்டில் பல மொழிகள், மதங்கள், பிரிவுகள், உணவுப் பழக்கங்கள், வாழ்க்கை முறைகள் பின்பற்றப்படுகின்றன.
- எனினும் 'ஒரே பாரதம் உன்னத பாரதம்' என்ற உயரிய லட்சியத்துடன் நாடு முன்னேறிச் செல்கிறது.
- பாரம்பரியத்தின்படி ஓய்வு பெற்ற குடியரசுத் தலைவரை புதிய குடியரசுத் தலைவர் வீடு வரை சென்று வழியனுப்பி வைக்க வேண்டும். அதன்படி, ராம்நாம் கோவிந்தை, திரவுபதி முர்மு காரில் வீடு வரை சென்று வழியனுப்பி வைத்தார்.

## ஆங்கிலேயர் காலம் முதல் வெள்ளை சிவப்பு நிற கொடியுடன்

- 1773 -ல் ஜிஜிபி (கவர்னர் ஜெனரல் பாடிகார்டு) என்ற படையை அமைத்தவர், இந்தியாவின் கவர்னர் ஜெனரலாக இருந்த வாரன் ஹேஸ்டிங்ஸ். ஈஸ்ட் இந்தியா கம்பெனி அதிகாரியான இவர் உயரதிகாரிகளின் பாதுகாப்புக்காக முகலாயர் படையின் 50 குதிரைகள் மற்றும் சிர்தார் சமூகத்தை சேர்ந்த வீரர்களை கொண்ட படையை உருவாக்கினார்.
- ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பிறகு ஜிஜிபி, இரண்டாகப் பிரிந்து, பிரிசிடெண்ட் பாடிகார்ட் (பிபிஜி) என்ற பெயரில் இந்தியக் குடியரசு தலைவருக்கான சிறப்பு பாதுகாப்பு படையாக செயல்படுகிறது. மற்றொரு பிரிவு, பாகிஸ்தானுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.
- சரியான 6 அடி உயரத்தில் உள்ள நல்ல உடல்வாகு கொண்ட வீரர்கள் இப்படைக்கு தேர்வு செய்யப்படுகின்றனர்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- குதிரையில் அணிவகுக்கும் பிபிஜி வீரர்கள் கைகளில் வைத்திருக்கும் ஈட்டிகளின் மேல்முனையில் வெள்ளை மற்றும் சிவப்பு நிறம் கொண்ட கொடி இருக்கும்.
- இவற்றில் வெள்ளை நிறம் சமாதானத்தையும், சிவப்பு நிறம் வீரத்தையும் உணர்த்தும்.
- வீரர்கள் பெரும்பாலும் பஞ்சாப், ஹரியானா மற்றும் ராஜஸ்தானை சேர்ந்த ஜாட், ராஜ்புத் மற்றும் சீக்கிய ஜாட் பிரிவைச் சேர்ந்தவர்கள். மற்ற பிரிவைச் சேர்ந்தவர்களும் இப்படைக்கு தேர்வு செய்யப்படுகின்றனர்.

## GST

### ஜி.எஸ்.டியின் விகிதங்கள்

- பொருள்கள் மற்றும் சேவைகளின் தன்மை அடிப்படையில் 5%, 12%, 18%, 28% என நான்கு அடுக்குகளாக ஜி.எஸ்.டி வசூலிக்கப்படுகிறது.

### ஜி.எஸ்.டியின் 3 வகைகள்

- நாடு முழுவதும் 3 வகைகளில் ஜிஎஸ்டி வசூல் செய்யப்படுகிறது.

1. ஒன்றிய அரசின் ஜிஎஸ்டி (சிஜிஎஸ்டி)
2. மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்களின் ஜிஎஸ்டி (எஸ்ஜிஎஸ்டி, யூடிஜிஎஸ்டி)
3. ஒருங்கிணைந்த ஜி.எஸ்.டி (ஐஜிஎஸ்டி)

### டாக்ஸ்

- டாக்ஸ் (வரி) என்ற சொல், லத்தீன் சொல்லான டாக்ஸோ என்பதிலிருந்து வந்தது. இதன் பொருள், நான் மதிப்பிடுகிறேன் என்பதாகும்.
- நேரடி வரி என்பது குடிமக்களே அரசாங்கத்திற்கு செலுத்தக்கூடிய தொழில்வரி, வருமான வரி, சொத்துவரி உள்ளிட்டவை.
- மறைமுக வரி என்பது குடிமக்கள் நேரடியாக அரசாங்கத்துக்கு வரி செலுத்தாமல், மக்கள் வாங்கும் பொருள்களுக்கும், பெரும் சேவைகளுக்கும் வர்த்தகர்களால் மக்களிடம் வரிவசூல் செய்யப்பட்டு, அதை வர்த்தகர்கள் ஒன்றிய, மாநில அரசுகளிடம் செலுத்துவதாகும்.
- கலால் வரி, விற்பனை வரி, மதிப்புக்கூட்டு வரி போன்றவை மறைமுக வரிகளாக இருந்தன.
- ஒரே நாடு, ஒரே வரி என்று புதிதாக கொண்டு வந்த சீர்திருத்தம்தான் ஜிஎஸ்டி (சரக்கு மற்றும் சேவை வரி)

### அறிமுகம்

- ஜுலை 1, 2017 நள்ளிரவு தலைநகர் டெல்லியே பரபரப்பாக காணப்பட்டது.
- நள்ளிரவு 12 மணிக்கு மணியடித்து அமல்படுத்தப்பட்டது.

### வரி

- ஒரு பூவிலிருந்து வண்டு தேனை எடுக்கும்போது, பூவுக்கும் வலிக்காமல் வண்டும் கீழே விழுந்து விடாமல் எத்தனை லாவகத்துடன் தனக்குத் தேவையானதை மட்டும் எடுத்துக் கொள்ளுமோ அது போன்று, ஓர் அரசு மக்களிடம் வரி வசூல் செய்யும்போது நடந்து கொள்ள வேண்டும்.

### புதிய வரி

- பேக்கிங் செய்யப்படாத பிராண்ட் அல்லாத உணவு பொருட்களுக்கு இருந்த வரி விலக்கை திரும்பப் பெற ஜிஎஸ்டி கவுன்சில் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.
- காசோலை, அஞ்சலக சேவைகள், மருத்துவமனை அறை வாடகைக்கும் வரி விதிக்கப்பட்டுள்ளது.
- ரூ.1000க்கு கீழ் உள்ள ஓட்டல் அறை 12% வரி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.999க்கு அறை வாடகை எடுத்தால், ரூ.120 வரி செலுத்த வேண்டும்.
- அச்சிடுவது, எழுதுவது அல்லது வரைவதற்கு பயன்படுத்தப்படும் மைகள், கத்தி, பேப்பர் கத்தி, பென்சில் ஷார்ப்னர், முட்டைகளை சுத்தம் செய்வது வகைப்படுத்துவதற்கான இயந்திரங்கள், எல்இடி லைட்கள், பட்டிகள், மின்னணு சர்க்கியூட்கள், வரைவதற்கான கருவிகள் ஆகியவற்றுக்கான ஜிஎஸ்டி 12 சதவீதத்தில் இருந்து 18 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

- வங்கி காசோலைகளுக்கு வரி 18 சதவீதம் விதிக்கப்பட்டுள்ளது.
- லேபிளுடன் பேக்கிங் செய்யப்பட்ட கோதுமை மாவு, அப்பளம், பன்னீர், தயிர், மோர், தேன், இறைச்சி, உலர் காய்கறிகள், பொறி, தாமரை விதை, கோதுமை உள்ளிட்ட தானிய வகைகள் போன்றவற்றுக்கு வரிச்சலுகை ரத்து செய்யப்பட்டு, 5 சதவீத வரி விதிக்கப்பட்டுள்ளது.

## உலகிலேயே இந்தியாவில்தான் அதிகம்

- உலகில் உள்ள 140 நாடுகளில் இந்தியாவில்தான் ஜிஎஸ்டி வரி அதிகம் வசூலிக்கப்படுகிறது என்று புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.
- உலகிலேயே ஜிஎஸ்டி வரி முறையை அறிமுகப்படுத்திய முதல் நாடு பிரான்ஸ்தான். கடந்த 1954-ம் ஆண்டிலேயே பிரான்சில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது.
- அதிகப்படியான விற்பனை வரி, மோசடி மற்றும் கடத்தலை ஊக்குவிக்கும் கட்டணங்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அந்நாட்டில் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது.
- பிரான்ஸ் நாட்டில் 20% ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டுள்ளது.
- ஐரோப்பிய நாடுகளில் 1970 முதல் 80ம் ஆண்டுகளில் ஜிஎஸ்டி நடைமுறைக்கு வந்துள்ளது.
- பிரேசில் நாட்டில் 4 சதவீதம் முதல் 25 சதவிகிதம் வரை ஜிஎஸ்டி விதிக்கப்படுகிறது.
- பிரிட்டனில் 20 சதவிகிதமும், கனடா நாட்டில் 13 முதல் 15 சதவிகிதமும் ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படுகிறது.
- நியூசிலாந்து நாட்டில் கடந்த 1986ம் ஆண்டு 10 சதவிகித வரியுடன் ஜிஎஸ்டி அறிமுகப்படுத்தப்பட்டது. பின்னர், 1989ம் ஆண்டில் 12.5 சதவிகிதமாகவும் 2010 ஆம் ஆண்டில் 15 சதவிகிதமாகவும் இந்த வரி உயர்த்தப்பட்டது.
- சீனாவில் வணிக வரி முறையை மாற்ற வாட் வரி அமைப்பைக் கடந்த 2016ம் ஆண்டு சீனா கொண்டு வந்தது. வாட் வரி முறை மூலம் அந்நாட்டின் கட்டுமானத்துறை பாதிக்கப்பட்டது. சீனாவில், ஒரு சில பொருட்களுக்குப் பகுதி ஜிஎஸ்டியும் விதி க்கப்படுகிறது.
- ஆஸ்திரேலியாவில் கடந்த 2000ம் ஆண்டு ஜிஎஸ்டி 10 சதவீதத்துடன் அறிமுகப்படுத்தப்பட்டது. அதேவேளையில், உணவு கல்வி மற்றும் மருத்துவ சேவைகளுக்கு ஜீரோ வரி விதிக்கப்பட்டது.
- கடந்த 2015-ம் ஆண்டில் இருந்து மலேசியாவில் ஜிஎஸ்டி அறிமுகமாகியது. 6% ஜிஎஸ்டி வரி வசூலிக்கப்படுகிறது. சிங்கப்பூரில் 7 சதவிகிதமும் ஜிஎஸ்டி வரி விதிக்கப்பட்டுள்ளது.

## புதிய ஜி.எஸ்.டி. வரிவிதிப்பு

- 25 கிலோவுக்கு மேற்பட்ட எடைகொண்ட அரிசி, பருப்பு, மாவு, மூட்டைகளுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்கப்படுவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- ஜி.எஸ்.டி. கவுன்சிலின் 47-வது கூட்டம் நடந்தது. அதில் பாக்கெட்டில் அடைக்கப்பட்டு, லேபிள் ஒட்டி விற்கப்படும் அரிசி, கோதுமை உள்ளிட்ட தானியங்கள், பருப்பு, தயிர், லஸ்சி, பொரி, மாவு ஆகியவற்றுக்கு 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிப்பது
- பாக்கெட்டில் அடைக்கப்பட்ட வர்த்தக பெயர் (பிராண்டட்) கொண்ட உணவு பொருட்களுக்கு மட்டுமே. ஏற்கனவே 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்பட்டு இருந்தது.
- 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிப்பதற்காக, சட்டப்பூர்வ அளவில் சட்டத்தின் கீழ், உணவு பொருட்கள், பாக்கெட்டில் அடைக்கப்பட்ட, லேபிள் ஒட்டப்பட்ட பொருட்களாக கருதப்படுகின்றன.
- 25 கிலோ, 25 லிட்டர் அல்லது அதற்கு குறைவான எடையில் ஒரே பாக்கெட்டாக உள்ள அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், லஸ்சி, மாவு, பொரி பாக்கெட்டுகளுக்கு 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

### வரிவிலக்கு

- உற்பத்தியாளர் மற்றும் வினியோகஸ்தரிடம் இருந்து 25 கிலோ, 25 லிட்டர் பாக்கெட்டாக வாங்கும் சில்லரை வியாபாரி, அதை வாடிக்கையாளருக்கு உதிரியாக விற்றால், அந்த உதிரி விற்பனை மீது ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.
- 25 கிலோ, 25 லிட்டருக்கு மேல் எடை கொண்ட அரிசி, கோதுமை, பருப்பு, தயிர், லஸ்சி, பொரி, முட்டைகளுக்கு ஜி.எஸ்.டி.யில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- உதாரணமாக, 25 கிலோ கோதுமை மாவு மூட்டைக்கு 5 சதவீத ஜி.எஸ்.டி உண்டு. ஆனால் 30 கிலோ கோதுமை மாவு மூட்டைக்கு ஜி.எஸ்.டி கிடையாது.

**10 பாக்கெட்**

- தலா 10 கிலோ எடையில் 10 தானியங்களை பாக்கெட்டில் அடைத்து, 100 கிலோ எடையில் ஒரே மூட்டையாக போட்டு விற்பனை செய்தால், அதற்கு 5 சதவீத ஜி.எஸ்.டி. விதிக்கப்படுகிறது.

## அரிசிக்கு 5% ஜிஎஸ்டி

- நாட்டில் நடைமுறையில் இருந்த 17 வகையான வரிகளை ஒருங்கிணைத்து, கடந்த 2017, ஜூலையில் ஜிஎஸ்டி அமல் படுத்தப்பட்டது.
- அப்போது, வணிகப் பெயருடைய தானியங்கள், பருப்புகள், மாவு உள்ளிட்டவற்றுக்கு 5 சதவீத வரி விதிக்கப்பட்டது.
- இதில் மேற்கொள்ளப்பட்ட சில திருத்தங்களை, பிரபல உற்பத்தி நிறுவனங்கள் தவறாகப் பயன்படுத்தியதால், அரசுக்கு ஜிஎஸ்டி வருவாய் குறைந்தது.
- இதனை தடுக்கும் வகையில், பண்டல் செய்யப்பட்ட அனைத்து உணவுப் பொருள்களுக்கும் ஒரே சீராக ஜிஎஸ்டி.
- முன்கூட்டியே பண்டல் செய்யப்பட்ட மற்றும் லேபிள் ஒட்டப்பட்ட உணவு தானியங்களுக்கு 5 சதவீத ஜிஎஸ்டி விதிக்க ஒருமித்த முடிவு.
- அரிசி, கோதுமை, ஓட்ஸ், ரவை உள்ளிட்டவை பண்டல் செய்யப்படாமல் விற்கப்படும்போது, அவற்றுக்கு எந்த ஜிஎஸ்டி வரியும் கிடையாது.
- ஜிஎஸ்டி கவுன்சில் அனைத்து மாநிலங்களின் பிரதிநிதிகளையும் உள்ளடக்கியதாகும்.

## வின்ட்ஃபால் டேக்ஸ் - கொள்ளை லாப தடுப்பு வரி

- பெட்ரோல் மீது ரூ.6-உம், டீசல் மீது ரூ.13-உம் இந்திய அரசு ஏற்றுமதி வரி விதித்திருக்கிறது. அது மட்டுமல்லாமல், உள்நாட்டில் உற்பத்தியாகும் கச்சா எண்ணெய்யின் மீது டன் ஒன்றுக்கு ரூ.23,250 கூடுதல் வரி விதிக்கப்பட்டிருக்கிறது.
- ஒருபுறம் டாலருக்கு எதிரான ரூபாயின் மதிப்பு குறைந்து வருகிறது.

### புத்தாக்க இந்தியா

- பஞ்சாப், உத்தரகண்ட், உத்தர பிரதேசம், அந்தமான்-நிக்கோபர், அருணாச்சலப் பிரதேசம், கோவா ஆகிய மாநிலங்களுடன் தமிழகம் இடம்பெற்றுள்ளது.
- 'புத்தாக்க தொழில்களுக்கான சூழலில் சிறந்த முன்னேற்றம்' என்ற பிரிவில் நமது அண்டை மாநிலமான கேரளம் இடம்பெற்றுள்ளது.
- ஜம்மு-காஷ்மீர் யூனியன் பிரதேசமும் இடம்பெற்றிருப்பது, பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ள அந்த யூனியன் பிரதேசத்தில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை எடுத்துரைக்கிறது.
- 'ஸ்மார்ட்அப் இந்தியா' எனப்படும் 'புத்தாக்க இந்தியா' திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி, 2015, ஆகஸ்ட் 15 சுதந்திர தின உரையின் போது அறிவித்தார்.
- எண்மம், தொழில்நுட்பத்துறை முதல் விவசாயம், உற்பத்தி, சுகாதாரம், கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகள் வரை புத்தாக்க தொழில்முனைவோரை உருவாக்குவதுதான் இத்திட்டத்தின் முக்கிய நோக்கம்.
- 'புத்தாக்க தொழில்துறை புதிய இந்தியாவின் முதுகெலும்பு; நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு ஆற்றலை அளிக்கும் உந்துசக்தி'.
- இந்தியாவில் இப்போது 55 தொழில் துறைகளில் புத்தாக்க தொழில் முனைவோர் உருவாகியுள்ளனர். இதன் மூலம் லட்சக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறது.
- 'யுபிஐ' எனப்படும் ஒருங்கிணைந்த பணப்பரிமாற்ற அமைப்பின் வெற்றி, புத்தாக்க தொழில்துறையின் வெற்றியிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது.
- பிற எண்ணம் பணப்பரிமாற்ற முறைகளும் புத்தாக்க தொழிலுக்கு உதவுகின்றன.

- சர்வதேச கச்சா எண்ணெய் விலை அதிகரித்து வருகிறது.
- அதற்கு ஏற்றாற்போல உள்நாட்டு பெட்ரோல், டீசல், சில்லறை விற்பனை விலை அதிகரிக்கவில்லை. அதனால், ஏற்றுமதியில் கிடைக்கும் அதிக லாபத்தைக் கணக்கிட்டு, எண்ணெய் விற்பனை நிறுவனங்கள் ஏற்றுமதியில் கவனம் செலுத்தத் தொடங்கின.
- அதைக் கட்டுப்படுத்துவதற்குத்தான் நிதியமைச்சர் **கொள்ளை லாப தடுப்பு வரியை** அறிமுகப்படுத்தியிருக்கிறார்.
- எந்தவொரு தொழில் நிறுவனமும் நியாயமான லாபம் ஈட்டுவதை அரசு தடுக்கவில்லை. சந்தைப் பொருளாதாரத்தில் தனியார் நிறுவனங்களின் செயல்படுகளில் வியாபாரப் போட்டிதான் விலை நிறுவனங்களின் செயல்பாடுகளில் வியாபாரப் போட்டிதான் விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமே தவிர, அரசு அளவுக்கு மீறி தலையிட முடியாது.
- கொள்ளை லாபத்தில் பெட்ரோலும் டீசலும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு, உள்நாட்டில் மக்களுக்கு கிடைக்காமல் இருப்பதை அரசு வேடிக்கை பார்க்க முடியாது.
- அந்த லாபத்தில் ஒரு பகுதி இந்திய மக்களுக்கும் கிடைக்க வேண்டும்.
- அரசின் கொள்ளை லாப தடுப்பு வரியால் ஆண்டொன்றுக்கு சுமார் ரூ.65,000 கோடி கூடுதல் வரி வருவாய் கிடைக்கும்.
- கச்சா எண்ணெய் விலை பேரலுக்கு 40 டாலர் என்கிற அளவில் குறையும் போது கொள்ளை லாப தடுப்பு வரி திரும்பப் பெறப்படும்.

## அல்லூரி

- வனப்பகுதிக்குள் மறைந்திருந்து கொரில்லா தாக்குதல் முறையில் தாக்கி பெரும் சேதம் விளைவித்த அல்லூரியை நினைத்தாலே ஆங்கிலேய படைகள் மிரண்டன.
- ஜூலை 4-ஆம் தேதி சுதந்திரப் போராளி அல்லூரி சீதாராம ராஜுவின் 125-ஆவது பிறந்த ஆண்டு தொடங்கியுள்ளது.
- ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, ஒடிசா, கர்நாடகம் ஆகிய மாநிலங்களில் '**மான்யம் வீருடு**' என்று அழைக்கப்பட்டவர். அதன் பொருள், **வனத்தின் நாயகர்** என்பதாகும்.
- நடைமுறையிலிருந்து மதராஸ் 1882 வனச்சட்டத்தை எதிர்த்து, 1922 முதல் 1924 வரை '**ராம்பா கலகம்**' எனப்படும் போராட்டத்தை விசாகப்பட்டினம், கோதாவரி மாவட்டப் பகுதியில் முன்னெடுத்தவர்.
- 'வாழ்க்கை என்பது நீண்டதாக இருப்பதைவிட மிகப் பெரியதாக இருக்க வேண்டும்' என்பது டாக்டர் அம்பேத்கரின் புகழ்மிக்க பொன்மொழி.
- அல்லூரி சீதாராம ராஜுவின் தலைமையில் 'ராம்பா கலகம்' (1922-1924) வெடித்தது.
- மறைந்திருந்து தாக்கும் கொரில்லா போர்முறையில் வித்தகரான இவரது தலைமையில் வனவாசி மக்கள் ஆங்கிலேயப் படைகள் மீது தொடர்ந்து நடத்திய தாக்குதல்கள் அரசை நிலைகுலையச் செய்தன.
- தனது ஒவ்வொரு தாக்குதலின் போதும், அத்தாக்குதலில் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்களின் பட்டியலை தனது கையொப்பத்துடன் காவல் நிலையத்தில் விட்டுச் செல்வது அல்லூரியின் வழக்கம்.
- அல்லூரி நடத்திய தீவிரமான யுத்தம் ஆங்கிலேய அரசுக்கு கௌரவ பிரச்சனையாக மாறியது.
- கேரளத்திலிருந்து மலபார் சிறப்புப் படையை வரவழைத்த ஆங்கிலேய அரசு, அல்லூரியின் தொடர் யுத்தத்திற்கும் இவரது ஆதரவாளர்களின் கிளர்ச்சிக்கும் முற்றுப்புள்ளி இட்டது.
- இந்திய சுதந்திரத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவை பவளவிழாவாக நாம் கொண்டாடும் இத்தருணத்தில், இந்திய விடுதலைக்காகவும், இந்த நாட்டின் உருவாக்கத்துக்காகவும் போராடிய பழங்குடியின மக்களை நன்றியுடன் நினைவுகூர வேண்டும்.

## சுற்றுச்சூழல்

- சுற்றுச்சூழல் பாதுகாப்புச் சட்டம் 1986, காற்று மாசுபாடு தடை மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1986, தண்ணீர் மாசுபாடு தடை மற்றும் கட்டுப்பாட்டுச் சட்டம் 1974 ஆகிய மூன்று சட்டங்களில் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை நீர்த்துப்போகச் செய்யும் வகையில் திருத்தங்களைச் செய்ய மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.
- சுற்றுச்சூழல் சட்டங்களில் பிரிவுகளை முதன்முறையாக மீறுவதற்கு 5 ஆண்டுகள் வரையிலும் சிறைத்தண்டனை விதிக்கும் பிரிவுகளை நீக்கி, அதற்குப் பதிலாக ரூ.1 லட்சம் வரையிலுமான அபராதத்தை ரூ.5 லட்சம் வரையிலும் உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

- அதே சட்டமீறல் தொடரும்பட்சத்தில், இழப்புகளுக்கு ஏற்றபடி விதிக்கப்படும் அபராதத்தின் அளவும் உயர்த்தப்படும். சட்டத்தை மீறியவர் அபராதத்தைச் செலுத்தாவிட்டால் மட்டுமே அவருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்படும். தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டவர் அதற்கு எதிரான தேசியப் பசுமைத் தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யவும் வகைமுறைகளை உருவாக்க முடிவாகியுள்ளது.
- சுற்றுச்சூழல் சட்டங்களை மீறுவதற்கான தண்டனைகளை அபராதமாக மட்டுமே மாற்றுவதும் மேல்முறையீட்டுக்கான வாய்ப்புகளை கூடுதலாக உருவாக்குவதும் தண்டனைப் பிரிவுகளை மட்டுமின்றி, அச்சட்டங்களின் நோக்கத்தையும் நீர்த்துப்போகச் செய்யும்.
- சுற்றுச்சூழல் மாசுபாட்டை ஏற்படுத்துபவர்களே அதன் பாதிப்புகள் அனைத்தையும் முழுமையாகச் சரிசெய்ய வேண்டும் என்ற கடும்பொறுப்பு விதியை உச்சநீதிமன்றமும் உயர்நீதிமன்றங்களும் பின்பற்றி வருகின்றன. நீதிமன்றங்களால் உறுதிப்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கை ஒன்றைப் பலவீனப்படுத்தும் இந்தச் சட்டத்திருத்த யோசனையை மத்திய அரசு கண்டிப்பாக மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

## சுற்றுச்சூழல் அடிப்படை உரிமை

- ஜி7 கூட்டமைப்பின் மாநாடு ஜெர்மனி
- சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கு இந்தியா முக்கியத்துவம் அளித்து வருகிறது. சுற்றுச்சூழலைக் காப்பதற்கான இந்தியாவின் உறுதி, செயல்பாட்டிலேயே வெளிப்பட்டு வருகிறது.
- ஒட்டுமொத்த எரிசக்தி பயன்பாட்டில் மரபுசாரா எரிசக்தியின் பங்கு 40 விழுக்காடு இருக்க வேண்டும் என்ற இலக்கை இந்தியா ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பே எட்டியுள்ளது என்று பிரதமர் தம் பேச்சில் குறிப்பிட்டார்.
- ஆனால் உண்மை நிலை என்ன? அதிக மாசு கொண்ட நாடுகளின் பட்டியலில் இரண்டாது இடத்தில் இந்தியா உள்ளது.
- தில்லி, பீகார், உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட மாநிலங்களில் காற்று மாசு அதிகரித்து வருகிறது. காற்று மாசு அதிகரித்தால் மனிதர்களின் வாழ்நாள் குறையும். இனி தூய காற்றை விலை கொடுத்து வாங்க வேண்டிய காலம் வந்தாலும் வரலாம்.
- இந்திய மக்களின் ஆயுள் காலம் சராசரியாக ஐந்து ஆண்டுகள் குறையும். உலக மக்களின் சராசரி ஆயுள் காலம் 2.2 ஆண்டுகள் வரை குறையும்.
- அண்ணல் காந்தியடிகள், மக்களின் தேவையை இயற்கையால் பூர்த்தி செய்ய முடியும் என்பதை ஒவ்வொரு மனிதனும் நினைவில் கொள்ள வேண்டும். அப்போதுதான் மனிதர்கள் தங்களை அழிவில் இருந்து காத்துக்கொள்ள முடியும்.
- 72% மாசு பெட்ரோல், டீசல் வாகனங்களில் இருந்து வெளியேற்றப்படும் புகையால் ஏற்படுகிறது என்று மத்திய அரசின் **மாசு கட்டுப்பாட்டு வாரியம்** தெரிவித்துள்ளது.
- மின்வாகனங்களை அதிக அளவில் பயன்படுத்துகின்ற கட்டாயம் ஏற்படுத்தப்பட வேண்டும்.
- மக்களும் பொதுப் போக்குவரத்துக்கு மாற வேண்டும்.

**பிரிவு 21**

- இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 21 – இல் ஆரோக்கியமான சுற்றுச்சூழல் என்பது மனிதனின் அடிப்படை உயிர் வாழும் உரிமை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
- இதன் அடிப்படையில் சூழலியல் சீர்கேடு, நீர் மாசு, காற்று மாசு என்பது இந்திய அரசியலமைப்புச் சட்டம் 21–ஆம் பிரிவின்படி குற்றமாகும்.
- சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் 1986, காற்று மாசுபாடு தடை – கட்டுப்பாட்டு சட்டம் 1986, தண்ணீர் மாசுபாடு தடை – கட்டுப்பாட்டு சட்டம் 1974 ஆகிய மூன்று சட்டங்களில் விதிக்கப்பட்டுள்ள தண்டனைகளை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் திருத்தங்களை செய்ய மத்திய சுற்றுச்சூழல், வனம் – காலநிலை மாற்ற அமைச்சகம் முடிவெடுத்துள்ளது.
- சுற்றுச்சூழல் சட்ட விதிகளை முதன்முறையாக மீறுவோருக்கு ஐந்து ஆண்டு வரை சிறைத்தண்டனை விதிக்க வகைசெய்யும் பிரிவுகளை நீக்கி, அதற்குப் பதிலாக ரூ.1 லட்சம் வரை அபராதம் என்று இருந்ததை ஐந்து லட்சம் ரூபாய் வரை என உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- சட்டத்தை மீறியவர் அபராதத்தை செலுத்தாவிட்டால் மட்டுமே அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்படும்.

- குறைந்த தொலைவு பயணங்களுக்கு மிதிவண்டிகளைப் பயன்படுத்தலாம். காற்று மாசு அதிகமாக உள்ள நகரங்களிலாவது இதனை நடைமுறைப்படுத்த வேண்டும்.
- தொழிற்சாலைகளை அடிக்கடி அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். திடீரென காற்று மாசு அதிகரித்தால் அதற்கான காரணத்தைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.
- தூய காற்றுக்குக் காரணமான மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டியது அவசியம்.
- காற்று மாசுபாடு பற்றி பள்ளி, கல்லூரிகளில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.

## பிரபஞ்சத்தின் ஆரம்ப காலம்

- பிரபஞ்சத்தின் ஆரம்ப காலத்தைக் காட்டும் வகையில் ஜேம்ஸ் வெப் விண்வெளி தொலைநோக்கி எடுத்த ஒரு புகைப்படத்தை அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசா வெளியிட்டது.
- ஜேம்ஸ் வெப் எனப்படும் உலகிலேயே மிகப்பெரிய, சக்தி வாய்ந்த விண்வெளி தொலைநோக்கியை நாசா கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் விண்வெளியில் செலுத்தியது.
- இந்த விண்வெளி தொலைநோக்கி எடுத்த புகைப்படத்தை தான் நாசா வெளியிட்டுள்ளது.
- 1,380 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் பிக்பேங் எனப்படும் பெருவெடிப்பு மூலம் இந்த பிரபஞ்சம் உருவானதாக நம்பப்படுகிறது.
- பிரபஞ்சத்தில் நமது பூமி இடம்பெற்றுள்ள பால்வெளி மண்டலம் உள்ளிட்ட கோடிக்கணக்கான மண்டலங்கள் இடம்பெற்றுள்ளன.
- புகைப்படத்தின் முன்பகுதியில் மாபெரும் நட்சத்திர திரள்களும், பின்பகுதியில் தொலைதூரத்தில் உள்ள நட்சத்திர திரள்களும் பிரகாசமாக ஒளிர்கின்றன.
- பெருவெடிப்பு நிகழ்ந்த ஆரம்ப காலத்தைக் காட்டுவதாகும்.
- இந்த நட்சத்திர திரள் கூட்டத்துக்கு “SMACS 0723” எனப் பெயரிடப்பட்டுள்ளது.

## பிரபஞ்சப் புதையல்கள்

- அமெரிக்க விண்வெளி ஆய்வு நிறுவனமான நாசாவினுடைய ஆராய்ச்சிகளின் சிகரமாகக் கருதப்படுவது ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைநோக்கி (James Webb Space Telescope).
- இந்தத் தொலைநோக்கி, கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் நாளன்று விண்ணில் செலுத்தப்பட்டது.
- அதன்பின்பு, 15 லட்சம் கி.மீ விண்ணில் பயணித்து, நிலைபெற்றது.
- ஜேம்ஸ் வெப்பிடமிருந்து தற்போது ஐந்து ஒளிப்படங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன.
- பெருவெடிப்புக்குப் (big bang) பின்னர் உருளை முதல் விண்மீன்கள் புவியைப் போன்ற உயிர்வாழச் சாத்தியமுள்ள புறக்கோள்கள் உள்ளிட்டவற்றைப் பற்றிய கேள்விகளுக்கு இதன் மூலம் விடை காணத் தொடங்கலாம்.
- ஜேம்ஸ் வெப் செலுத்தப்படுவதற்கு முன்பாக, ஹப்பிள் (Hubble) விண்வெளித் தொலைநோக்கி முக்கியத்துவம் பெற்றிருந்தது.
- மிகக் குறுகிய நானோமீட்டரில் தொடங்கி பல கி.மீ.க்கு அகன்றது வரையிலான அலைநீளம் கொண்ட பல்வேறு ஒளி அலைநீளங்களில், கண்ணுறு ஒளியை (visible light) உள்வாங்கும் திறனைக் கொண்டது.
- விண்வெளி ஆய்வில் பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது ஹப்பிள். ஆனால், பிரபஞ்சத்தில் உள்ள விண்மீன்களையும், பல்வேறு கூறுகளையும் அறிந்து கொள்ள வேண்டுமென்றால், கண்ணுறு ஒளியை மட்டும் படம்பிடித்தால் போதாது.

### தொலைநோக்கியின் தேவைகள்

- விண்பொருள்கள் கண்ணுறு ஒளியை மட்டும் வெளியிடுவதில்லை. அவை அகச்சிவப்புக் கதிர்களாக (intrared rays) வெப்பத்தை வெளியிடும்.
- பெருவெடிப்புக்குப் பின் உருவான முதல் விண்மீன்கள், கோள்கள் பூமியில் இருந்து வெகு தொலைவில் உள்ளன. அவற்றை ஆராய வேண்டுமென்றால் அதிக அலைநீளம் கொண்ட அகச்சிவப்புக் கதிர்கள் தேவை.

- ஒரு கோளிலிருந்து வெளிவரும் மொத்த அகச்சிவப்புக் கதிர்களில், நீர் மூலக்கூறுக்குப் பிடித்த அலைநீளத்தில் எதுவும் கிடைக்கவில்லை என்றால், அந்தக் கோளில் நீர் இருக்கிறது என்று அர்த்தம்.
- ஒரு கோளில் நீர் இருந்ததா, அதன் மூலம் வேறு உயிர்கள் அங்கே இருந்துள்ளனவா என்பதை அறிந்து கொள்ள அகச்சிவப்புக் கதிர்களைப் படம்பிடிக்கும் வகையில் ஜேம்ஸ்வெப் தொலைநோக்கி வடிவமைக்கப்பட்டது.

**ஒளிப்படங்கள் ஐந்து**

- படம் 1 – SMACS 0723 : ஜேம்ஸ் வெப் எடுத்திருக்கும் பிரபஞ்சத்தின் முதல் ஆழ்புல உருப்படம் (deep-field image) இது. தொலைதூரப் பிரபஞ்சத்தைப் படம்பிடித்ததிலேயே இந்தப் படம்தான் மிகவும் துல்லியமானது, ஆழமானது.
- இதன் மூலம் பெருவெடிப்பு நிகழ்ந்த புள்ளிக்கு வெகு அருகில் சென்று பார்க்க முடிந்துள்ளது என்று அர்த்தம்.
- படம் 2 – WASP- 96b : ஜேம்ஸ் வெப் அகச்சிவப்புக் கதிர்களை உள்வாங்கும் திறன் கொண்ட தொலைநோக்கி என்பதால், அடிப்படையில் நமக்குக் கிடைப்பது ஒரு நிறமாலை(spectrum). அதன்படி 1,150 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள சூரியன் போன்ற ஒரு விண்மீனைச் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு புறக்கோளில், நீர் மூலக்கூறுகள் இருப்பதற்கான தரவுகள் கிடைத்துள்ளன.
- படம் 3 – தென்வளையப் புகையுரு (Southerning nebula) : இந்தப் புகையுருவின் நடுவே இறந்து கொண்டிருக்கும் இரண்டு விண்மீன்களைக் காண முடியும். இரண்டில் ஒளி மங்கியதாக இருக்கும் விண்மீன் இறந்து, வெண் குறுமின் (White dwarf) நிலைக்குச் சென்று விட்டது. அதைச் சுற்றியிருக்கும் தூசுப்படலத்தை ஜேம்ஸ் வெப் முதன்முதலாக கண்டறிந்துள்ளது.
- படம் 4 – ஸ்டீபனின் ஐந்து விண்மீன் கூட்டங்கள் (Stephen's quintel) : பிரபஞ்சத்தில் ஐந்து விண்மீன் கூட்டங்கள் ஒரு தொகுதியாக இருப்பதாக எட்வர்ட் ஸ்டீபன் (1877) என்னும் ஆய்வாளர் கண்டறிந்திருந்தார்.
- 29 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கும் இவற்றில், இரண்டு விண்மீன் கூட்டங்கள் ஒன்றோடொன்று இணையவுள்ளன.
- மற்றொரு விண்மீன் கூட்டத்தில் விண்மீன்கள் உருவாகிக் கொண்டுள்ளன. இத்தகைய அம்சங்களால் இந்தத் தொகுதி சிறப்புப் பெற்றதாகி ஜேம்ஸ் வெப்பால் கண்காணிக்கப்பட்டுள்ளது.
- படம் 5 – கரினா புகையுரு (Carina nebula) : மலையும் மேடும் போலத் தெரியும் இந்தப் புகையுருவில் விண்மீன்கள் உருவாகிக் கொண்டுள்ளன. கிட்டத்தட்ட 8000 ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள இந்தப் புகையுருவில், ஒளிரும் ஒவ்வொரு புள்ளியும் ஒரு விண்மீன் என்பது வியப்பில் ஆழ்த்துகிறது.

**முடிவுகள்**

- பிரபஞ்சத்தைத் தினம் தினம் படம் பிடித்து மேலும் பல ரகசியங்களை ஜேம்ஸ் வெப் வெளிக்கொணர இருக்கிறது. வானியலின் அற்புதங்களை அறிவியலால் உய்த்துணர்வதற்குக் காலம் கனிந்திருக்கிறது.

## சர்வதேச விண்வெளி நிலையம்

- சர்வதேச விண்வெளி நிலையத்தில் ஆய்வுகள் மேற்கொள்வதற்காக ரஷியாயுடன் தொடர்ந்து இணைந்து செயல்படப் போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.
- ரஷிய விண்வெளி வீரர்களுடன் இணைந்து நாசா விண்வெளி வீரர்கள் தொடர்ந்து ஆய்வுப் பணிகளை மேற்கொள்வார்கள்.
- ரஷியாவின் சோயுஸ் விண்கலம் மற்றும் ராக்கெட்டைப் பயன்படுத்தி சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வீரர்களை அனுப்பும் பணிகளை நாசா மீண்டும் தொடங்கவுள்ளது.
- அமெரிக்காவின் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் உருவாக்கியுள்ள ராக்கெட் மூலம் ஃபுளோரிடாவிலிருந்து 2 நாசா வீரர்கள் வரும் செப்டம்பர் மாதம் விண்வெளிக்கு செல்லவுள்ளனர். அவர்களுடன் 2 ரஷிய விண்வெளி வீரர்களும் ஜப்பான் விண்வெளி வீரர் ஒருவரும் செல்கின்றனர்.
- ஸ்பேஸ் எக்ஸ் ராக்கெட் மூலம் ரஷிய வீரர்கள் விண்வெளிக்குச் செல்வது இதுவே முதல் முறையாகும்.
- சர்வதேச விண்வெளி நிலையம் என்பது ஒரு சார்பு இல்லாத ஆய்வு மையமாகும். அந்த நிலையம் எப்போதுமே அமெரிக்கா, ரஷியா, ஐரோப்பா, கனடா, ஜப்பான் ஆகிய நாடுகளின் கூட்டு முயற்சியில் செயல்படும் வகையிலேயே வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இரு நாடுகளின் பங்களிப்புடன் சர்வதேச விண்வெளி நிலையம் கடந்த 1998–ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

## தொலைதூர கிரகத்தில் தண்ணீருக்கான அறிகுறி

- பால்வெளி மண்டலத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறுகிரகங்கள் சுற்றி வருகின்றன. இவை 1,150 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளன.
- சூரியனைப் போன்ற நட்சத்திரத்தை சுற்றி வரும் இந்த கிரகங்களில், வாஸ்ப்-96 பி என்ற கிரகமும் ஒன்று. இதில், தண்ணீர் இருப்பதற்கான அறிகுறிகள் இருப்பதை ஜேம்ஸ் வெப் தொலைநோக்கி கண்டறிந்துள்ளது என நாசா தெரிவித்தது.
- வியாழனை விட பாதிக்கும் குறைவாகவும், விட்டத்தில் 1.2 மடங்கு பெரியதாகவும் உள்ள வாஸ்ப்-96 பி கிரகம், சூரியனைச் சுற்றி வரும் மற்ற கோள்களை விட மிகவும் பிரகாசத்துடன் ஒளிர்கிறது. இது, 538 டிகிரி செல்சியசுக்கும் அதிகமான வெப்பநிலையுடன் உள்ளது என்று நாசா கூறியுள்ளது.
- ஜேம்ஸ் வெப் தொலைநோக்கியின் குறுகிய கால கண்டுபிடிப்புகள், பூமிக்கு அப்பால் மனிதன் வாழக்கூடிய கிரகங்களை கண்டறியும் விஞ்ஞானிகளின் தேடலில் ஒரு மைல் கல்லாக அமையும்.

## அபீலியன் நிகழ்வு

- சூரியனுக்கும் பூமிக்கும் இடையே உள்ள தொலைவு 9 கோடி கி.மீ. ஆனால், இந்த அபீலியன் நிகழ்வுக் காலத்தில் இரண்டுக்கும் இடையிலான தூரம் 15 கோடி கி.மீ. ஆக அதிகரிக்கும். அதாவது, 66% தூரம் அதிகரிக்கும்.
- சூரியனைச் சுற்றிவரும் பூமியின் பாதை கோழிமுட்டையின் வடிவத்தைப் போன்று நீள்வட்டமாக உள்ளது. எனவே, குறிப்பிட்ட காலம் சூரியனுக்குச் சற்று அருகே பூமி இருக்கும். அது பெரிஹீலியன் (perihelion) நிலை ஆண்டுதோறும் டிசம்பர் 3-ம் தேதி வாக்கில் இது நிகழும்.
- அதேபோல நீள்வட்டத்தின் எல்லைக்குச் செல்லும்போது சற்று அதிக தொலைவில் இருக்கும் நிலை அபீலியன் (aphelion). இது ஜுலை 4-5 தேதிகளில் நிகழும்.
- சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான சராசரித் தொலைவு 15.21 கோடி கி.மீ.
- குறுகிய இடைவெளியான பெரிஹீலியன் நிலையில் 14.71 கோடி கி.மீ.
- சுற்றுப்பாதையின் அதிகபட்ச, குறைந்தபட்சத் தொலைவுக்கு இடையிலான வேறுபாடு, சராசரித் தொலைவைவிட வெறும் 1.7 சதவீதம் மட்டுமே குறைவு. தொலைவு வேறுபாடு 66% ஆக மாறிவிடும் என்று கூறப்படுவது முழுப் பொய்.
- பூமியின் அச்சு சுமார் 23.5 டிகிரி சாய்வாக உள்ளது. எனவே, சூரியனின் கதிர்கள் டிசம்பர் மாதத்தில் வட அரைக்கோளத்தில் சாய்ந்து விழும்போது, தென் அரைக்கோளத்தில் செங்குத்தாக விழும். இதன் காரணமாகவே தென் அரைக்கோளத்தில் கோடை வட அரைக்கோளத்தில் குளிர்.
- ஜுலை மாதத்தில் வட அரைக்கோளத்தில் செங்குத்தாகத் தலைக்கு மேலே சூரியனின் கதிர்கள் விழும். அந்தச் சமயத்தில் தென் அரைக்கோளத்தில் சூரியக் கதிர்கள் சாய்வாக விழும். எனவே, வட அரைக்கோளத்தில் கோடை, தென் அரைக்கோளத்தில் குளிர்காலம்.
- பூமியின் பருவ காலத்துக்கும் பூமிக்கும் சூரியனுக்கும் இடையிலான தொலைவுக்கும் நேரடித் தொடர்பு இல்லை.

SURESH'

## சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டு திட்டம்

- தில்லியில் நாடாளுமன்றத்துக்கு புதிய முக்கோண வடிவ கட்டடம், பிரதமர் மற்றும் குடியரசுத் துணைத் தலைவருக்கு இல்லங்கள்
- ஒருங்கிணைந்த மத்திய தலைமைச் செயலகம்
- குடியரசுத் தலைவர் மாளிகை முதல் இந்தியா கேட் வரையிலான 3 கி.மீ தூர ராஜபாதையை மறுசீரமைப்பது ஆகிய பணிகளை உள்ளடக்கிய சென்ட்ரல் விஸ்டா மறுமேம்பாட்டு திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

## புதிய நாடாளுமன்ற கட்டிடம்

- மொத்தம் 64,500 சதுர மீட்டர் பரப்பளவில், 4 மாடிகளுடன் முக்கோண வடிவில் புதிய நாடாளுமன்றம் கட்டப்படுகிறது.
- பிரதமர் இல்லம், குடியரசு துணைத்தலைவர் இல்லம், மத்திய செயலகம், மத்திய கருத்தரங்கு மையம், தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலகம், 51 அமைச்சகங்களின் அலுவலகங்களும் நாடாளுமன்ற வளாகத்தில் கட்டப்படுகின்றன.
- நாடாளுமன்ற கட்டுமான பணியை **டாடா நிறுவனமும்**, நாடாளுமன்ற வளாக கட்டுமானப் பணியை **பூர்ஜி பலோன்ஜி** குழுமமும் மேற்கொள்கிறது.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

**தேசிய சின்னங்கள்**

- இந்தியாவின் தேசிய சின்னமான நான்முகச் சிங்கம், புதிய நாடாளுமன்றத்தின் மேற்பரப்பில் நிறுவப்பட்டுள்ளது. 6.5 மீட்டர் உயரம், 9,500 கிலோ எடையில் வெண்கலத்தில் உருவாக்கப்பட்டது.

**மிஷன் வாத்சல்யா**

- கைவிடப்படும் குழந்தைகளை மீட்டு உரிய பாதுகாப்பை வழங்கும் ‘மிஷன் வாத்சல்யா’ திட்டம்.
- குழந்தைகள் நலன், பாதுகாப்புக்காக 2009-10 ஆம் ஆண்டு முதல், மத்திய நிதியுதவி திட்டமான ‘மிஷன் வாத்சல்யா’ என்ற குழந்தைகள் பாதுகாப்பு சேவைகள் திட்டத்தை மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செயல்படுத்தி வருகிறது.
- நாட்டின் பல பகுதிகளில் இக்கட்டான நிலையில் உள்ள குழந்தைகளை, குறிப்பாக கைவிடப்பட்ட அல்லது கடத்தலுக்கு உள்ளாகக்கூடிய குழந்தைகள், தற்காலிக தங்குமிட வசதிகள் இல்லாதவர்கள் போன்றோருக்கு தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்களை நிறுவுவது இத்திட்டத்தின் முக்கிய அம்சமாகும்.
- 24 மணி நேரமும் தொலைபேசி தொடர்புகள் (ஹெல்ப்லைன்) செயல்படுத்துதல்
- கைவிடப்பட்டவர்களுக்காக தொட்டில் குழந்தை வரவேற்பு மையங்களை நிறுவுதல்
- கடினமான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளுக்கான குடும்ப அடிப்படையிலான நிறுவனம் சாராத பராமரிப்பு அமைப்புகள்
- இல்லங்களை ஊக்குவித்தல்
- காணாமல் போனவர்கள், அனாதைகள், கைவிடப்பட்டவர்கள் உள்பட இக்கட்டான சூழ்நிலைகளில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு ஒருங்கிணைந்த மின்னணு தள வசதிகள் உருவாக்கப்பட்டுள்ளன.
- இந்த மையங்களின் முதன்மை நோக்கம் கைவிடப்பட்ட குழந்தைகளை மீட்டு, அவர்கள் தத்தெடுக்கும் வரை அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்குவதாகும்.
- ஒரு குழந்தைக்கு மாதாந்திர மானியமாக ரூ.4,000 உதவித்தொகை மாநில அரசுக்கு வழங்கப்படுகிறது.

SURESH'

## தேசிய கல்விக்கொள்கை

- புதிய கல்விக் கொள்கை, தாய்மொழி கல்விக்கு வழிவகுக்கிறது. சமஸ்கிருதம் உள்ளிட்ட தொன்மை வாய்ந்த மொழிகளின் வளர்ச்சியை முன்னெடுத்து செல்லும். வெகு விரைவில் உலகின் கல்வி மையமாக இந்தியா உருவெடுக்கும்.
- இந்திய உயர் கல்வியை சர்வதேச தரத்துக்கு இணையாக உயர்த்த வேண்டும். நாடு முழுவதும் 180 பல்கலைக் கழகங்களில் வெளிநாட்டு மாணவர்களை சேர்க்க சிறப்பு அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளன.
- தேசிய கல்விக் கொள்கையை அமல்படுத்துவது தொடர்பான 3 நாள் மாநாடு, வாரணாசியில் தொடங்கியது.
- ஆங்கிலேயர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் தங்களுக்கான வேலைகளை செய்யும் பணியாளர்களை உருவாக்கும் வகையில் இந்தியாவில் ஒரு கல்வி முறையை அறிமுகப்படுத்தினர்.
- இந்திய மொழிகளில் கல்வி கற்பதற்கான வாய்ப்புகளை தேசிய கல்விக் கொள்கை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## பாரத் ஆல்ட் ப்யூல் - மின் வாகன தயாரிப்பு

- பாரத் ஆல்ட் ப்யூல் நிறுவனம் இருசக்கர மின் வாகன தயாரிப்புக்காக கிருஷ்ணகிரியில் ரூ.250 கோடி முதலீட்டில் ஆலை அமைக்க உள்ளது.
- மின் வாகனங்களுக்கு தேவையான பேட்டரிகளும் மோட்டார்களும் இந்த ஆலையில் தயாரிக்கப்பட உள்ளது.
- இந்த ஆலை மூலம் 3000 பேர் வேலைவாய்ப்புப் பெறுவார்கள் என்றும் இந்நிறுவனம் தெரிவித்துள்ளது.
- இந்நிறுவனத்தின் இருசக்கர மின்வாகனத்தின் விலை ரூ.85,000 முதல் ரூ.1 லட்சம் வரையில் இருக்கும்.
- பாரத் ஆல்ட் ப்யூல் நிறுவனம் 2020-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. மும்பையை தலைமையிடமாகக் கொண்ட இந்நிறுவனம் சோலர், மின்வாகனம் என மாற்று எரிசக்தி துறையில் கவனம் செலுத்தி வருகிறது.

## மோரே

- மணிப்பூர் மாநிலத்தில் மியான்மர் நாட்டு எல்லையையொட்டிக் கிடக்கும் **'குட்டி தமிழகம்'**தான் **மோரே**.
- 1962 – ல் ராணுவ தளபதி 'நீ வின்'னின் சர்வாதிகார ஆட்சியில் அது உச்சம் பெற்றது. அந்த சூடு தாளாமல் இந்தியர்கள் தாயகம் திரும்பத் தொடங்கினர்.
- பல லட்சம் தமிழர்களும் தமது பூர்வீக தமிழகம் நோக்கி புறப்பட்டனர். கோடீஸ்வரர்களாக திகழ்ந்தவர்கள் ஒரே நாளில் ஏதும ற்றவர்களாகி, பல்லாயிரம் கி.மீ. தூரம் நடந்தே வந்த சோக சரித்திரம் அது.
- பர்மாவில் வட்டித்தொழில் அதிபர்களாக விளங்கிய தமிழகத்தை சேர்ந்த ஒரு சமூகத்தினருக்கு ஏற்பட்ட இழப்பு மட்டும் இன்றைய மதிப்பில் ஒரு லட்சம் கோடி ரூபாய் இருக்கும்.
- மணிப்பூர் மாநிலத்தின் தெங்நவுபெல் மாவட்டத்தில் இருந்தாலும், பர்மாவை தொட்டுக் கொண்டிருந்தாலும், அந்நாட்டு சூழலே நிலவியதாலும் தமிழர்களுக்கு மேரே ஆறுதல் அளித்தது.
- குறுக்கே ஓடும் **'மேனால்'** ஆற்றைத் தாண்டினால் மியான்மரின் 'தமு'வை அடைந்துவிடலாம் என்பதால் மோரேயில் எல்லை தாண்டிய வர்த்தகமும், அதில் தமிழர்களின் பங்கும் பிரதானம்.
- 1992-ம் ஆண்டு வாக்கில், மோரே தமிழ் வர்த்தகர்கள் வசதியாக வாழ்வதாக கருதி அவர்களுக்கு பூர்வீக குக்கி பயங்கரவாதி கள் **'சூப்பர் டாக்ஸ்'** விதித்தார்கள்.
- எல்லை தாண்டி அந்தப்புறம் குவிந்த, தரமும், விலையும் மலிவான சீனப் பொருட்களால் இங்கிருந்து சென்ற இந்திய சரக்குகளுக்கு கிராக்கி குறைந்தது.
- மோரேவாசிகள் வியாபார காரணங்களுக்காக மியான்மர் எல்லைப்பகுதிக்குள் செல்ல அந்நாட்டு அரசின் அனுமதி உண்டு. காலை 7 மணிக்குப்பிறகு நுழைந்து மாலை 4 மணிக்குள் திரும்பி விட வேண்டும் என்ற நிபந்தனையுடன், எல்லை தாண்டி காலடி வைக்கும் தமிழர்களை இப்போது கடத்தல்காரர்களாகவும், உளவாளிகளாகவும் கருதி கண்காணிக்கிறது.
- மிரட்டுகிறது மியான்மர் ராணுவம். அப்படித்தான் அய்யனார், மோகன் ஆகிய 2 தமிழ் இளைஞர்களும் அந்நாட்டு ராணுவத்தி னால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

## மக்கள் தொகைப் பெருக்கம்

- உலக அளவில் மக்கள் தொகையில் முதலிடத்தில் இருக்கும் சீனாவின் மக்கள் தொகை 141 கோடி.
- இரண்டாவது இடத்தில் உள்ள இந்தியாவின் மக்கள் தொகை 134 கோடி.
- 2030 – ஆம் ஆண்டு 150 கோடி மக்கள் இந்தியாவில் இருப்பார்கள் என்றும்,
- 2050 – ஆம் ஆண்டு வாக்கில் அது 166 கோடியாக உயரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- 2030 – ஆம் ஆண்டிற்கு பின், சீனாவில் மக்கள்தொகை மெல்ல மெல்லக் குறைந்து, இந்தியா முதலிடத்தில் இருக்கும் எனவும் கூறப்பட்டுள்ளது.
- 18 – ஆம் நூற்றாண்டின் புகழ்பெற்ற பொருளாதார நிபுணரான **டி.ஆர்.மால்தஸ்** 'அதிகரித்து வரும் மக்கள்தொகைப் பெருக்கத்தினால் வருங்காலத்தில் மக்கள் உணவின்றி அவதிப்படுவர்' என்று கூறினர்.
- அன்று அவரால் வெளியிடப்பட்ட கருத்து, உணவுப் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ள இலங்கை உட்பட, உலக நாடுகள் பலவற்றால் உண்மை என இன்று உணரப்பட்டுள்ளது.
- 2018- ஆம் ஆண்டில் உலக மக்கள் தொகை தினம் முதல் முறையாக, 'குடும்பக் கட்டுப்பாடு மனித உரிமை' என்கிற முழக்கத்தை வழங்கியதால், இன்று பெண்கள் குறுகிய இடைவெளியில் கர்ப்பமாவதை மறுக்கும் உரிமையை பெற்றுள்ளனர்.
- 2021-ன் மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, இந்தியாவின் உத்தேச மக்கள்தொகை சுமார் 121 கோடி. இதில் ஆண்கள் சுமார் 62 கோடி. பெண்கள் சுமார் 59 கோடி. தமிழக மக்கள்தொகை விரைவில் எட்டு கோடியைத் தாண்டும் என்று எதி ர்பார்க்கப்படுகிறது.
- தமிழ்நாட்டின் உத்தேச மக்கள்தொகை 7 கோடியே 21 லட்சத்து 38 ஆயிரத்து 958 பேர். இதில் 3 கோடியே 61 லட்சத்து 58 ஆயிரத்து 871 ஆண்களும், 3 கோடியே 59 லட்சத்து 80 ஆயிரத்து 87 பெண்களும் அடக்கம்.
- ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகள் எண்ணிக்கை குறைவு.
- இந்திய மக்கள் தொகையில் 5.96% தமிழக மக்கள் தொகை.
- இந்தியாவில் மக்கள் தொகை அதிகம் உள்ள மாநிலங்களின் பட்டியலில் தமிழகம் **ஏழாவது** இடத்தில் உள்ளது.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- கடந்த 10 ஆண்டுகளில் தமிழ்நாட்டின் மக்கள் தொகை 15.6% அதிகரித்துள்ளது.
- 2011 இல் 8.6 விழுக்காடாக இருந்த இந்தியாவின் முதியோர்களின் (60 அல்லது அதற்கு மேற்பட்ட வயதுடையோர்) எண்ணிக்கை 2041-இல் இரட்டிப்படையும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- கருவுறுதல் விகிதத்தில் தில்லி, ஜம்முகாஷ்மீரில் கடுமையான வீழ்ச்சி ஏற்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மற்றும் கேரளத்தில் பெரிய அளவில் மாற்றமில்லை.
- நாள்தோறும் குழந்தையை பிரசவிக்கும் பெண்களில் 800 பேர் இறக்கிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- மக்கள் தொகை பிரச்சனை என்பது குடும்பக் கட்டுப்பாடு, மனித உரிமைகள், சுகாதார உரிமை, குழந்தைகளின் உடல்நலம், பாலின சமத்துவம், குழந்தைத் திருமணம், கருத்தடைப் பயன்பாடு, பாலியல் கல்வி, பாலியல் நோய்ப் பற்றிய அறிவு ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.
- பாலுறவு தொடர்பான பிரச்சனைகள் 15 வயது முதல் 19 வயது வரையிலான பெண்களிடையே கூர்ந்து கவனிக்கப்பட வேண்டும். ஏனெனில் உலகில் 150 லட்சம் பிரசவங்கள் இந்த வயதுள்ள பெண்களிடத்தில்தான் நடைபெறுகின்றன.
- மக்கள்தொகைப் பெருக்கத்தினால் உணவு, நீர், சுற்றுச்சூழல் மாசடைதல், சமூக சீர்கேடுகள், குற்றச்செயல்கள் பெருகுதல், சுகாதாரப் பிரச்சனைகள், வேலையின்மை, போக்குவரத்து நெரிசல், இடப் பற்றாக்குறை, பொருளாதார நெருக்கடி போன்ற பல்வேறு பிரச்சனைகள் ஏற்படுகின்றன.
- மக்கள் தொகை அதிகரிப்பினால் ஏற்படும் பிரச்சனைகள், குடும்ப நலத் திட்டமிடல், பாதுகாப்பான கருத்தடை முறைகள் ஆகியவை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.
- ஊடகங்களும் அதற்கு துணைபுரிந்தால் சிறப்பான பலன் கிட்டும்.
- பள்ளிகளில் மக்கள் தொகை குறித்த கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள்தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூக, பொருளாதார தாக்கங்கள் பற்றியக் கருத்தரங்களுக்கும் ஏற்பாடு செய்ய வேண்டும்.

## நிலைத்த வளர்ச்சி இலக்குகள் தற்போதைய நிலை

### நோக்கம்

- ஐ.நா.வின் நிலைத்த வளர்ச்சி இலக்குகள் என்பவை (Sustainable Development Goals-SDGS) வறுமையையும் பசியையும் ஒழிப்பது, சுகாதாரத்தையும் கல்வியையும் மேம்படுத்துவது, குடிநீர் போன்ற அடிப்படை சேவைகளை வழங்குவது உள்ளிட்ட 169 குறிக்கோள்களைக் கொண்டவை.
- இந்த 17 நிலைத்த இலக்குகளை 2030-க்குள் எட்ட வேண்டும் என்று இந்தியா உள்ளிட்ட 200 நாடுகள் 2015 செப்டம்பரில் உறுதியேற்றன.
- இதன் மூலம், அடுத்த 15 ஆண்டுகளில் மேற்கொள்ளப்படும் வளர்ச்சி நடவடிக்கைகளால், மக்களுக்கும் பூமிக்கும் அர்த்தமுள்ள முன்னேற்றத்தை வழங்குவது என்று முடிவு செய்யப்பட்டது.
- நிலைத்த வளர்ச்சி இலக்குகள் குறித்த ஐ.நா.வின் ஆண்டு அறிக்கை, அந்த இலக்குகளை நோக்கிய முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்கும், 2030-க்குள் இலக்குகளை அடைய நாடுகள் என்னவெல்லாம் செய்ய வேண்டும் என்பதை உணர்த்துவதையும் நோக்கமாக கொண்டது.
- கரோனா பெருந்தொற்றுப் பரவல், காலநிலை நெருக்கடி, ரஷ்யா-உக்ரைன் போர் உள்ளிட்ட அதிகரித்து வரும் மோதல்கள் போன்ற காரணங்களால் 2030-ஆம் ஆண்டுக்குள் எட்டப்பட வேண்டிய நிலைத்த வளர்ச்சி இலக்குகள் ஆபத்தில் உள்ளன என அந்த அறிக்கை எச்சரிக்கிறது.
- பெருந்தொற்று காரணமாக வறுமையை ஒழிப்பதில் நான்கு ஆண்டுகளுக்கு எட்டப்பட்ட முன்னேற்றத்தை இழந்திருக்கிறோம்.
- உக்ரைன் போர், நவீனக் காலத்தின் மிகப்பெரிய அகதிகள் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

### கவலையளிக்கும் அம்சங்கள்

### நிலைத்த வளர்ச்சி இலக்குகள் அறிக்கையின் முக்கிய அம்சங்கள்:

- உலகளவில் 10 பேரில் ஒருவர் பசியால் வாடுகிறார். ஏறக்குறைய மூன்றில் ஒருவருக்குப் போதிய உணவு கிடைப்பதில்லை.
- தடுப்பூசி மூலம் கிடைத்துவந்த பாதுகாப்பு 10 ஆண்டுகளில் முதல் முறையாக குறைந்துள்ளது. காசநோய், மலேரியாவால் இறப்புகள் அதிகரித்துள்ளன.

- 2020இல் பதற்றம், மனச்சோர்வு சார்ந்த உலகளாவிய பாதிப்பு 25 சதவீதம் அதிகரித்துள்ளது. இளைஞர்களும் பெண்களும் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்.
- 2021 - இல், 1 கோடியே 70 லட்சம் மெட்ரிக் டன் நெகிழி பெருங்கடல்களில் கொட்டப்பட்டுள்ளது. இந்த மாசுபாட்டின் அளவு 2040இல் 2 அல்லது 3 மடங்காக உயர்ந்து விடும்.
- ஆரம்பப் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை சுமார் 2 கோடியே 40 இலட்சம் மாணவர்கள் பள்ளி, கல்லூரிக்குத் திரும்ப வர இயலாத நிலையில் உள்ளனர்.
- 2019இல் பெருந்தொற்றுக்கு முன்னர், மொத்த வேலைவாய்ப்பில் 39% பெண்கள் இருந்தனர். ஆனால், 2020-இல் உலகளவில் வேலை இழப்புக்கு உள்ளானவர்களில் 45 சதவீதம் பேர் பெண்கள்.
- உக்ரைன் போர், தொற்றுநோயின் புதிய அலைகள் போன்றவை காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய பொருளாதார வளர்ச்சி 0.9 சதவீதம் குறைந்துள்ளது.

**வளர்ச்சி கண்ட அம்சங்கள்**

- உலக மக்கள் தொகையில் 91 சதவீதம் பேர் மின்வசதியைப் பெற்றுள்ளனர். 2010 இல் 120 கோடிப் பேர் மின்வசதி இல்லாமல் இருந்தனர். அதே நேரம், 2020இல் 73 கோடியே 30 லட்சம் பேர் மட்டுமே மின்வசதி இல்லாமல் உள்ளனர்.
- பாதுகாப்பான குடிநீர் வசதியைப் பயன்படுத்தும் உலக மக்கள் தொகையின் விகிதம் 2015-இல் 70 சதவீதமாக இருந்தது. அது 2020 இல் 74 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- அதே காலகட்டத்தில், திறந்தவெளியில் மலம் கழிக்கும் மக்கள் தொகை குறைந்துள்ளது. திறந்தவெளியில் மலம் கழிப்போரின் எண்ணிக்கை, 74 கோடியிலிருந்து 49 கோடி என மூன்றில் ஒரு பங்கு குறைந்துள்ளது.
- பெருந்தொற்று காரணமாக இணையப் பயனர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. 2019-இல் 410 கோடியாக இருந்த இணையப் பயனர்களின் எண்ணிக்கை 2021-இல் 490 கோடியாக அதிகரித்துள்ளது.

**எதிர்கால மதிப்பீடுகள்**

- தற்போதைய முன்னேற்ற விகிதத்தின் அடிப்படையில் பார்த்தால், 2030 இல் கீழ்க்கண்ட வகையில் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பார்கள்
- 160 கோடிப் பேர் பாதுகாப்பான குடிநீர் வசதியைப் பெறாமல் இருப்பார்கள்.
- 280 கோடிப் பேர் பாதுகாப்பான சுகாதார வசதியைப் பெறாமல் இருப்பார்கள்
- 190 கோடிப் பேர் கைகழுவுதல் போன்ற அடிப்படை சுகாதார செயல்பாடுகளுக்கான வசதிகள் கிடைக்காமல் இருப்பார்கள்.

## பாலின சமத்துவமின்மை : இந்தியாவுக்கு 135-ஆவது இடம்

- பாலியல் சமத்துவமின்மை நிலவும் 146 நாடுகளின் பட்டியலில் இந்தியா 135 இடத்தில் உள்ளது.
- கடந்த 16 ஆண்டுகளாக பாலியல் சமத்துவமின்மையில் இந்தியா மோசமான நிலையிலேயே இருப்பதாக உலகப் பொருளாதாரக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ளது.
- பாலியல் சமத்துவமின்மையில் முதலிடத்தை ஐஸ்லாந்து தக்க வைத்துள்ளது. இதற்கு அடுத்தபடியாக பின்லாந்து, நார்வே, நியூஸிலாந்து, ஸ்வீடன் ஆகிய நாடுகள் உள்ளன.
- இந்தியாவில் பெண்களின் எண்ணிக்கை சுமார் 66.2 கோடி இருப்பதாகவும் அவர்களின் பொருளாதாரப் பங்களிப்பும், வாய்ப்புகள் அளிக்கப்படுவதும் 2021-ஆம் ஆண்டு முதல் சிறந்த மாற்றம் கண்டுள்ளது.
- பெண்கள் எம்பி எம்.எல்.ஏ-க்களாகவும், மூத்த அதிகாரிகளாகவும், மேலாளராகவும் இருப்பது 14.6 சதவீதத்தில் இருந்து 17.6 சதவீதமாக அதிகரித்துள்ளது.
- தொழில்நுட்ப, தொழில்முறை பணியாளர் பங்களிப்பில் 29.2 சதவீதத்தில் இருந்து 32.9 சதவீதமாக உயர்ந்துள்ளது.
- பெண்களுக்கு அரசியல் அதிகாரமளித்தலில் இந்தியா 48-ஆவது இடத்தில் உள்ளது.
- சுகாதாரம் மற்றும் வாழ்வியல் பிரிவில் இந்தியா 146-ஆவது இடத்தில் உள்ளது.

**ஆரம்பநிலை கல்வியில்...**

- ஆரம்பநிலைக் கல்வி பயில்வதற்கான சேர்க்கையில் பாலின சமத்துவம் நிலவும் நாடுகளில் உலகளவில் இந்தியா 8-ஆவது இடம் வகிக்கிறது.

- இந்த சமத்துவமின்மை இடைவெளியை பூர்த்தி செய்ய 197 ஆண்டுகள் ஆகும்.
- பெண்களின் பொருளாதார அதிகாரமளித்தலில் நிலவும் சமத்துவமின்மையை ஈடு செய்ய மேலும் 155 ஆண்டுகளாகும்.
- பொருளாதாரம் மற்றும் வாய்ப்புகள் பெறுவதில் சமத்துவமின்மையை ஈடுசெய்ய 151 ஆண்டுகளாகும் என்று உலகப் பொருளாதாரக் கூட்டமைப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நானோ உரங்கள்

- ரசாயன உரங்களுக்குப் பதிலாக முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்ட 'நானோ உரங்கள்' பயன்பாட்டை விவசாயிகளிடையே பிரபலப்படுத்த வேண்டும்.
- உலக அளவிலான உரப் பயன்பாட்டில் இந்தியாவின் பங்கு மட்டும் 35 சதவீதமாகும்.
- ஒவ்வோரு ஆண்டும் 70 லட்சம் முதல் 100 லட்சம் மெட்ரிக் டன் உரங்களை இந்தியா இறக்குமதி செய்கிறது.
- உரமானியத்துக்கு மட்டும் மத்திய அரசு ரூ.2.5 லட்சம் கோடியை செலவழித்து வருகிறது.
- ஒவ்வொரு நானோ உரபாட்டிலும், ஒரு மூட்டை உரத்துக்கு சமமானதாகும். ஒரு பாட்டில் நானோ உரம் ரூ.240-க்கு விற்கப்படுகிறது.
- நானோ உரங்கள் பாதுகாப்பானது. அது திறன் கொண்டது என்பது ஆய்வுகளிலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.
- நானோ உரம் முழுவதும் உள்நாட்டில் உருவாக்கப்பட்டதாகும்.
- **'ஒரே நாடு; ஒரே உரம்'** என்ற இலக்கை எட்ட மத்திய அரசு விரும்புகிறது.
- பெங்களூரில் இந்திய விவசாயிகள் உர கூட்டுறவு நிறுவனம் (இஃப்கோ) சார்பில் ரூ.350 கோடி முதலீட்டில் அமைக்கப்படும் நானோ உர (திரவம்) ஆலைக்கு அடிக்கல் நாட்டினார்.

## நிலையான வளர்ச்சி இலக்குகள்

- ஜி-20 மாநாடு இந்தோனேசியாவில் உள்ள பாலி நகரில் நடைபெற்று வருகிறது.
- நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைய ஒருங்கிணைந்த நிதி மற்றும் தனியார் மூலதனத்தைப் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது.
- எரிசக்தி திறன் மற்றும் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக புதுமையான கொள்கைகளை இந்தியா பின்பற்றி வருகிறது.
- மேலும், உலகளாவிய குறைந்தபட்ச வரி ஒப்பந்தத்திலிருந்து அர்த்தமுள்ள வருவாயை ஈட்டுவதை ஜி 20 நாடுகள் உறுதி செய்ய வேண்டும்.

### தடை செய்யப்பட்ட சொற்கள்

- மக்களவை செயலகம் சார்பில், 'தடைசெய்யப்பட்ட சொற்கள் 2021' என்ற பெயரில் புதியப் பட்டியல் அதன் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.
- ஆங்கிலத்தின் கரப்ட் (ஊழல்), அபியூஸ்டு (அவமானப்படுத்துதல்), கோவிட் ஸ்பிரட்டர் (கரோனா வைரஸ் பரப்புபவர்), டிராமா (நாடகம்), அஷேம்ட் (வெட்கப்பட வேண்டும்), ஸ்னூப் கேட், க்ரோகடைல் டியர்ஞஸ் (முதலைக் கண்ணீர்) உள்ளிட்டவை இடம் பெற்றுள்ளன.
- இந்தியில் ஜும்லாஜீவி (நடித்தே வாழ்பவர்), சம்ச்சா (கண்மூடித்தனமாக ஆதரவளிப்பவர்), சம்ச்சாகிரி (கண்மூடித்தனமாக ஆதரவளிக்கும் போக்கு), பாலபுத்தி (குழந்தை புத்தி), தானாஷா (சர்வாதிகாரம்) உள்ளிட்டவை ஆகும்.
- தடை செய்யப்பட்ட சொற்களை அவ்வப்போது மக்களவை செயலகம் தொகுத்து வெளியிடுவது வழக்கம். பிறகு இதை மாநிலங்களவையும் ஏற்று அமல்படுத்திக் கொள்ளும்.
- முதல் முறையாக கடந்த 1954-ல் 'டிக்ஷ்னரி ஆப் அன்பார்லிமென்ட்ரி வேர்ட்ஸ்' என்று நூலாக பதிப்பிக்கப்பட்டுள்ளது. இதன் பிறகு கூடுதலாக சேர்க்கப்பட்ட தடை செய்யப்பட்ட சொற்களையும் இணைத்து அவ்வப்போது புதிய தொகுப்புகளாகவும் வெளியாவது வழக்கம்.
- உறுப்பினர்கள் உரையாடும் போது அவர்கள் இந்த தடை செய்யப்பட்ட சொற்களை தெரிந்தோ, தெரியாமலோ பயன்படுத்தி னால், அதை சபாநாயகர் கவனித்து அகற்றுவார்.
- கடந்த 1954 முதல் 2010 வரை 7 முறை தடை செய்யப்பட்ட சொற்கள் மீதான தொகுப்புகள் வெளியாகி உள்ளன.
- 2010-க்கு பின் ஆண்டுதோறும் தவறான சொற்களை அகற்றும் நடவடிக்கை தொடர்கிறது.

## பிணை தனிச்சட்டம்

- இந்திய சிறைச்சாலைகள் விசாரணைக் கைதிகளால் நிறைந்திருக்கும் நிலைக்கு முற்றுப்புள்ளி வைத்திட, பிணை வழங்குதலுக்குத் தனிச் சட்டத்தை இயற்றுமாறு உச்சநீதிமன்றம் மத்திய அரசைக் கேட்டுக் கொண்டிருப்பது வரவேற்புக்குரியது.
- பிணை கோரும் மனுக்களுக்கு இரண்டு வாரங்களுக்குள்ளும், முன்ஜாமீன் மனுக்களுக்கு ஆறு வாரங்களுக்குள்ளும் முடிவெடுக்குமாறு அறிவுறுத்தியுள்ளது.
- பிணையில் வெளிவரத் தக்க குற்றப்பிரிவுகளின் கீழ் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவருக்கு விசாரணை முடியும் வரையிலும் சிறைத் தண்டனையிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது.
- பிணையில் வெளிவர இயலாத குற்றங்களின் கீழ் கைதான ஒருவர், பிணை கேட்டு நீதிமன்றத்தை அணுகலாம். அவருக்குப் பிணை வழங்கலாமா கூடாதா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும்.
- குற்றம் நிரூபிக்கப்பட்ட குற்றவாளியைப் போல, குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் தண்டிப்பதில் நியாயம் இல் லை. குற்றம் சாட்டப்பட்டவரை வெளியில் விடுவது, அவர் மேலும் குற்றங்களைச் செய்ய வாய்ப்பாக இருக்கும் அல்லது சாட்சிகளுக்கு அச்சுறுத்தலாக அமையும் என்பது போன்ற வலுவான காரணங்கள் எதுவும் இல்லாமல் விசாரணை நிலையில் யாரையும் சிறைப்படுத்தி வைக்கக்கூடாது.

## உணவு தானியங்கள் ஏற்றுமதி

- உணவு தானியங்களை ஏற்றுமதி செய்ய இந்தியாவுக்கு அனுமதி தேவை என்று உலக வர்த்தக அமைப்புக்கு (டபிள்யூடிஓ) மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் வலியுறுத்தியுள்ளார்.
- நீடித்த வளர்ச்சி இலக்குகளை அடைய ஒருங்கிணைந்த நிதி மற்றும் தனியார் மூலதனத்தைப் பயன்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகி உள்ளது.
- எரிசக்தி திறன் மற்றும் பாதுகாப்பை அதிகரிப்பதற்காக புதுமையான கொள்கைகளை இந்தியா பின்பற்றி வருகிறது.
- உலக வர்த்தக அமைப்பின் (டிபிள்யூடிஓ) கட்டுப்பாடுகளால் இந்த உணவு தானியங்களை அந்த நாடுகளுக்கு இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்ய முடியாத நிலை உள்ளது.
- தேவைப்பட்ட நாடுகளுக்கு உணவு தானியங்களை ஏற்றுமதி செய்ய இந்தியாவுக்கு டபிள்யூடிஓ அனுமதி தர வேண்டும்.
- உலக வர்த்தக அமைப்பின் விதிமுறைகளின்படி, மானிய விலையில் தானியங்கள் கொள்முதல் செய்யப்படுவதால், அந்த நாடுகள் தங்கள் பொது இருப்புகளில் இருந்து உணவு தானியங்களை ஏற்றுமதி செய்ய அனுமதிக்கப்படுவதில்லை.
- இவ்வாறு கொள்முதல் செய்யப்படும்தானியங்களை ஏற்றுமதி செய்வதற்காக சந்தைக்குள் கொண்டு வர முடியாது என்ற டபிள்யூடிஓ கட்டுப்பாடு விதித்துள்ளது.

## சர்தார் சரோவர் அணை

- சர்தார் சரோவர் அணையிலிருந்து 750 கி.மீ தூரம் அமைக்கப்பட்ட மிக நீண்ட கால்வாய் மூலம் நர்மதா நதிநீர், குஜராத்தி ன் வறட்சியான கட்ச் பகுதிக்கு வந்தடைந்துள்ளது.
- நர்மதா ஆற்றின் குறுக்கே சர்தார் சரோவர் அணை பிரம்மாண்டமாக கட்டப்பட்டது.
- இந்த அணையால் பல ஆதிவாசி கிராமங்கள் நீரில் மூழ்கும் என்று எதிர்ப்பு தெரிவித்து மேதா பட்கர். அருந்ததி ராய் மற்றும் அவரது ஆதரவாளர்கள் 20 ஆண்டுகளுக்கு மேலாக போராடினர்.
- 2017-ம் ஆண்டு திறக்கப்பட்டது.
- குஜராத்தின் சவுராஷ்டிரா மற்றும் வடக்கு குஜராத் பகுதிகளுக்கு கால்வாய் மூலம் நர்மதா நதி நீர் கொண்டு செல்லப்படுகிறது.
- இதன் இறுதி பகுதி கட்ச் மாவட்டத்தின் மாண்ட்வி தாலுகாவில் உள்ள மாத் குபா என்ற கிராமத்தில் முடிகிறது.

## குரங்கு அம்மை நோய்

- குரங்கு அம்மை நோய், ஒரு தீவிரமான வைரஸ் பாதிப்பாகும். இது வழக்கமாக 2 முதல் 4 வாரங்களுக்கு நீடிக்கும் கால வரம்புக்கு உட்பட்ட நோயாகும். குறிப்பிட்ட சுகாதார சூழல் உடையவர்களுக்கோ அல்லது இல்லாதவர்களுக்கோ தீவிர பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

**பொதுவான அறிகுறிகள்**

- காய்ச்சல்
- தோலில் சிறு கொப்பளங்கள் (முகத்தில் தொடங்கி கை, கால், உள்ளங்கை மற்றும் உள்ளங்கால் வரை பரவக்கூடும்).
- நிணநீர் கணுக்கள் வீக்கம்
- தலைவலி, தசைப்பிடிப்பு
- உடல் சோர்வு
- தொண்டை புண் மற்றும் இருமல்

**பாதிப்புகள்**

- கண்வலி அல்லது பார்வை மங்குதல்
- மூச்சுத்திணறல்
- நெஞ்சுவலி
- மூச்சு விடுவதில் சிரமம்
- உணர்வு மாற்றம், வலிப்பு
- சிறுநீர் வெளியேறும் அளவு குறைதல்

**தொற்று காலம்**

- சொறி ஏற்படுதவதற்கு 1 – 2 நாள்களுக்கு முன்பு வரை, அனைத்து சிரங்குகளும் விழும்/குறையும் வரை...

**அதிக பாதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளவர்கள்**

- ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகள்
- இணை நோய் பாதிப்புடையவர்கள்
- நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்கள்
- பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்கள்
- ஓரின சேர்க்கை கொள்ளும் ஆண்கள்

**நோய் பரவல்**

- நீண்ட நாள் நெருங்கிய தொடர்புள்ளவர்களின் பெரிய சுவாச துளிகள் வாயிலாக, மனிதர்களில் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு பரவும்.
- உடல் ரீதியான நேரடி தொடர்பு உடையவர்கள் (பாலியல் தொடர்பு உட்பட), உடலில் இருந்து வெளியேறும் திரவங்களுடன் தொடர்பு அல்லது உடல் காயம் மற்றும் உடல் காயம் உடையவர்களுடன் மறைமுக தொடர்பு அல்லது தொற்று பாதி க்கப்பட்டவர்கள் பயன்படுத்திய துணிகள், கறைபடிந்த உடைகள் மூலம் நேரடியாகவும், அறிய முடியாத பொருள்களிலிருந்து மறைமுகமாகவும் இது பரவக்கூடும்.

**பின்பற்ற வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்**

- குரங்கு அம்மை அறிகுறி தென்பட்டால், அருகில் உள்ள சுகாதார மையத்துக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.
- நோயால் பாதிக்கப்பட்டோர் பயன்படுத்தும் படுக்கை உள்ளிட்ட எந்தப் பொருள்களையும் தொடுவதைத் தவிர்க்க வேண்டும்.
- நோய் எதிர்ப்பு ஏற்பட்டவர்களை மற்றவர்களிடமிருந்து தனிமைப்படுத்த வேண்டும்.
- தொற்று பாதிப்பு உடையவர்களுடன் தொடர்பு கொண்ட பிறகு கைகளை சுத்தமாக கழுவ வேண்டும். உதாரணமாக சோப்பு மற்றும் தண்ணீரைப் பயன்படுத்தியோ அல்லது ஆல்கஹால் கலந்த கைசுத்திகரிப்பான்களை பயன்படுத்தியோ கழுவலாம்.
- நோயாளியை தனிமையில் வைத்து சிகிச்சை அளிக்க வேண்டும்.
- அருகில் உள்ளவர்களுக்கு நோய் பரவுவதைக் குறைப்பதற்கு, நோயாளியின் மூக்கு மற்றும் வாயை மறைக்கக்கூடிய ம ருத்துவ முகக் கவசத்தை பயன்படுத்துதல், நோயாளியின் தோலில் இருந்து உதிரக்கூடிய சொறியை தூய்மையான துணி கொண்டு மறைப்பது உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

## இணையதள சேவை

- தேசிய மின் ஆளுகை சேவைக்கான மதிப்பீட்டில், மத்திய அமைச்சக இணைய தளங்களில் உள்துறை அமைச்சக இணையதளம் சிறப்பாக அமைக்கப்பட்டு முதலிடத்தை பெற்றுள்ளதாக மத்திய நிர்வாகச் சீர்திருத்தங்கள் தெரிவித்துள்ளது.
- மத்திய நிர்வாக சீர்திருத்தங்கள், பொதுமக்கள் குறைதீர்ப்பு துறை, நாஸ்காம், தொழில்முறை சேவை நிறுவனமான கேபிஎம்ஜி ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் தேசிய மின் ஆளுகை சேவைக்கான மதிப்பீட்டை நடத்தியது.
- பொதுமக்களுக்கு இணையதளம் வழியாக சேவைகளை வழங்குவதில் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மத்திய அரசின் அமைச்சகங்கள் ஆகியவை அரசு துறைகளின் செயல்திறனை மேம்படுத்தும் நோக்கத்துடன் மத்திய பணியாளர் நிர்வாக அமைச்சகத்தின் கீழ் உள்ள நிர்வாகச் சீர்திருத்தத்துறை இந்த மதிப்பீட்டை தொடங்கியுள்ளது.
- எளிதாக அணுகக்கூடியவை, உள்ளடக்கம் கிடைக்கும் விதம், பயன்பாட்டின் எளிமை, தகவல்களின் பாதுகாப்பு, அரசு அமைச்சக இணையதளங்களுக்கான தனியுரிமை ஆகிய நான்கு அளவுகோல்களுடன் மதிப்பிடப்படுகிறது.
- மத்திய உள்துறை விவகாரங்கள் அமைச்சகத்தின் இணையதளம், மத்திய அமைச்சகங்களின் இணையதளங்களே சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளதாக தேர்வு செய்யப்பட்டு, தர வரிசையில் முதலிடத்திற்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**கருப்பு காய்ச்சல்**

- கருப்பு காய்ச்சலானது மலேரியாவைப் போன்று ஒரு வகை கொசுக்கள் மூலம் பரவுகிறது.
- மணல் கொசுக்கள் எனப்படும் அத்தகைய கொசுக்கள், சாதாரண கொசுக்களை விட அளவில் சிறியதாக இருக்கும்.
- காய்ச்சல், எடை இழப்பு, சோர்வு, தோலில் புண், தடிப்புகள், ரத்தசோகை, கல்லீரல், மண்ணீரல் வீக்கம் போன்றவை இக்காய்ச்சலின் அறிகுறிகளாகும்.
- உரிய சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் மரணத்தையும் இக்காய்ச்சல் ஏற்படுத்தும்.

- மக்களுக்கு இணையதள சேவைகளை வழங்கும் மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள் மற்றும் மத்திய அரசின் துறைகள் தங்கள் செயல்முறையை மேம்படுத்துவதற்காக குறிப்பிட்ட கால அளவில் மேற்கொள்ளப்படும் இந்த மதிப்பீட்டால் மத்திய, மாநில அமைச்சகங்களும், அரசின் துறைகளும் உத்வேகம் பெற்று பொதுமக்களின் குறைகளைத் தீர்க்க இதன் மூலம் ஊக்குவிக்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மக்கள்தொகைப் பெருக்கம் - கட்டுப்படுத்துவது அவசியம்

- ஐக்கிய நாடுகள் சபையின், பொருளாதாரம் மற்றும் சமூக விவகாரங்கள் துறையானது, உலக மக்கள் தொகை கணிப்பு குறித்த அறிக்கையை வெளியிட்டது.
- இந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், உலக மக்கள் தொகை, 800 கோடியாக உயரும்; 2030-ல் 850 கோடியாகவும், 2050ல், 970 கோடியாகவும், 2100-ல், 1,040 கோடியாகவும் அதிகரிக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- சீன மக்கள் தொகையானது, 142 கோடியே, 60 லட்சமாக உள்ளது. இந்திய மக்கள் தொகை 141 கோடியே, 20 லட்சமாக இருக்கிறது.
- அடுத்த ஆண்டில் சீன மக்கள் தொகையை, இந்திய மக்கள் தொகை முந்தி விடும். 2050-ல் இந்திய மக்கள் தொகை, 167 கோடியாக இருக்கும். 2064-ல், 170 கோடியை எட்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.
- 2050 வரை உலக மக்கள் தொகையில் எவ்வளவு உயருமோ, அதில் பாதிக்கும் மேற்பட்ட அளவு, இந்தியா உள்ளிட்ட எட்டு நாடுகளில்தான் இருக்கும் என்றும் கணிக்கப்பட்டுள்ளது.
- சீனாவில் கடுமையான கட்டுப்பாடுகள் காரணமாக, குழந்தைகள் பிறப்பு விகிதம் கணிசமாக குறைந்துள்ளது.
- இந்தியாவிலோ, குழந்தைகள் பிறப்பு விகிதம் மெதுவாகவே குறைந்து வருகிறது. இதுவே மக்கள் தொகையில், சீனாவை இந்தியா முந்த உள்ளதற்கான காரணமாகும்.
- நலத்திட்டங்களை செயல்படுத்தும், மத்திய, மாநில அரசுகள், மக்கள் குடும்பங்களுக்கும் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் எனில், கூடுதலான நிதி ஆதாரங்கள் கிடைப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- சுகாதாரத்துறை, வீட்டு வசதி மற்றும் கல்வித் துறைகளிலும், மக்கள்தொகை பெருக்கம் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தும். உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, தொழில் துறையில் முதலீடுகளை அதிகரிப்பது உள்ளிட்ட விஷயங்களிலும், அரசுகள் நெருக்கடிக்கு ஆளாகலாம்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

- மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்க, நம் நாட்டில் குறிப்பிடத்தக்க அளவிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும், அவை திருப்திகரமாக இல்லை என்பதை ஐ.நா.வின் ஆய்வறிக்கை காட்டுகிறது.
- கருத்தடை சாதனங்கள் மற்றும் குடும்பக் கட்டுப்பாடு குறித்த விழிப்புணர்வுகளை மீண்டும் அதிகரிக்க வேண்டியது அவசியம்.
- உலக அளவில் மனிதனின் சராசரி ஆயுள் 2019ல், 72.8 வயதாக இருந்தது. 2050ல், இது, 77.2 வயதாக உயரவுள்ளது.
- மேலும், உலக மக்கள் தொகையில், 65 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் எண்ணிக்கை, தற்போது, 10 சதவீதமாக உள்ளது; 2050ல், இது, 16 சதவீதமாக அதிகரிக்க உள்ளது.
- இந்தியாவிலும் வயதானவர்களின் மருத்துவ தேவைகள் கடுமையாக அதிகரிக்கும் என்பதால், இப்போதே, மத்திய, மாநில அரசுகள் உஷார் நடவடிக்கையில் இறங்க வேண்டும்.
- மேலும், மக்கள் தொகை பெருக்கத்திற்கு ஏற்ற வகையில், இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புகளையும் உருவாக்க வேண்டும். இல்லையெனில், சமூகத்தின் அமைதியை சீர்குலைக்கும் வகையிலான பிரச்சனைகள் உருவாகலாம்.
- வேலைவாய்ப்பு கிடைக்காமல், மக்கள் கிராமங்களில் இருந்து நகரங்களுக்கு இடம் பெயர்வது அதிகரிக்கும். நகரங்களில் குடிசைப் பகுதிகளில், சுகாதாரமற்ற சூழ்நிலைகளில் வாழ்வோர் எண்ணிக்கையும் கூடும்.
- மக்கள் தொகைப் பெருக்கம் விஷயத்தில் அஜாக்கிரதையாக இருந்து, அது கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு சென்று விட்டால் நாட்டின் சமூக, பொருளாதார மேம்பாடு தடம் புரண்டு விடும்.

## மக்கள்தொகை வரமா, சாபமா?

- இந்தியா உலகின் அதிக மக்கள் தொகையுள்ள நாடாகப் போகிறது.
- 2023 ஜூலை 15 ஐ.நா. மதிப்பீட்டின்படி இந்திய மக்கள்தொகை 142.8 கோடியாக ஆகியிருக்கும். சீனா 142.6 கோடியுடன் இரண்டாம் இடத்திற்குத் தள்ளப்பட்டிருக்கும்.
- 2050 ஆம் ஆண்டில் இந்திய மக்கள்தொகை 167 கோடியை எட்டியிருக்கும். அப்போது சீனாவின் மக்கள்தொகை 132 கோடியுடன் வெகுதூரம் பின்னால் இருக்கும்.
- உத்தரப்பிரதேச அரசு மக்கள் தொகைக் கட்டுப்பாட்டைச் சட்டமாக்க ஒரு வரைவறிக்கையைத் தாக்கல் செய்திருக்கிறது.
- மத்தியப்பிதேசம், உத்தராகண்ட், கர்நாடகம், திரிபுரா, அசாம் ஆகிய மாநிலங்களுக்கும் கட்டாயக் குடும்பக் கட்டுப்பாடுச் சட்டத்தை அமல்படுத்தப் போவதாகக் கூறிவருகின்றனர்.

### இந்திய மாதிரியும் சீன மாதிரியும்

- நமது எல்லாப் பிரச்சனைகளுக்கும் மக்கள் தொகையே காரணம். அதன் பெருக்கத்தைச் சட்டம் போட்டுத் தடுத்தே ஆக வேண்டும்.
- சீனா ஒற்றைக் குழந்தைத் திட்டத்தைக் கடுமையாக அமல்படுத்தியதால் அதன் மக்கள் தொகை வெகுவாகக் குறைந்து விட்டது.
- அதன் உழைக்கும் மக்கள் (15 முதல் 64 வயதினர்) குறைந்து விட்டனர். உற்பத்தி பாதிக்கப்படப் போகிறது.
- சீனாவில் மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் 1990-ல் 1.7%, 2000-ல் 0.69%, 2021-ல் 0.07% ஆகவும் குறைந்து வந்தது. இனிவரும் ஆண்டுகளிலும் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் எதிர்த்திசையில் இருக்கும்.
- சீனாவின் மக்கள்தொகை குறைந்து வருகிறது. இந்தியாவின் மக்கள் தொகை கூடினாலும், அது கூடுகிற விகிதம் குறைந்து வருகிறது. இதற்குக் கருவள விகிதம் குறைந்து வருவதுதான் காரணம்.
- ஒரு பெண் தன் வாழ்நாளில் பிரசவிக்கும் எண்ணிக்கை கருவளம் எனப்படுகிறது.
- பீஹார் (2.98), மேகாலயம் (2.91), உத்தரப்பிரதேசம் (2.35), ஜார்கண்ட் (2.26), மணிப்பூர் (2.17).
- ஐந்து தென் மாநிலங்களின் கருவள விகிதமோ (17-18). இந்தியாவின் மக்கள் தொகை மிக்க உத்தரப்பிரதேசம், பீஹார் உள்ளிட்ட பல மாநிலங்களுக்கு கருவள விகிதத்தைக் கணிசமாகக் குறைத்துவிட்ட மாநிலங்களின் வருவாயில் ஒரு பங்கு மடைமாறிப் பாய்கிறது.
- மக்கள்தொகை தினக் குறிக்கோள்களில் கல்வி, ஆண்- பெண் சமத்துவம், வறுமை ஒழிப்பு, உடல் நலம், மனித உரிமை முதலான மக்கள் நல அம்சங்கள்தான் முன்னுரிமை பெறுகின்றனர்.
- பெண்களுக்குத் தடையின்றி கல்வியும் சுகாதாரமும் கிடைக்கிற எல்லாச் சமூகங்களிலும், குடும்பங்கள் சிறிதாகத்தான் இருக்கின்றன.
- இளைஞர்கள் அதிகமாக இருப்பதால் 2030 இல் உலகில் உழைக்கும் வயதினரில் நான்கில் ஒருவர் இந்தியராக இருப்பார்.
- ஆனால், இந்த எண்ணிக்கை மட்டுமே சோறு போடாது. இந்தப் பெரும் திரளுக்கு வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும்.

## இந்திய-ஆப்பிரிக்க வளர்ச்சி கூட்டுறவு மாநாடு

- இந்திய–ஆப்பிரிக்க வளர்ச்சி கூட்டுறவுக்கான இந்த சிஐஐ (இந்திய தொழிலக கூட்டமைப்பு) எக்ஸிம் வங்கி மாநாட்டில் வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், மத்திய வணிக, தொழில், நுகர்வோர் விவகாரம் உணவு மற்றும் பொது விநியோகம், ஜவுளித்துறை அமைச்சர் பியூஷ் கோயல் பங்கேற்க உள்ளனர்.
- புர்கினா ஃபெசோ, காங்கோ குடியரசு, கேமரூண், எஸ்வதினி, எதியோபியா, ஈகுவடோரியல் கினியா, காபோன், தானா, மலாவி, நிகெர், மோரீஸ், டோகோ, ஜிம்பாப்வே, ஜாம்பியா உள்பட 21 நாடுகளைச் சேர்ந்த 40 அமைச்சர்கள் மாநாட்டில் பங்கேற்க உள்ளனர்.
- வேளாண், உள்கட்டமைப்பு, பாதுகாப்புத்துறை, நீர் மற்றும் பாசனம் உற்பத்தி, சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தி, மின்சாரம் மற்றும் எரிசக்தி என 30-க்கும் மேற்பட்ட நாடுகளின் 185 திட்டங்களின் மேம்பாடு குறித்து இந்த மாநாட்டில் ஆலோசிக்கப்பட உள்ளன.

## கடற்படையிலிருந்து விடைபெற்றது ஐஎன்எஸ் சிந்துத்வஜ்

- ரஷியாவில் கட்டமைக்கப்பட்ட சிந்துகோஷ் ரக நீர்மூழ்கிக் கப்பலின் வரிசையில், ஐஎன்எஸ் சிந்துத்வஜ் நீர் மூழ்கிக் கப்பல் 'தற்சார்பு இந்தியா', திட்ட முயற்சிக்கு உதாரணமாக விளங்குகிறது.
- கடலின் ஆழத்தை அளவிட உதவும் சோனார் கருவி, முற்றிலும் உள்நாட்டில் கட்டமைக்கப்பட்ட செயற்கைகோள் தொலைத்தொடர்பு அமைப்பு, திசைகாட்டும் கருவி உள்ளிட்ட பல்வேறு அம்சங்கள் இந்தக் கப்பலில் இடம் பெற்றிருந்தன.
- புத்தாக்க முயற்சிக்காக சிஎன்எஸ் ரோலிங் கோப்பையை வென்ற முதல் நீர்மூழ்கிக் கப்பல் ஐஎன்எஸ் சிந்துத்வஜ் ஆகும்.
- இந்த நீர் மூழ்கியானது இந்தியக் கடற்படை சேவையிலிருந்து விடைபெற்றது.

## நெடுஞ்சாலைகளின் நடுவே : அரளிச்செடிகள் வளர்ப்பது ஏன்?

- நெடுஞ்சாலைகளில் ஆயிரக்கணக்கில் வாகனங்கள் செல்கின்றன. இந்த வாகனங்களில் இருந்து வெளிவரும் புகைகளில் கார்பன் நச்சுகள் அதிகமாக இருக்கும்.
- இந்த நச்சு வாயு, காற்று மண்டலத்தை அசுத்தமாக்குவதுடன், சாலையில் பயணம் செய்வோருக்கு சுவாச கோளாறுகளையும் ஏற்படுத்தும்.
- அதனால்தான் இந்த நச்சுக்காற்றை கட்டுப்படுத்த சாலையின் நடுவே செவ்வரளிச் செடிகள் வளர்க்கப்படுகின்றன.
- செவ்வரளிச் செடியில் உள்ள இலைகள் மற்றும் மலர்கள் கார்பன் துகள்களை காற்றிலிருந்து நீக்கி, காற்றிலுள்ள மாசுக்களை அகற்றி, தூய காற்றாக மாற்றும் தன்மை கொண்டவை.
- இதனால் நெடுஞ்சாலைகளில் பயணிக்கும்போது தூய்மையான காற்றை சுவாசிக்க முடியும். அதனால்தான் நெடுஞ்சாலையின் நடுவே உள்ள தடுப்புகளில் அதிகமான அளவில் வளர்க்கப்பட்டு வருகின்றன.
- மேலும், இவை வறட்சியை தாங்குவதுடன், மண் அரிப்பையும் தடுக்கும் தன்மை கொண்டவை. வாகன இரைச்சலை குறைக்கும் ஆற்றலும் இச்செடிகளுக்கு உண்டாம்.
- எதிர்ப்புறம் உள்ள சாலைகளில் வரும் வாகனங்களின் முகப்பு விளக்குகள் வாகன ஓட்டிகளை அதிகம் பாதிக்காதவாறு தடுக்கும் தன்மையும், இந்த செடிகளுக்கு உள்ளதாக கூறுகிறார்கள். அந்த அளவுக்கு இலைகள் அடர்த்தி மிக்கவை. மேலும் இவற்றை பராமரிக்கும் செலவும் குறைவு.
- விலங்குகள் இயற்கையாகவே இந்த தாவரத்தின் இலைகளை உண்ணாது என்பது இயற்கையின் விதி.
- அழகோடு சேர்த்து இத்தனை வசதிகளும் இருப்பதால்தான் நிறைய நெடுஞ்சாலைகளில் வைக்கப்படும் அரளிச் செடிகள் மழை அதிகமான காலங்களில் செழித்து வளரக்கூடியவை. இதை சரிவர பாதுகாத்து வருவது அவசியம். ஒரே அளவில் வளர்ந்ததாக இருக்க வேண்டும்.
- அதிகமாக வளர்ந்தால் மக்கள் சாலையைக் கடக்கும் போது விபத்துகள் நேரலாம். அதனால்தான் சாலையின் நடுவில் செடிகள் குறைந்த அளவு உயரமாக வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## குறைந்தபட்ச ஆதரவு விலை

- வேளாண்விளை பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை முறையை மேலும் திறன் கொண்டதாகவும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும் மாற்றுவதற்கான வழிகள் குறித்து ஆலோசித்த மத்திய வேளாண் துறை முன்னாள் செயலர் **சஞ்சய் அகர்வால்** தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

- குறைந்தபட்ச ஆதரவு விலையை வேளாண் செலவுகள் மற்றும் விலைகள் ஆணையம் நிர்ணயிக்கிறது. அந்த ஆணையத்தை மேலும் தன்னாட்சி கொண்டதாக மாற்றுவதற்கான நடைமுறை சாத்தியக்கூறுகள் குறித்தும், வேளாண்விளை பொருள்களை சந்தைப்படுத்தும் முறையை மேலும் வலுகொண்டதாகவும் இந்தக் குழு ஆலோசனை நடத்தும்.
- இயற்கை விவசாயம், நுண்ணீர் பாசனத் திட்டம், புதிய பயிர்கள் மற்றும் பயிரிடும் முறைகள் உள்ளிட்டவற்றை மேம்படுத்துவதற்கான வழிகள் குறித்து இந்தக்குழு ஆராயும்.

## நான்காம் தொழிற்புரட்சி

- உலகம் தற்போது நான்காம் தொழிற்புரட்சிக் காலத்தில் இருக்கிறது. டிஜிட்டல் தொழில்நுட்பமும் அதைச் சார்ந்த தொழில்நுட்ப வளர்ச்சிகளும் இந்தப் புதிய தொழில்நுட்பப் புரட்சியைச் சாத்தியப்படுத்தியுள்ளன.
- தொழில்நுட்பம் சார்ந்த அனைத்தையும் சுருக்கக் குறியீடுகளால் குறிப்பிடுவது இந்த டிஜிட்டல் யுகத்தின் நடைமுறைகளில் ஒன்றாகிவிட்டது.
- நான்காம் தொழிற்புரட்சியின் ஆங்கிலப் பெயரான 'ஃபோர்த் இண்டஸ்ட்ரியல் ரெவல்யூஷன்' என்பதை '4ஐஆர்' என்று குறிப்பிடப்படுகிறது. சில நேரம் 'இண்டஸ்ட்ரி 4.0' என்றும் குறிப்பிடப்படுகிறது.
- செயற்கை நுண்ணறிவு, ரோபாடிக்ஸ், பொருட்களின் இணையம் (Internet of Things), மரபணுப் பொறியியல், குவாண்டம் கணினியியல், ஸ்மார்ட் சென்ஸார்கள், பெருந்தரவு (Big Data) உள்ளிட்ட பல்வேறு தொழில்நுட்பங்களில் நிகழும் முன்னேற்றங்களின் கலவைதான் நான்காம் தொழிற்புரட்சி

### முதல் தொழிற்புரட்சி

- 18–ஆம் நூற்றாண்டில் நீராவி இன்ஜின் கண்டுபிடிக்கப்பட்டதால், உற்பத்தி நடைமுறை இயந்திரமானது. நகர்மயமாக்கலும் அதிகரித்தது. இதுவே முதல் தொழிற்புரட்சி எனப்பட்டது.

### இரண்டாம் தொழிற்புரட்சி

- 19–ஆம் நூற்றாண்டில் ரயில் போக்குவரத்து, மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டது உள்ளிட்ட அறிவியல் முன்னேற்றங்களால் ஒட்டுமொத்த உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது. இதுவே இரண்டாம் தொழிற்புரட்சி என்று வரையறுக்கப்பட்டது.

### மூன்றாம் தொழிற்புரட்சி

- 20 ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் கணினி – டிஜிட்டல் தொழில்நுட்பத்தால் உற்பத்தி தானியங்கிமயம் அடையத் தொடங்கியது. வங்கியியல், ஆற்றல், தகவல் தொடர்பு உள்ளிட்ட பல்வேறு தொழில்துறைகளில் மிகப்பெரிய மாற்றங்கள் நிகழ்ந்தன. இதுவே மூன்றாம் தொழிற்புரட்சி என்று அறியப்பட்டது.

### டிஜிட்டல் புரட்சி

- தற்போது நடைபெற்று வரும் தொழில்நுட்ப மாற்றங்களும் முன்னேற்றங்களும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைச் சார்ந்தவைதான். ஆனால் இந்த மாற்றங்களின் வேகம், அளவு, தாக்கம் ஆகியவை இந்த உலகம் இதுவரை கண்டிராததாக இருப்பதாலும், இவை மனித வாழ்க்கையை ஒட்டுமொத்தமாக மாற்றுவதாக இருப்பதாலும் இதை ஒரு புதிய தொழிற்புரட்சிக் காலமாக வரையறுக்கலாம் என சொல்லப்படுகிறது.
- இந்த முன்மொழிவை உலகப் பொருளாதார மன்றத்தைத் தொடங்கியவரும் அதன் நிர்வாகத் தலைவருமான கிளௌஸ் ஷ்வாப் 2016இல் முதல் முறையாக அறிவித்தார்.
- இது குறித்து அவர் எழுதியிருக்கிறார் (http://www.weforum.org/agenda/2019/11/the-fourth-industrial-revolution-is-redefining-the-economy-as-we-know-it/). '**தி ஃபோர்த் இன்டஸ்ட்ரியல் ரெவல்யூஷன்**' என்னும் புத்தகத்தையும் எழுதியுள்ளார்.

### பயன்கள்

- நீங்கள் பயணித்துக் கொண்டிருக்கும் கார் எந்தச் சாலை வழியாகச் சென்றால் குறைந்த நேரத்தில் இலக்கை அடையலாம் என்பதைக் கணித்துச் சொல்லும் ஜிபிஎஸ் அமைப்பு
- ஆப்பிள் சிரி, அலெக்ஸா உள்ளிட்ட குரல்வழி உத்தரவுகளின் மூலம் தகவல்களைத் தரும் கருவிகள்
- நெட்ஃப்ளிக்ஸ் போன் ஓடிடி தளங்களில் உங்கள் ரசனைக்கு ஏற்ற திரைப்படங்களையும், தொடர்களையும் பரிந்துரைக்கும் ஏற்பாடுகள்



SURESH'

- ஃபேஸ்புக்கில் நீங்கள் இருக்கும் ஒளிப்படத்தை யாரோ ஒருவர் பதிவேற்றினால் உங்கள் முகத்தைத் தெரிந்து கொண்டு, அந்தப் பதிவில் உங்களை ஃபேஸ்புக்கே டேக் செய்வது
- நீங்கள் உண்ணும் உணவில் எத்தனை கலோரிகள் இருக்கின்றன.
- ஒரு நாளில் எத்தனை காலடிகள் நடந்திருக்கிறீர்கள், எவ்வளவு உடல் உழைப்பைச் செலுத்தியிருக்கிறீர்கள் . இவற்றின் மூலம் எவ்வளவு கலோரியை இழந்திருக்கிறீர்கள் என்பதை நீங்கள் அணிந்திருக்கும் ஸ்மார்ட் கைக்கடிகாரத்தில்இருந்தே தெரிந்து கொள்வது, இவை எல்லாமே இயற்பியல், உயிரியல், டிஜிட்டல் உலகங்களுக்கு இடையிலான இடைவெளியைக் குறைத்து வருகின்றன.
- ஒரே நேரத்தில் கோடிக்கணக்கானோரைத் திறன்பேசிகளின் மூலம் இணைத்துவிட முடிகிறது. தகவல்களையும் அறிவையும் சேமித்து வைப்பதற்கும் பகிர்ந்துகொள்வதற்குமான வசதிகள் எல்லையற்று விரிந்து கொண்டிருக்கின்றன.
- தொழில், வணிகத்தைப் பொறுத்தவரை வாடிக்கையாளர்கள் உலகில் எந்த மூலையிலிருந்தும் தனக்கு உகந்த வணிக நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பது இயல்பாகியுள்ளது.
- ஒரு பொருள் அல்லது சேவையைப் பற்றி விற்பனையாளர் அளிக்கும் தகவல்களோடு அவற்றைப் பயன்படுத்திய வாடிக்கையாளர்களின் கருத்துகளையும் தெரிந்துகொள்ள முடிகிறது.
- நிறுவனங்களைப் பொறுத்தவரை தானியங்கிக் கருவிகள் அதிகரிப்பதால் உற்பத்திச் செலவு, ஊழியர்களுக்கான ஊதியம், போக்குவரத்து உள்ளிட்ட, பல வகைச் செலவுகளைக் குறைக்க முடியும்.
- ஒரே இடத்திலிருந்தபடி உலகின் எந்த மூலையில் இருப்பவருடன் வேண்டுமானாலும் தொடர்பு கொண்டுவிட முடியும் என்பதால், உலகளாவிய வணிக வலைப்பின்னல்கள் அனைவருக்கும் சாத்தியமாகியுள்ளன.
- உலகளாவிய வருமானத்தையும் வாழ்க்கைத் தரத்தையும் பன்மடங்கு அதிகரிப்பதற்கான சாத்தியங்களை நான்காம் தொழிற்புரட்சி உள்ளடக்கியிருக்கிறது.

**பாதகங்கள்**

- நான்காம் தொழிற்புரட்சி கொண்டுவரும் வசதிகள் யாவும் டிஜிட்டல் உலகுடன் தம்மைத் தொடர்புபடுத்திக் கொள்ள முடிந்தவர்களுக்கு மட்டுமே பயனளிக்கின்றன.
- இந்தியா உள்ளிட்ட வளரும் நாடுகளிலும் ஏழை நாடுகளிலும் திறன்பேசி, இணையம் உள்ளிட்ட எந்த வசதியையும் பயன்படுத்தாமல் டிஜிட்டல் உலகுக்கு வெளியே பெரும்பாலோர் இருக்கிறார்கள்.
- நான்காம் தொழிற்புரட்சி கொண்டுவரும் மாற்றங்கள் யாவும் இந்த டிஜிட்டல் பிரிவினையை ஆழப்படுத்தி, அதன் விளைவாக சமத்துவமின்மையை அதிகரிக்கின்றன.
- மேலும், வாழ்க்கையின் ஒவ்வொரு அங்குலத்திலும் ஊடுருவும் இணைய, டிஜிட்டல் கருவிகளால் தனிநபர்களின் அந்தரங்கம் மிகப்பெரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருக்கிறது.
- மனிதர்கள் இடைவெளியில்லாமல் கண்காணிக்கப்படும் ஆபத்து பெரிதாகியிருக்கிறது.
- தானியங்கிமயம் அதிகரித்து வருவதால் மனிதர்களுக்கான வேலைவாய்ப்பு குறைந்து வருகிறது. தானியங்கிமயத்தால் வேலைவாய்ப்பு குறையும் அதே வேளையில், புதிய தொழில்நுட்பங்களைக் கையாள்வதற்கான திறமைசாலிகளின் தேவையும் அதிகரிக்கிறது.
- எனவே, இத்தகைய தொழில் நுட்பங்களில் அறிவும் திறமையும் மிக்கவர்களாக இளைஞர்களை உருவாக்கும் வகையில், கல்வித் துறையிலும் திறன் பயிற்சிகளிலும் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும்.

## இசைவுத் தீர்வு முறை

- வழக்கு விசாரணைகளுக்கு முன்பு இத்தகைய இசைவுத் தீர்வு நடவடிக்கைகளைக் கட்டாயமாக்குவது, வழக்கின் முடிவுகளை மேலும் தாமதிக்கச் செய்யும் என்ற கருத்தையும் தெரிவித்திருப்பது விவாதங்களுக்கு வாய்ப்பளிக்கிறது.
- வழக்குகளுக்கு முன்பாக மட்டுமின்றி, வழக்கின் தீர்ப்பு திருப்தியளிக்காமல் மேல்முறையீட்டுக்குச் செல்லும் நிலையிலும்கூட இசைவுத் தீர்வை அனுமதிக்க வேண்டும்.
- சட்டரீதியான தீர்வு என்பதற்காக நீதிமன்றத் தீர்ப்புகளுக்காகக் காத்திருக்காமல், தரப்பினர்கள் தங்களுக்குள் வழக்கின் எந்த நிலையிலும், பேசித் தீர்த்துக் கொள்வதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும்.
- உரிமையியல் வழக்குகளும் வணிகம்சார் வழக்குகளும் பொருளியலுடன் நேரடித் தொடர்புடையவை என்பதால், அவற்றின் தாக்கம் பொருளியல் நடவடிக்கைகளையும் பாதிக்கக்கூடும் என்ற நோக்கிலிருந்து இச்சிக்கலை அணுகுவதே சரியாக இருக்கும்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

## முதல் பிரஜையும் முதன்மை பிரஜையும்

- பொதுத் தேர்தலுக்குப் பின் யாரை பிரதமர் பொறுப்பு ஏற்க அழைக்கலாம் என முடிவு செய்யும் அதிகாரம் என்னிடம் உள்ளது. அவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பவனும் நானே! நாடாளுமன்றம் நிறைவேற்றும் மசோதாக்களை நான் ஒப்புதல் தந்தால் மட்டுமே, அவை சட்ட வடிவம் பெறும்.
- அமைச்சரவையின் தீர்மானங்களை திருப்பி அனுப்பும் அதிகாரமும் எனக்கு உண்டு.
- விளக்கம் கேட்கும் உரிமையும் எனக்கு உண்டு.
- ஒரு அமைச்சரின் செயல்பாடு திருப்தி அளிக்கவில்லை என்றால் அவரைப் பதவி நீக்கம் செய்யும் உரிமை எனக்கு உண்டு.
- ஆளும் அரசை பதவி விலகச் சொல்லும் அதிகாரமும் எனக்கு உண்டு.
- அரசுக்கும் அமைச்சர்களுக்கும் ஆலோசனை கூறுவதற்கும், நல்ல முடிவுகள் எடுக்க ஊக்கப்படுத்துவதற்கும், தவறான முடிவு எடுப்பதாகத் தெரிந்தால் எச்சரிக்கை செய்வதற்கும் எனக்கு அதிகாரம் உள்ளது.
- அவசரநிலை அறிவிக்கும் அதிகாரமும் உண்டு என்றார்.
- இந்திய தேசத்தின் நிர்வாகத் தலைவர் குடியரசுத் தலைவரே. அவர் தேசத்திற்கு ஒரு கலங்கரை விளக்கம் போன்றவர்.
- அரசியலமைப்புச் சட்ட வரைவு தயாரிக்கப்பட்டபோது, பேராசிரியர் கே.டி.ஷா, அதிபர் நேரடியாக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.
- பிரதமரின் குரலை அப்படியே பிரதிபலிக்கும் கிராமபோன் தட்டாக, நீட்டிய இடத்தில் கையொப்பம் இடுபவராக இருக்கக்கூடாது என்று கூறினார்.
- அதற்கு சட்டமேதை பி.ஆர்.அம்பேத்கர் பிரதமர் குடியரசுத் தலைவர் என்று இரண்டு அதிகார மையங்களை உருவாக்குவது சீரான ஆட்சிமுறைக்கு உகந்ததல்ல.
- அது சிக்கலுக்கு வழிவகுக்கும், குடியரசுத் தலைவர் என்பவர் பெயரளவில்தான் நிர்வாகத் தலைவர். முடிவு எடுக்கும் உரிமை அவருக்கு இல்லை என்று பதில் தந்தார்.
- தேர்தலில், எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் தனிப்பெரும்பான்மை கிடைக்காத குழப்பமான சூழல் எழுமானால், குடியரசுத் தலைவரின் நிலைப்பாடு முக்கியத்துவம் பெறுகிறது.
- அமைச்சரவையின் பரிந்துரை, அரசியல் சட்டத்திற்கு முரணானதாகவோ, மக்கள் நலனுக்கு எதிரானதாகவோ இருப்பதாக அவர் கருதினால் அப்பரிந்துரை குறித்து விளக்கம் கேட்கலாம். மறுபரிசீலனை செய்யுமாறு கூறலாம்.
- பீகார் அரசைக் கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என்ற வாஜ்பாய் அரசின் பரிந்துரையை கே.ஆர்.நாராயணன் ஏற்க மறுத்ததோடு, முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அறிவுரையும் வழங்கினார்.

## நூலகம்

- நான் மறைந்த பிறகு என் உடல் மீது மலர் மாலைகளை வைக்க வேண்டாம்; என் மடிமீது புத்தகங்களைப் பரப்புங்கள் என்று புத்தகங்கள் மீதான தன் தீரா வேட்கையை வெளிப்படுத்தியவர் நாட்டின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு.

### உலகின் முதல் நூலகம்

- நிறுவப்பட்டது : கி.மு.7-ஆம் நூற்றாண்டு
- மத்திய கிழக்கின் நினேவா பகுதியில் (தற்போதைய இராக்) ஆசிரிய ஆட்சியாளர் அசுர்பனிபால் என்பவரால் அமைக்கப்பட்டது.
- பண்டைய மத்திய கிழக்கின் எழுத்துகளால் ஆன சுமார் 30,000 கல்வெட்டுகளையும் பதிவுகளையும் கொண்டிருந்தது.
- அப்போதைய அறிஞர்களின் கட்டுரைகளும் இடம்பெற்றிருந்தன.

### நாகரிகங்களின் நூலகங்கள்

- உலகின் பல்வேறு பகுதிகளில் நாகரிகங்கள் தோன்றி வளர்ந்த போது நூலகங்களும் வளர்ந்தன.
- அலெக்ஸாண்ட்ரியா நூலிகம், எகிப்து

  கிரீஸ், பாரசீகம்(இன்றைய ஈரான்), எகிப்து, இந்தியா உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த சுமார் 7,00,000 ஆவணங்கள் இருந்தன.
- கலீஃப் அல் - அகம் நூலகம்

  இடம் : கோர்டோவா, ஸ்பெயின்

நிறுவப்பட்டது : 10-ஆம் நூற்றாண்டு

4,00,000-க்கும் அதிகமான புத்தகங்கள்

**உலகின் மிகப்பெரும் நூலகங்கள்**

**1. பிரிட்டிஷ் நூலகம், லண்டன்**

- நிறுவப்பட்டது : 1973
- புத்தகங்கள், இதழ்கள், நாளிதழ்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை. 17 கோடி முதல் 20 கோடி வரை

**2. லைப்ரரி ஆஃப் காங்கிரஸ், வாஷிங்டன், அமெரிக்கா**

- நிறுவப்பட்டது : 1800
- அமெரிக்காவின் தேசிய நூலகமாக உள்ள நாடாளுமன்ற நூலகம்
- புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை 17 கோடி

**3. ஷாங்காய் நூலகம், சீனா**

- நிறுவப்பட்டது: 1847
- புத்தகங்கள் உள்ளிட்டவற்றின் எண்ணிக்கை 5.6 கோடி

**இந்தியாவில் முக்கிய, பழமையான நூலகங்கள்**

**திருவனந்தபுரம் நூலகம், கேரளம்**

- நிறுவப்பட்டது : 1829
- நிறுவியவர் : அரசர் ஸ்வாதி திருநாள்

**கன்னிமாரா நூலகம், சென்னை**

- நிறுவப்பட்டது : 1896
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று. நாட்டில் வெளியாகும் அனைத்து நூல்கள், இதழ்கள், நாளிதழ்களின் ஒரு பிரதி இங்கு பாதுகாக்கப்பட்டு வருகிறது.

**தில்லி பொது நூலகம்**

- நிறுவப்பட்டது : 1951
- புத்தகங்களின் எண்ணிக்கை : 18 லட்சம்
- ஹிந்தி, ஆங்கிலம், உருது, பஞ்சாபி உள்ளிட்ட பல்வேறு மொழி நூல்கள் உள்ளன.
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று.

**சரஸ்வதி மகால் நூலகம், தஞ்சாவூர்**

- நிறுவப்பட்டது : நாயக்க மன்னர்கள் காலம்
- நாட்டின் பல்வேறு மொழிகளில் எழுதப்பட்ட அரிய ஓலைச்சுவடிகள் இங்கு பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

**இந்திய தேசிய நூலகம், கொல்கத்தா**

- நிறுவப்பட்டது : 1836
- புத்தகங்களின் எண்ணிக்கை : 26,41 லட்சம்
- நாட்டுக்கு அர்ப்பணிப்பு : பிப்ரவரி 1, 1953
- தேசிய புத்தக களஞ்சியங்களுள் ஒன்று

**சேஷாத்ரி நினைவு நூலகம், பெங்களூரு**

- நிறுவப்பட்டது : 1915
- புத்தகங்களின் எண்ணிக்கை : 3 லட்சம்
- விருது : ராஜா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளை விருது (1999-2000)

SURESH'

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

## பொய்க்காமல் பெய்யும் மழை

- இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை வழக்கத்தை விட ஒரு வாரம் முன்னதாகவே தொடங்கிவிட்டது. கடந்த 20 ஆண்டுகளில் இதுவரை ஐந்து முறைதான் தென்மேற்கு பருவமழை முன்னதாக தனது பொழிவை ஆரம்பித்திருக்கிறது.
- இந்தியாவின் பருவமழைப் பொழிவின் பெரும்பகுதி தென்மேற்கு பருவமழையால் பெறப்படுகிறது என்பதால் இந்திய விவசாயத்திற்கும், பொருளாதாரத்திற்கும் அது மிகவும் முக்கியமானது.
- தென்மேற்கு பருவமழைக்கு மூன்று முக்கியத்துவங்கள் உண்டு.
- முதலாவது, காரீஃப் பயிர்களின் மகசூலுக்கு, குறிப்பாக நெல் பயிருக்கு, போதுமான பருவமழை அவசியம். அதன்மூலம்தான் உணவுப் பொருட்களின் விலை மட்டுப்படும் என்பது மட்டுமல்லாமல், இந்தியாவின் உணவுப் பாதுகாப்பும் உறுதிப்படும்.
- வெப்ப அலையால் கோதுமை விவசாயம் பாதிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இப்போதைய பருவமழையின் மூலம் குளிர்கால கோதுமை மகசூல் உறுதிப்படக்கூடும்.
- இரண்டாவது, கொள்ளை நோய்த்தொற்று இந்தியப் பொருளாதாரத்தை புரட்டிப்போட்ட போது பெரும்பாலானோருக்கு வேலை வாய்ப்பையும், இந்தியாவின் உணவுத் தேவையையும் வழங்கியது விவசாயம்தான்.
- ஊரகப்புற பொருளாதாரத்தின் அடிப்படை விவசாயம் எனும் நிலையில், பருவமழைப் பொழிவில் ஏற்படும் குறைவு உணவுப் பொருள் உற்பத்தியை பாதிப்பது மட்டுமல்லாமல், ஊர் உணவுப் பொருள் உற்பத்தியை பாதிப்பது மட்டுமல்லாமல், ஊர் நகர்ப்புற வருமானத்தையும் பாதிக்கும். அதனால், தென்மேற்கு பருவமழை எப்போதுமே எதிர்பார்க்கப்படுகிறது.
- மூன்றாவது, உலக அளவில் உணவுப் பொருள்களின் விலைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. உக்ரைன் பிரச்சனை உணவு உற்பத்தியை மட்டுமல்ல, உணவுத் தேவையையும் பாதித்திருக்கிறது.
- பல நாடுகளில் அடிப்படைத் தேவைக்கான அரிசி, கோதுமை, பார்லி போன்றவற்றிற்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது உணவுப் பொருள்களின் விலையைக் கடுமையாக அதிகரித்திருக்கிறது.
- இந்தியாவில் தென்மேற்கு பருவமழையால் உணவு உற்பத்தி உறுதிப்படுத்தப்பட்டால் மட்டுமே நம்மால் நிலைமையை சமாளிக்க முடியும்.

## அண்டார்டிக் மசோதா

- அண்டார்டிக் ஒப்பந்தம் கடந்த 1959-இல் கையொப்பமான நிலையில், இதில் இந்தியா கடந்த 1983-இல் இணைந்தது.
- இந்த ஒப்பந்தத்தின் பிரதான நோக்கம் அண்டார்டிகா பகுதியானது ராணுவ நடவடிக்கைகள் அல்லது வேறு தவறான செயல்பாடுகளுக்கு பயன்படுத்தக்கூடாது என்பதாகும்.
- ஆய்வு மையங்களை கொண்டுள்ள நாடுகள், பருவ நிலை மற்றும் புவியியல் சார்ந்த செயல்பாடுகளில் மட்டுமே ஈடுபட வேண்டும் என்பதையும் உறுதி செய்கிறது.
- அண்டார்டிகாவில் மைத்ரி, பாரதி ஆகிய இரு ஆய்வு மையங்கள் இந்தியா சார்பில் அமைக்கப்பட்டு செயல்பாட்டில் உள்ளன. இவ்விரு ஆய்வு மையங்களின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் மற்றும் அங்குள்ள இந்தியர்களை இந்திய சட்ட வரம்புகளின் கீழ் கொண்டுவர தற்போதைய மசோதா வழி வகுக்கிறது.
- இந்திய அரசின் அனுமதி அல்லது அண்டார்டிக் ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ள வேறு தரப்பின் எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் அங்கு இந்திய ஆராய்ச்சியாளர்கள் ஆய்வுப்பணி மேற்கொள்வதைத் தடுக்கவும், இந்த விதிகளை மீறுவோருக்கு அபராதம் விதிக்கவும் வழிவகை செய்கிறது.
- அண்டார்டிகாவில் ஆய்வுப் பணிகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பாக நிதியம் அமைப்பதற்கான அம்சமும் மசோதாவில் இடம்பெற்றுள்ளது.

## கங்காரு நீதிமன்றம்

- புதிய ஊடகங்களுக்கு தகவல்களை பரப்பும் திறன் அதிகம் உள்ளது. ஆனால், அவற்றுக்கு நல்லது எது, தீயது எது என தெரியாமல் இருப்பது போல் தோன்றுகிறது.
- அனுபவம் மிக்க நீதிபதிகளால் கூட தீர்வை கண்டறிய சிரமப்படும் விஷயங்கள் குறித்து ஊடகங்கள் சில நேரங்களில் விவாத நிகழ்ச்சிகள் மூலம் கட்ட பஞ்சாயத்து (கங்காரு நீதிமன்றம்) நடத்துவதை நாம் பார்க்கிறோம்.

- பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் ஊடக விவாதங்கள் வழிகாட்டியாக இருக்க முடியாது.
- நீதி வழங்க வேண்டிய விஷயங்களில், தவறான தகவல்கள், கொள்கைகளுடன் கூடிய விவாதங்கள் ஆரோக்கியமான ஜனநாயகத்துக்கு கேடு விளைவிப்பதாக இருக்கின்றன.
- ஊடகம் மூலம் பரப்பப்படும் பாரபட்சத்துடன் கூடிய தகவல்கள் ஜனநாயகத்தை பலவீனமாக்குகின்றன.
- ஊடகங்கள் சுயஒழுங்குமுறையுடனும், கட்டுப்பாட்டுடனும் செயல்பட வேண்டும். எலக்ட்ரானிக் மற்றும் சமூக ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

**தேசியக்கொடியை இனி இரவிலும் பறக்கவிட அனுமதி**

- நாட்டின் 75-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, ஆகஸ்ட் 13 முதல் 15-ஆம் தேதி வரை வீடுகள் தோறும் தேசியக்கொடியை ஏற்றுமாறு மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.
- இந்திய தேசியக்கொடி ஏற்றப்படுதல், பயன்பாடு ஆகியவை கடந்த 2002-ஆம் ஆண்டின் இந்திய தேசியக் கொடி சட்டம் மற்றும் 1977-ஆம் ஆண்டின் தேசிய சின்னங்கள் அவமதிப்பு தடுப்பு சட்டத்தால் கட்டுப்படுத்தப்படுகின்றன.
- தேசியக் கொடியை பொதுமக்களின் வீட்டில் வெளிப்படையாக காட்சிப்படுத்தவும், அதனை பகல் மட்டுமின்றி இரவிலும் பறக்கவிடவும் அனுமதிக்கும் வகையில் இந்திய தேசியக்கொடி சட்டத்தில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- கைகளால் நூற்கப்பட்ட தேசியக்கொடி மட்டுமன்றி இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட கொடிகளையும் பயன்படுத்தலாம்.
- முந்தைய விதிமுறைகளின்படி தேசியக்கொடியானது சூரிய உதயம் முதல் சூரிய அஸ்தமனம் வரை பறக்கவிட அனுமதி இருந்தது.
- இயந்திரத்தால் தயாரிக்கப்பட்ட மற்றும் பாலியஸ்டர் கொடிகள் அனுமதிக்கப்படாமல் இருந்தது குறிப்பிடத்தக்கது.

## செர்ன்

- பத்து ஆண்டுகளுக்கு முன்னர் ஹிக்ஸ் போஸான் துகள் கண்டறியப்பட்டது, இயற்பியல் துறையில் நிகழ்ந்த மிகப் பெரிய சாதனையாகக் கருதப்பட்டது.
- அந்தத் துகள் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அதற்கு அடிப்படையாக இருந்த லார்ஜ் ஹாட்ரன் கொலைடர் (LHC) பழுதுபார்ப்பதற்காக 2013 முதல் 2015 வரை மூடப்பட்டது.
- இரண்டு மடங்கு அதிக சக்தியுடன் 2015 முதல் 2018 வரை LHC மீண்டும் இயங்கியது.
- குவார்க்ஸ் போன்ற நுட்பமான அடிப்படைத் துகள் குறித்த மேலாதிக்கத் தகவல்களை லார்ஜ் ஹாட்ரன் கொலைடர் அளித்தாலும், ஹிக்ஸ் போஸான் போன்ற திருப்புமுனைக் கண்டுபிடிப்புகளை அது நிகழ்த்தவில்லை என்ற விமர்சனம் உள்ளது.
- 'எந்த ஒரு பொருளுக்கும் நிறை (Mass) எனும் குணத்தை அளிக்கிறது கடவுள் துகள்' என ஹிக்ஸ் போஸான் கண்டுபிடிப்பை வேடிக்கையாகக் குறிப்பிடுவது உண்டு.
- இந்தக் கண்டுபிடிப்பை நிகழ்த்திய செர்ன் (CERN) ஆய்வுக்கூடம் சில நாட்களுக்கு முன்னர் செலஸ்டா CELESTA (CERN LLatchup Experiment STudent sAtellite) எனும் கையளவே உள்ள சிறிய செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தியுள்ளது.
- ஒரு கிலோ எடை, பத்து சென்டிமீட்டர் நீள, அகல, உயரம் உடைய கனசதுர செயற்கைக்கோள் இது.
- அதனால்தான் இது 'கியூப்சாட்' எனப்படுகிறது. பூமியைச் சுற்றிப் படர்ந்துள்ள வான் ஆலன் கதிர்வீச்சுப் பட்டை எனும் விண் பகுதியில் இது ஆய்வு நடத்தவுள்ளது.
- இந்த நுண் செயற்கைக்கோள் ரேடமான் (RadMon) எனும் கதிரியக்கப் பாதிப்பை அளவிடக்கூடிய கருவியை ஏந்திச் செல்கிறது. தன்னிடமுள்ள மின்னணுக் கருவிகளில் கதிரியக்கம் ஏற்படுத்தும் சேதாரம் குறித்து ரேட்மான் ஆய்வு செய்யும்.

**கதிர்வீச்சு நிரம்பிய விண்வெளி**

- சூரியன் உட்பட விண்மீன்கள் அனைத்தும் எலெக்ட்ரானைப் போன்ற மின்னேற்றம் கொண்ட அயனித் துகள்களை எல்லா நேரமும் வெளியிட்டு வருகின்றன.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- சூரியனில் சூறாவளி ஏற்படும்போது இதன் தீவிரம் அதிகரிக்கும். எங்கோ விண்ணில் வெடித்துச் சிதறும் விண்மீன்களிடமிருந்து பெரும் ஆற்றலோடு வெளிப்படும் இந்த அண்டக் கதிர்கள் பூமியை நோக்கி வரும்.
- மின்னேற்றம் கொண்ட அயனித் துகள்கள் மோதும்போது, மின்னணுக் கருவிகள் பழுதடையும். மழைநீர் தொடர்ச்சியாகப் படுவதால் இரும்புக்குழாய் மெல்ல மெல்லத் துருப்பிடிப்பது போல, காலப்போக்கில் மின்னணுக் கருவிகள் சீர்கெட்டுச் செயலிழந்துவிடும்.
- மழையிலிருந்து குடை நம்மைப் பாதுகாப்பது போலப் பூமியின் காந்தப்புலம் ஆற்றல்மிக்க இந்த கதிர்கள் பூமிக்குள் நுழையவிடாமல் தடுத்துவிடுகிறது.
- காந்தப்புலத்தில் மோதும் இந்தக் கதிர்கள் பூமிக்கு மேலே இரண்டு அடுக்குகளாகப் போர்வைபோலப் படர்ந்துள்ளன.
- இந்த அடுக்குகள் உள், வெளி வான் ஆலன் கதிர்வீச்சுப் பட்டைகள் என அழைக்கப்படுகின்றன.

## மின்னணுக் கருவிகளுக்கு ஆபத்து

- பூமியின் வளிமண்டலத்துக்கு மேலே வான் ஆலன் கதிர்வீச்சுப் பட்டைகளின் ஊடே சுற்றவரும் செயற்கைக் கோள்களில் பெரும் சேதாரம் ஏற்படும். எனவேதான், சூரியப் புயல் முதலியவை ஏற்பட்டு, அயனித்துகள் சூறாவளி பூமியை வந்தடையும் தருவாயில், செயற்கைக்கோள்கள் தற்காலிகமாக முடக்கப்படுகின்றன.
- குதிரைப் பந்தயங்களின்போது மைதானத்தில் குதிரை சுற்றி சுற்றி வேகமாக ஓடுவதுபோல, லார்ஜ் ஹாட்ரன் கொலைடர் (LHC) எனப்படும் வட்ட வடிவமான துகள் முடுக்கி இயந்திரத்தில் புரோட்டான் போன் துகளை வெகு வேகமாக முடுக்கிவிட்டுச் சட்டென்று மோதச் செய்யப்படும்.
- அப்போது பிரபஞ்சம் உருவான காலத்தில் இருந்த நிலை ஏற்படும். அந்தக் கலத்தில் இருக்கும் துகள்கள் மோதலில் சிதறி வெளிப்படும். இந்தத் துகள்களை நுட்பமாக இனம் காணும் வகையில் வடிவமைக்கப்பட்டதுதான் ரேட்மான் (RadMon) கருவி.

## ஆய்வு

- சுமார் 1000 கி.மீ உயரத்தில் போர்வை போலப் படர்ந்திருக்கும் உள்வான் ஆலன் கதிர்வீச்சுப் பட்டைப் பகுதியில்தான், மனிதர்களை ஏந்திச் சென்று கொண்டுள்ள சர்வதேச விண்வெளி நிலையம் உள்ளிட்ட தாழ் உயர செயற்கைக்கோள்கள் சுற்றிவருகின்றன.
- விண்வெளிக் கதிரியக்கத்தால் செயற்கைக் கோள்களுக்கு மட்டும் ஆபத்து இல்லை. சர்வதேச விண்வெளி நிலையத்தில் தங்கி ஆய்வு மேற்கொள்ளும் விண்வெளி வீரர் – வீராங்கனைகள், எதிர்காலத்தில் நிலவு, செவ்வாய்க்கு விண்வெளிப் பயணம் மேற்கொள்ளும் விண்வெளி வீரர், வீராங்கனைகளுக்கும் விண்வெளிக் கதிரியக்கம் ஒரு சவாலே.

## விண்ணுக்கு முன்னே...

- பூமியிலிருந்து சுமார் 1,000 கி.மீ. உயரத்தில் சுற்றும் செயற்கைக்கோள்களில் எந்தெந்த வகை அயனித்துகள்கள் மே ாதுகின்றன, எவ்வளவு வீரியமாக இந்தக் கதிரியக்கம் உள்ளது.
- செயற்கைக்கோள் செயல்படுமா எனப் பரிசோதிக்க ரேட்மான்(RadMon) கருவியைப் பயன்படுத்தி ‘சார்ம்’ (CERN’s High energy Accele Rator Mixed Field facility - CHARM) எனும் பரிசோதனை நிலையத்தை செர்ன் ஆய்வுக்கூடம் உருவாக்கியுள்ளது.
- செலஸ்டா தரும் தகவல்கள் இந்த சோதனைக் கூடத்தை மேம்படுத்த உதவும்.

## புதுமை படைக்கும் ஆய்வு

- இந்தத் தகவல்களைக் கொண்டு மேலும் வலுவான கதிரியக்கக் கேடயங்களை உருவாக்கலாம். எதிர்காலத்தில் விண்ணில் ஏவப்படும் செயற்கைக் கோள்களில் மின்னணுக் கருவிகளைப் பாதுகாக்கலாம்.
- விண்வெளி பயணம் மேற்கொள்ளும் விண்வெளி வீரர், வீராங்கனைகளையும் விண்வெளிக் கதிரியக்க ஆபத்தில்இருந்து பாதுகாத்துக் கொள்ளலாம்.
- ரேட்மான் (RadMon) கருவியும் ‘சார்ம்’ சோதனைக்கூடமும், ‘வேர்ல்ட் வைடு வெப்’ எனப்படும் வலைதளத் தொழில் நுட்பமும் செர்ன் ஆய்வுக்கூடத்தில்தான் உருவானது என்பது குறிப்பிடத்தக்கது.

## விண்வெளியிலும் சீனா தனி ராஜ்ஜியம்

- சர்வதேச விண்வெளி மையத்தின் உறுப்பு நாடுகளில் ஒன்றாக இருந்து வந்த சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக அதில் இருந்து விலகி விட்டது.
- தற்போது, விண்வெளியில் தனக்கென தனி விண்வெளி நிலையத்தை உருவாக்கி வருகிறது. இதன் பணிகள் இந்தாண்டு இறுதியில் முடிகிறது.
- இந்த விண்வெளி மையத்துடன் இணைக்கப்பட உள்ள 'வென்ஷியன்' என பெயரிடப்பட்ட ஆய்வுக் கூடத்தை, ஹைனான் மாகாணத்தில் உள்ள வென்சாங் ஏவுதளத்தில் இருந்து 'லாங் மார்ச் 5பி ஒய் 3 கேரியர்' ராக்கெட் மூலமாக சீனா வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியது.

## ஜனாதிபதி மாளிகை

- புதுடெல்லியில் ராஜபாதையின் மேற்கு கோடியில் ரைசினா குன்றுப்பகுதியில் அமைந்திருக்கும் இப்பெரும் மாளிகை
- இதன் கட்டுமான பணியை 1912-ம் ஆண்டு தொடங்கியது. 17 ஆண்டுகளில் 1929-ல் அப்பணி முடிந்தது.
- வைசிராயின் வாழிடமாக இருந்ததால், சுதந்திரத்துக்கு முன்பு வரை இது வைசிராய்ஸ் ஹவுஸ் என்றே அழைக்கப்பட்டது. நாடு விடுதலை பெற்ற பின்பு 1950-ம் ஆண்டு வரை 'கவர்ன்மென்ட் ஹவுஸ்' எனப்பட்டது.
- ஜனாதிபதி மாளிகை வளாகத்தின் மொத்த பரப்பளவு 330 ஏக்கர் என்றால், அதில் ஆங்கில 'எச்' வடிவ மாளிகை கட்டிடம் மட்டும் 5 ஏக்கரில் அமைந்திருக்கிறது.
- பிரதான கட்டிடத்தின் 4 தளங்களில் 340 அறைகள் உள்ளன.
- ஜனாதிபதி மாளிகையின் தளப்பரப்பளவு மட்டும் 2 லட்சம் சதுர அடி. இதன் காரிடார்கள் நீளமே சுமார் 2 1/2 கி.மீ ஆகும்.
- ஜனாதிபதி மாளிகையை வடிவமைத்தவர், ஆங்கிலேய கட்டிடக்கலை நிபுணரான எட்வின் லாண்ட்சீர் லுட்யன்ஸ்.
- கிரேக்க, ரோமானிய கட்டிடக்கலை பாணியுடன், இந்திய கட்டிடக்கலை நுணுக்கங்களையும் குழைத்து இக்கட்டிடத்தை கட்டினார் லுட்யன்ஸ்.
- கவர்னர் ஜெனரலாக பதவி வகித்த முதல் இந்தியரான ராஜாஜி தான் ஜனாதிபதி மாளிகையில் (அப்போது இது கவர்ன்மெ ன்ட் ஹவுஸ்) குடியேறிய முதலாவது இந்தியரும் கூட. முதலாவது ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தின் பதவிக்காலத்திலேயே இது 'ராஷ்டிரபதி பவன்' என்று பெயர்மாற்றம் பெற்றது.
- ஜனாதிபதி மாளிகையில் ஏகமனதாக எல்லோரது இதயத்தையும் கொள்ளையடிப்பது, இங்கு 15 ஏக்கரில் பரந்து விரிந்துள்ள மொகலாய தோட்டம்.
- மகாத்மா காந்தியை ஜனாதிபதி மாளிகையின் பிரம்மாண்டமும், படாடோபமும் கவரவில்லை. அதை ஓர் ஆஸ்பத்திரியாக மாற்றிவிடலாம் என்று கருத்து கூறினார் அவர்.
- ஜனாதிபதி மாளிகையே கண்ட வித்தியாசமான ஜனாதிபதி, அனைத்து மக்களின் அன்புக்குரிய அப்துல் கலாம்தான். ஒரு பயணி போல ஒற்றை சூட்கேசுடன் இங்கு உள்ளே நுழைந்த அவர், அந்த ஒரே சூட்கேசுடன் விடை பெற்றார்.

### மூத்த குடிமக்கள்

- பழைய வரி விதிப்பு முறை
- புதியவரிவிதிப்பு முறை

## ஆட்சிமொழி செயலாக்கம்

- கடந்த 1956 நவ.1 – ஆம் நாள், மொழி வாரியாக மாநிலங்கள் பிரிக்கப்பட்டபோது, தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்த இன்றைய தமிழகம், சென்னை ராஜதானி என அழைக்கப்பட்டது.
- ஹிந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் மூலம் கடந்த 1967-இல் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த திமுக, 1967 ஜுலை 18-ஆம் தேதி சென்னை ராஜதானி என்பதை, தமிழ்நாடு என பெயர் மாற்றம் செய்யும் தீர்மானத்தை நிறைவேற்றியது.
- பேரறிஞர் அண்ணாதுரை, தமிழ்நாடு பெயர் மாற்றம் தீர்மானம் கொண்டுவந்த ஜுலை 18-ஆம் நாள் இனி தமிழ்நாடு தினமாக கடைப்பிடிக்கப்படும் என இன்றைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- இதுவரை தமிழ்நாடு தினம் கடைப்பிடிக்கப்பட்டு வந்த நவ.1 - ஆம் தேதி, எல்லைக் காவலர்கள் நினைவு தினமாக கடைப்பிடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.
- தமிழகத்தில் பணிபுரியும் அரசு ஊழியர்கள் அனைவரும் தமிழில் கையொப்பமிட வேண்டும் என 1978-ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது அரசாணை வெளியிடப்பட்டது.
- ஆட்சிமொழி செயலாக்கத்தைக் கண்காணிக்க உருவாக்கப்பட்ட தமிழ் வளர்ச்சித்துறை அதிகாரமில்லாத துறையாக இருக்கிறது.

## பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டம்

- தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் 2019-ஆம் ஆண்டு அறிக்கை இந்தியாவின் நகர்ப்புறங்களில் 310 லட்சம் குடும்பங்கள் வாடகைக்கு வாழ்கின்றன என்றும் அவர்களில் பெரும்பாலோர் குடிசைகளில் உள்ளனர் என்றும் கூறுகிறது.
- பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா திட்டத்தின் கீழ் பெருநகரங்களில் மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் உருவாக்கப்படவுள்ளன.
- தமிழகத்தில் சென்னை, ஸ்ரீபெரும்புதூர், ஓசூர் ஆகிய இடங்களில் மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் அமைக்கப்படவுள்ளன.
- மத்திய வீட்டுவசதி - நகர்ப்புற வறுமை ஒழிப்பு அமைச்சகத்தின் தொழில்நுட்பக் குழு 187.8 லட்சம் இந்திய குடும்பங்களுக்கு இதுபோன்ற வீடுகள் தேவை என்று மதிப்பிட்டுள்ளது.
- மலிவு வாடகை வீடு திட்டத்தின்படி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் இவ்வீடுகளுக்கான வாடகையை நிர்ணயம் செய்யும்.
- வாடகை ஒப்பந்தம் கையொப்பமிடும் நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை 8% வாடகையை உயர்த்திக் கொள்ளலாம்.
- ஆயினும், ஐந்து ஆண்டுகளில் அதிகபட்சமாக 20% மட்டுமே வாடகையை அதிகரிக்கலாம் என்ற நிபந்தனையை உள்ளாட்சி அமைப்புகளுக்கு விதிக்கப்பட்டுள்ளது.
- 2018-ஆம் ஆண்டு தேசிய மாதிரி ஆய்வு அலுவலகத்தின் கணக்கெடுப்பு, வாடகை வீடுகளில் குடியிருக்கும் குடும்பம் செலவிடும் சராசரி வாடகை கிட்டத்தட்ட 3,324 ரூபாய் என்று கூறுகிறது.
- தண்ணீர், கழிவுநீர், அங்கன்வாடி மையங்கள், அரசுப் பள்ளிகள், சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை சேவைகளை மக்கள் பெற்றிடும் வகையில் மலிவு வாடகை வீட்டு வளாகங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## ஒற்றைக் கட்டளையின் கீழ் விரைவில் முப்படை செயல்பாட்டுப் பிரிவுகள்

- ராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை தற்போது தனித்தனி தலைமையின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன.
- போர்க்காலங்களில் முப்படைகளுக்கு இடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்துவது பெரும் சவாலாக உள்ளது.
- லடாக் எல்லைப்பகுதியில் சீனாவின் அச்சுறுத்தலையும் ஜம்மு-காஷ்மீர் எல்லையில் பாகிஸ்தான் பயங்கரவாதி-களின் அச்சுறுத்தலையும் இந்தியா தொடர்ந்து எதிர்கொண்டு வருகிறது.
- முதல் முப்படைத் தலைமைத் தளபதியாக நியமிக்கப்பட்ட விபின்ராவத் கடந்த ஆண்டு இறுதியில் நிகழ்ந்த விபத்தில் காலமானார்.
- பாதுகாப்புத் தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் முதல் 25 நாடுகளில் இந்தியாவும் உள்ளது. தற்போதைய சூழலில் ஆண்டுக்கு ரூ.13,000 கோடி மதிப்பிலான தளவாடங்களை இந்தியா ஏற்றுமதி செய்து வருகிறது.

## அடிப்படை மாறாமல் கல்வியில் மாற்றம்

- பள்ளிக்கு உள்ளே எண்ணும் எழுத்தும் இயக்கம், வெளியே இல்லம் தேடிக் கல்வி மையம்.
- தரமான கல்விக்கு முதல், முக்கியமான நிபந்தனை போதுமான பள்ளிகள், போதுமான ஆசிரியர்கள். தமிழகத்தில் தேவையான அளவுக்குப் பள்ளிகள் உள்ளன.
- ஆனால், ஆசிரியர்கள் இல்லை, கடந்த 10 ஆண்டுகளாக ஆசிரியர் நியமனங்கள் நடைபெறவில்லை.
- அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட அங்கன்வாடி மையங்களில் ஆசிரியர்கள் இல்லை. அரசுப் பள்ளிகளில் தொடங்கப்பட்ட ஆங்கிலவழிப் பிரிவுகளுக்குப் பல இடங்களில் அதற்கான ஆசிரியர்கள் இல்லை.
- மழலையர் வகுப்பு தொடங்கி முதல் மூன்று வகுப்புகளுக்கு ஆசிரியர் - மாணவர் விகிதம் 1:10 என்றும், 4, 5 வகுப்புகளுக்கு 1 : 20 என்றும், மேல் வகுப்புகளுக்கு 1 : 30 என்றும் இருக்க வேண்டும்.

## மின் வாகன உலகம்

- காலநிலை மாற்றம் பெரும் அச்சுறுத்தலாக உருவெடுத்துள்ள நிலையில் உலக நாடுகள் பெட்ரோல், டீசல் வாகனங்களிலிருந்து மின்வாகனங்களை நோக்கி தீவிரமாக நகர்ந்து வருகின்றன.

### முன்னெடுப்புகள்

- 2013-ம் ஆண்டே மத்திய அரசானது 'தேசிய மின்சார இயக்கம் திட்டம் 2020' வெளியிட்டது.
- இதன் நோக்கம் தேசிய எரிசக்தி பாதுகாப்பு, வாகன மாசுபாடு மற்றும் உள்நாட்டு உற்பத்தி திறன்களின் மேம்பாடு தொடர்பான பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதாகும்.
- மின்வாகனத்தை நோக்கிய நகர்வை துரிதப்படுத்தும் நோக்கில் 2015-ம் ஃபேம் இந்தியா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- மூன்று ஆண்டுகளில் 10 லட்சம் இரு சக்கர மின்வாகனங்கள், 5 லட்சம் மூன்று சக்கர மின்வாகனங்கள், 55,000 நான்கு சக்கர மின்வாகனங்கள், 7000 மின் பேருந்துகளை பயன்பாட்டுக்குக் கொண்டுவரத் திட்டமிட்டது.
- 2021-ம் ஆண்டு மே மாதம் மத்திய அரசானது பேட்டரி சேமிப்பக உற்பத்தி தொடர்பாக உற்பத்தித் திறனுடன் இணைக்கப்பட்ட ஊக்கத் திட்டத்தை (PLI) அறிவித்தது.
- இது பேட்டரிகளின் உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவித்து இறக்குமதியை குறைப்பதை நோக்கமாகக் கொண்டது. இது மின் வாகனங்களின் விலையை கணிசமாகக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- 2030-ம் ஆண்டு வரை ஒவ்வொரு ஆண்டும் 5 சதவீத பேருந்துகளை மின் வாகனங்களாக மாற்றுவதோடு, நிறுவன வாகனங்கள் மற்றும் இ-காமர்ஸ் டெலிவரி, லாஜிஸ்டிக்ஸ் வாகனங்களை மின்வாகனங்களாக மாற்றவும் ஆறு முக்கிய நகரங்களில் உள்ள அனைத்து ஆட்டோக்களை 10 ஆண்டுகளுக்குள் மின் வாகனங்களாக மாற்றவும் தமிழ்நாடு அரசு தி ட்டமிட்டுள்ளது.

### சவால்கள்

- பேட்டரி சூடாகி வாகனங்கள் தீக்கிரையாவது சமீப காலத்தில் அதிகமாக வருவது மின்வாகனம் வாங்க நினைப்பவர்களின் மனதில் அச்சத்தை உருவாக்கியிருக்கிறது.
- மின்வாகனங்களில் பயன்படுத்தப்படும் பேட்டரிகள் இந்திய தட்பவெப்ப நிலைக்கு பொருத்தமற்றதாக இருக்கலாம்.
- மின்வாகனத்துறை என்பது மூன்று தளங்களில் செயல்படுகிறது.
  1. முதலாவது மின்வாகனத் தயாரிப்பு
  2. இரண்டாவது, மின்வாகனங்களை சார்ஜ் செய்வதற்கான உள்கட்டமைப்பு.
  3. மூன்றாவது பேட்டரி தயாரிப்பு.
- முதல் இரண்டு தளங்களில் இந்தியா வேகமாக முன்னேறி வருகிறது. பேட்டரி தயாரிப்பைப் பொறுத்தவரையில் இந்தியா மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளது.
- தற்போது உலகநாடுகள் பேட்டரி தயாரிப்பில்தான் தீவிர கவனம் செலுத்தி வருகின்றன.
- உலக அளவில் பேட்டரி உற்பத்தியில் சீனா முதல் இடத்தில் உள்ளது. பேட்டரி தயாரிப்பில் தன்னை மேம்படுத்திக் கொள்வதன் மூலம்தான் இந்தியா மின்வாகனத் துறையில் சிறந்து விளங்க முடியும்.

## ரூ. 2 லட்சம் மாத ஓய்வூதியம்

### பஸ்வான் வீடு

- டெல்லி ஜன்பத் சாலை 12ம் எண் முகவரியில் உள்ள பங்களா அவருக்கு ஒதுக்கப்பட்டது.
- மாத ஊதியத்தில் 50 சதவீதம், அதாவது ரூ. 2 லட்சம் அவருக்கு மாத ஓய்வூதியமாக கிடைக்கும்.
- தனது இறுதிக்காலம்வரை டெல்லியில் உள்ள ஆடம்பர பங்களாவில் அவர் வசிக்கலாம்.
- அவருக்கு ஒரு தனி செயலாளர், ஒரு கூடுதல் தனி செயலாளர், ஒரு தனி உதவியாளர், 2 பியூன்கள் ஆகியோர் ஒதுக்கப்படுவார்கள்.
- அலுவலக செலவாக ஆண்டுக்கு ரூ.1 லட்சம் வரை வழங்கப்படும்.
- இலவச மருத்துவ உதவியும், சிகிச்சையும் அளிக்கப்படும்.
- விமானம், ரெயில், கப்பல் ஆகியவற்றில் இந்தியாவில் எங்கு வேண்டுமானாலும் உயர் வகுப்பில் பயணம் செய்யலாம்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

**வாழ்க்கை துணைக்கு சலுகைகள்:**

- ஓய்வுபெற்ற ஜனாதிபதி பெற்றதில் 50 சதவீத தொகை, அவருக்கு மாத ஓய்வூதியமாக வழங்கப்படும்.
- இறுதிக்காலம் வரை மருத்துவ சிகிச்சை உண்டு.
- தனி செயலாளர், பியூன் ஆகியோருடன் அலுவலக செலவாக ஆண்டுக்கு ரூ. 20 ஆயிரம் வரை கிடைக்கும்.
- ஒரு இலவச தொலைபேசி, கார் ஆகியவையும், ஒரு நபரை துணைக்கு வைத்துக் கொண்டு, ஆண்டுக்கு 12 தடவை இந்தியாவில் உயர்வகுப்பு பயணமும் செய்யலாம்.

## மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி திட்டம்

- ராமகிருஷ்ணன் என்பரால் 1981ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட அமர்சேவா சங்கம் மாற்றுத்திறனாளிகள் நலன் மற்றும் மேம்பாட்டுக்காக பல்வேறு திட்டங்களை கடந்த 40 ஆண்டுகளாக செயல்படுத்தி வருகிறது.
- இலவச தங்குமிடம், உணவு, உடை, மருத்துவம், தொழிற்பயிற்சி ஆகியவற்றுடன் கூடிய மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான பள்ளியும் இந்த சங்கத்தால் நடத்தப்பட்டு வருகிறது.
- அமர்சேவா சங்கத்தின் 40-வது ஆண்டு விழா மற்றும் அமர்சேவா சங்கம் தமிழக அரசின் ஒருங்கிணைந்த கல்வி திட்டமான அனைவருக்கும் கல்வி இயக்கத்துடன் இணைந்து செயல்படுத்த உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த கல்வி திட்டம்.

**முன்னோடி திட்டம்**

- 1 முதல் 18 வயதுக்கு உட்பட்ட மாற்றுத்திறனாளி குழந்தைகள் ஆரோக்கியம், தரமான கல்வி, விளையாட்டு பயிற்சி, திறன் மேம்பாடு உள்ளிட்டவற்றை பெறும் வகையில் தமிழக அரசுடன் இணைந்து அமர்சேவா சங்கம் செயல்படுத்த உள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தை தொடங்கியுள்ளது.
- மாற்றுத்திறனாளிகளை குழந்தை பருவம் முதற்கொண்டு கண்டறிந்து, அவர்களின் மேம்பாட்டிற்கான கட்டமைப்பு வசதிகளை உறுதிப்படுத்தி, அவர்களுக்கு சமநிலை, சமவாய்ப்பு எனும் சமுதாய சமூகநீதியை நிலைநாட்டிட தமிழக அரசு முழுமூச்சுடன் செயலாற்றி வருகின்றது.

## மெட்டாவெர்ஸ்

- 'மெட்டாவெர்ஸ்' என்னும் இந்தப் புதிய தொழில்நுட்பம் பயனர்களுக்கு மெய்நிகர் தொழில்நுட்பத்தை அடுத்த படிநிலைக்கு எடுத்துச் செல்ல இருக்கிறது.
- இதன்மூலம், தகவல் தொழில்நுட்பம் மட்டுமல்லாமல் செயற்கையாக உருவாக்கப்பட்ட ஓர் உலகத்துக்கே நொடிப்பொழுதில் ஒருவரை அழைத்துச் செல்ல முடியும்.
- மனிதன் கண்ணால் பார்ப்பதை வைத்தே மூளை செயல்படுகிறது. அப்படி இருக்கையில் இந்தத் தொழில்நுட்பம் மனிதனின் கண்களை வேறொரு இடத்தில் இருப்பதாக நம்ப வைக்கிறது.
- அதனால், நம் மூளையும் அதையே நம்பி, அதில் காட்டப்படும் செயற்கை உலகத்தை உணர வைக்கிறது.
- இந்தத் தொழில்நுட்பத்தை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அனுபவம் வாயிலாக மட்டுமே இந்தத் தொழில்நுட்பத்தை அனுபவித்து உணர முடியும்.
- இது வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் பயன்படாமல் ஆரோக்கியம் தொடர்பான பயன்பாட்டுக்கும் வர இருக்கிறது. உதாரணமாக மருத்துவமனைக்குச் சென்று மருத்துவரைப் பார்க்க இயலாதவர்கள் இதன் மூலம் வெகு தொலைவில் உள்ள மருத்துவரை உடனடியாக மருத்துவமனைக்கே சென்று பார்த்த அனுபவத்தைப் பெற முடியும்.
- யோகா, நடனம் போன்ற பயிற்சி வகுப்புகள் இப்போது இருக்கும் வீடியோ கான்ஃபரன்சிங் தொழில்நுட்பத்தைக் காட்டிலும் 'மெட்டாவெர்ஸ்' தொழில்நுட்பத்தின் மூலம் இன்னும் கட்டுப்பாட்டுடன் பயிற்சி பெற முடியும்.
- முப்பரிமாண (3D) வடிவிலான மெய்நிகர் பொருட்களை இந்தத் தொழில்நுட்பம் மூலம் உருவாக்கி அதைச் சந்தைப்படுத்த 'NFT' போன்ற பிளாக் செயின் வாய்ப்புகள் பெருகி வருகின்றன.
- இன்னும் மூன்று ஆண்டுகளில் ஐந்தாம் தலைமுறை நெட்ஒர்க் வரும் பட்சத்தில் அதிவேக இணையவசதி மூலம் இந்தியர்கள் அதிகம் பார்க்கும் கிரிக்கெட் போன்ற விளையாட்டுகளை நாடுகளைத் தாண்டி நேரில் சென்று மைதானத்திலேயே பார்க்கும் அனுபவத்தை வீட்டிலிருந்தே பெற முடியும்.

- மெட்டாவெர்ஸ் தொழில்நுட்பத்தைப் பெரும்பாலானவர்கள் உபயோகிக்கும் பட்சத்தில் பயணங்களுக்கான தேவையும் குறையும். போக்குவரத்து குறையும் போது வாகனங்கள் வெளியிடும் நச்சுப்புகையும் குறைந்து, இயற்கை வளங்கள் ஓரளவுக்குக் காப்பாற்றப்படவும் வாய்ப்பு இருக்கிறது.

## குழந்தைகளுக்கு முட்டை

### எச்சரிக்கும் 'யுனிசெஃப்' அறிக்கை

- இந்தியாவில் 3 லட்சத்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் கடுமையான சவலைநோயால் (Severe Mainutrition) பாதிக்கப்பட்டுள்ளனர்.
- இவர்கள் எல்லாரும் உயரத்துக்கு ஏற்ற உடல் எடை இல்லாமல் இருக்கின்றனர்.
- புரதச் சத்துக் குறைவால் ஏற்படுகிற இந்த நிலைமையால் குழந்தைகளுக்கு நிமோனியா, வாந்தி, வயிற்றுப்போக்கு போன்ற தொற்றுநோய்கள் 11 மடங்கு அதிகமாகப் பாதிக்கின்றன.
- குழந்தை இறப்புகளில் ஐந்தில் ஒன்று இந்த வழியில்தான் நிகழ்கிறது.
- குழந்தைகளின் இறப்புக்கு முக்கியக் காரணமாகப் புரதச்சத்துக் குறைவு (Protein Energy Mainutrition) காணப்படுகிறது என்று யுனிசெஃப் அமைப்பு ஏற்கனவே எச்சரித்திருக்கிறது.
- அதேநேரத்தில் சரியான அளவில் புரதச் சத்துள்ள உணவைக் கொடுத்தால் இந்த இறப்புகளை நிச்சயம் தவிர்க்கலாம் எனவும் அது ஆலோசனை கூறியுள்ளது.

### முட்டை வழங்கப்படுவது ஏன்?

- தமிழ்நாட்டில் வாரத்துக்கு 3 முட்டைகள் வழங்கப்படுகின்றன.
- முட்டை முழுமையான உணவு. எல்லோருக்கும் எளிதாகக் கிடைக்கிற, விலை மலிவான, ஆரோக்கியமான உணவு. இதனால்தான் குழந்தைகளுக்கு மதிய உணவில் முட்டை கொடுக்கப் பரிந்துரைக்கப்படுகிறது.
- 'குழந்தைகள் தினமும் முட்டை சாப்பிட்டால் உடற்பருமன் ஏற்படும்' என்று கர்நாடக அரசிடம் தரப்பட்ட அறிக்கை தவறானது.
- முட்டை ஒரு கொழுப்பு ஆயுதமல்ல ; அது ஒரு புரதப் பொட்டலம்.
- புரதம் என்பது குழந்தைகளின் தசை வளர்ச்சிக்கும் தேவைப்படுகிற ஒரு பேரூட்டச்சத்து (Macronutrient)
- முக்கியமாக, சவலைநோய்க்கு முடிவு கட்டுகிற சத்து. குழந்தைகளுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் உடற்பருமனைக் கொண்டுவருவது வெள்ளை அரிசி, வெள்ளைச் சர்க்கரை உள்ளிட்ட மாவுச் சத்துதான்.
- முட்டையில் மாவுச்சத்து மிகவும் குறைவு. 100 கிராம் கோழி முட்டையில் புரதச்சத்து 1.6 கிராம் இருக்கிறது. ஆனால், மாவுச்சத்து 1.12 கிராம் தான்.
- வெள்ளைக்கரு, மஞ்சள்கரு இரண்டிலும் சம அளவில் புரதம்தான் இருக்கிறது. வெள்ளைக்கருவோடு மஞ்சள் கருவையும் சேர்த்து எடுத்துக் கொண்டால்தான் அதிலிருக்கிற மொத்தப் புரதமும் முழுவதுமாக கிடைக்கும்.

### உச்சம் தொடும் உயிரிய மதிப்பு

- எந்தவொரு சத்தான உணவானாலும் அது செரிமானமாகி, அதில் உள்ள புரதங்கள் அமினோ அமிலங்களாக மாறி, உடலில் சேர வேண்டும்.
- முட்டையில் உள்ள வைட்டமின்–ஏ, கண் பார்வைக்கு உதவும். பயாட்டின் முடி வளர்ச்சியைக் கூட்டும். லூட்டின், சியாசாந்தைன் எனும் ஆன்டி–ஆக்ஸிடென்ட்டுகள் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.
- சூரிய ஒளிக்கு அடுத்ததாக நமக்கு வைட்டமின் – டி யை அதிகம் கொடுப்பது முட்டைகள்.

### முட்டையில் எந்தப் பிரச்சினையும் இல்லையா?

- முட்டையில் இருக்கிற கொழுப்பு உடலை வலுப்படுத்துமே தவிரப் பாதிக்காது.
- இதில் ஒமேகா 3 கொழுப்பு அமிலம் இருக்கிறது.
- இது இதயத்துக்கு நல்லது.
- பல பண்ணைகளில் கோழி வளர்க்க அளவில்லாமல் செயற்கைத் தீவனம், நுண்ணுயிர்க்கொல்லி (Antibiotic), மருந்துகளைப் பயன்படுத்துவார்கள்.

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- இதனால், பயனாளிகளுக்கு நுண்ணுயிர்கொல்லி எதிர்ப்பாற்றல் (Antibiotic resistance) எனும் ஆபத்து நேர்கிறது.
- இதைக் கண்காணித்து சரிப்படுத்த வேண்டிய கடமை கால்நடை மருத்துவர்களுக்கும், பண்ணை உரிமையாளர்களுக்கும், அரசு இயந்திரத்துக்கும்தான் இருக்கிறது.
- இன்றைய நடைமுறையில் குழந்தைகளுக்கு உடற்பருமன் ஏற்படுவதற்கு அவர்கள் அளவுக்கு மீறி இனிப்பு உணவுகளையும் மாவுச்சத்து நிறைந்த உணவுகளையும் சக்கை உணவுகளையும் (Junk Foods) சாப்பிடுவதுதான் முக்கியக் காரணம்.

## இல்லந்தோறும் மூவண்ணக்கொடி

- இந்திய திருநாட்டின் 75ஆவது சுதந்திர நாள் அமுதப் பெருவிழாவின் ஒருபகுதியாக, எதிர்வரும் ஆகஸ்ட் 13, 14 மற்றும் 15ஆம் தேதிகளில் நாடு முழுவதும் அனைவரும் தங்களது வீடுகளில் மூவண்ணக் கொடியை ஏற்றியோ அல்லது காட்சிப்படுத்தியோ கொண்டாட வேண்டும்.
- இந்திய அரசமைப்பு அவையில் ஜூலை 22, 1947 அன்று தேசியக்கொடி ஏற்றுக்கொள்ளப்பட்டதை நினைவுகூரும் வகையில் அவர் விடுத்துள்ள இச்செய்தி, இளைய தலைமுறையினரிடம் நாட்டுப்பற்றை வளர்தெடுக்கவும் வலுப்படுத்தவும் உதவும்.
- 'ஹர் கர் திரங்கா' என்ற மூவண்ணக் கொடி இயக்கத்தை வெற்றிபெறச் செய்ய மாநில அரசுகளின் பல்வேறு துறைகளும் உள்ளாட்சி அமைப்புகளும் பங்கெடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.
- 1917இல் தன்னாட்சி இயக்கத்தாலும் தேசியக் கொடியின் மாதிரி ஒன்று பரிந்துரைக்கப்பட்டது.
- என்றாலும், 1921-இல் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தின்போது, ஆந்திர இளைஞர் ஒருவரால் அளிக்கப்பட்ட இருவண்ணக் கொடியைச் சிறு மாற்றங்களுடன் காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார்.
- இந்துக்களைக் குறிக்கும் வகையில் காவி நிறமும், மற்ற அனைத்து சமயத்தவர்களையும் அந்த இரு வண்ணக் கொடியில், மற்ற அனைத்து சமயத்தவர்களையும் குறிக்கும்வகையில் காந்தியடிகள் வெள்ளைப் பட்டையைச் சேர்த்தார்.
- மூவண்ணக் கொடியில் வெள்ளை நிறத்தின் நடுவே காந்தியடிகள் பரிந்துரைத்தவாறு கைராட்டை அப்போது இடம்பெற்றது.
- சுபாஷ் சந்திரபோஸ் தலைமையிலான இந்திய தேசிய ராணுவமும் அக்கொடியை ஏற்றுக் கொண்டிருந்தது.
- அரசமைப்பு, அவையால் அங்கீகரிக்கப்பட்ட தற்போதைய தேசியக்கொடியில், கைராட்டைக்குப் பதிலாக அசோகர் நிர்ம ாணித்த சாரநாத் தூணில் உள்ள தர்மச்சக்கரம் இடம்பெற்றுள்ளது.
- எனினும், நம்முடைய தேசியக் கொடியின் மூன்று நிறங்கள் சமயங்களை அல்ல.
- தத்துவங்களின் பிரதிபலிப்பாகவே தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டன.
- காவி நிறம் வலிமையையும் வீரத்தையும் குறிக்கிறது.
- வெண்மை நிறம் அமைதியையும் உண்மையையும் குறிக்கிறது.
- பச்சை நிறம் வளமையையும் நம்பிக்கையையும் குறிக்கிறது.

## பட்டினியின் பிடி

- உலகளவில், உணவுப்பொருட்களின் விலைவாசி ஏற்றம் அல்லது பணவீக்கம், வரலாறு காணாத அளவுக்கு அதி கரித்துள்ளது.
- ரஷ்ய – உக்ரைன் யுத்தம், இந்த விலைவாசி ஏற்றத்தை மேலும் துரிதப்படுத்தியுள்ளது.
- 1817இல் 'டேவிட் ரிக்கார்டோ', இரண்டு பொருட்கள், இரண்டு நாடுகளில் உற்பத்தி செய்யப்பட்டால், இரண்டின் உற்பத்திச் செலவுகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, எந்த நாட்டில் உற்பத்திச் செலவு குறைவாக இருக்கிறதோ, அந்த நாட்டில் அந்த ஒரு பொருளை மட்டுமே உற்பத்திசெய்து, ஏற்றுமதி செய்ய வேண்டும்.
- அதுவே லாபகரமானதாக இருக்கும்.
- ஒப்பீட்டுச் செலவு வேறுபாட்டுக்கு அடிப்படைக் காரணியாக இருப்பது உழைப்புச் செலவு.
- அதில் நிபுணத்துவத்தைக் கூட்டி, மேலும் செலவைக் குறைத்து லாபத்தைப் பெருக்க முடியும் என்பதே அக்கோட்பாடு.

### தற்சார்பு இந்தியா

- காலனியாதிக்க கால நன்மைகளைத் தருவதற்காகக் கட்டமைக்கப்பட்ட உலக வர்த்தக நிறுவனம் (டபிள்யூடிஓ), இதே கோட்பாட்டை வேறு மொழியில் மூன்றாம் உலக நாடுகளிடம் எடுத்துக் கூறியது.

- நிலத்தின் பயன்பாடு, சந்தைத் தேவைகளைச் சார்ந்து தீர்மானிக்கப்பட வேண்டும் என்பதே அவ்வமைப்பு விதிகளின் அடிநாதம்.
- இதன்படி செயல்பட்ட மூன்றாம் உலக நாடுகள் பலவும் உணவுத் தற்சார்பை இழந்து, பட்டினி நிலைக்குத் தள்ளப்பட்டனர்.
- 'பிஎல்480' என்ற உணவுத் திட்டத்தின் கீழ் உணவுக்காக ஏங்கிக் கிடந்த காலங்கள் மாறிவிட்டன.
- பசுமைப் புரட்சியால் மண்வளத்தில் ஒரு சில தீங்குகளும் விளைந்தன என்றாலும், அது உணவு உற்பத்தியைப் பெருக்கவும், தன்னிறைவு அடையவும் அது பயன்பட்டது.
- 2022 ஜூன் நிலவரப்படி, 331.23 மில்லியன் டன் அரிசியும், 311.42 மில்லியன் டன் கோதுமையும் இந்தியாவின் கையிருப்பில் உள்ளன.
- தனிநபர் ஒருவருக்கு 507.8 கிராம் உணவு தானியத்தை வழங்கும் அளவுக்கு நமது நிலை உயர்ந்துள்ளது.
- இந்தியா வகுத்துக்கொண்ட தற்சார்புக் கொள்கையும், அதற்கான முயற்சியுமே, இன்று தொற்றுநோய்களும் நாடுகளுக்கு இடையிலான யுத்தங்களும் இந்தியாவைப் பெருமளவில் பாதிக்காமல் தடுத்துவருகின்றன.

## 5ஜி அலைக்கற்றை

- தற்போது பயன்பாட்டில் 4ஜி தொழில்நுட்பத்தின் அடுத்தக்கட்டப் பரிணாம வளர்ச்சி 5ஜி.
- இதன் இணைய வேகம் 4ஜியின் வேகத்தைவிட 10 மடங்கு அதிகமாக இருக்கும்.
- 5ஜி தொழில்நுட்பத்தில் கீழ் அலைவரிசை, நடுத்தர அலைவரிசை, உயர் அலைவரிசை ஆகிய மூன்று அலைக்கற்றைகள் உள்ளன.
- இந்தியாவில் 5ஜியின் நடுத்தர அலைவரிசையும், உயர் அலைவரிசையும் பயன்படுத்தப்படும்.

### சிஎன்பிஎன் உரிமம் வழங்குதலும், அதற்கான எதிர்ப்பும் ஏன்?

- பெரிய தொழில்நுட்ப நிறுவனங்கள் சிஎன்பிஎன் எனும் கேப்டிவ் நான் – பப்ளிக் நெட்வொர்க் உரிமத்துக்கு நேரடியாக விண்ணப்பிக்க முடியும்.
- இந்த சிஎன்பிஎன் மூலம் தங்களுக்கு என்று தனியார் நெட்வொர்க்குகளை அவர்கள் உருவாக்கிக் கொள்ள முடியும்.
- அலைக்கற்றைகள் 10 ஆண்டுகளுக்கு அரசாங்கத்திடமிருந்து அவர்களுக்கு ஒதுக்கப்படும்.
- சிஎன்பிஎன் சேவைக்கு விண்ணப்பிக்கும் நிறுவனங்களின் மதிப்பு 100 கோடி ரூபாய் அல்லது அதற்கு மேல் இருக்க வேண்டும்.

### இந்தியாவுக்கு 5ஜி எப்படி உதவும்?

- 5ஜி சேவை நாட்டின் இணையத் தொடர்பை மட்டும் மேம்படுத்துவதில்லை. இது கோடிக்கணக்கான கருவிகளை இணைக்கவும்.
- அவற்றிலிருந்து தகவல்களை அபரிமிதமான வேகத்தில் சேகரிக்கவும். சேகரித்த தகவல்களை நிகழ்நேரத்தில் பரிமாறிக்கொள்ளவும் தேவைப்படும் திறன்களை நமக்கு அளிக்கும்.
- செயற்கை நுண்ணறிவு இயந்திரக் கற்றல் ஆகிய துறைகளுக்கு இந்தத் திறன்கள் பெருமளவில் உதவும்.
- 5ஜி தொழில்நுட்பம் நாட்டின் கல்வி, சுகாதாரம், விவசாயம், உற்பத்தி, உள்கட்டமைப்பு ஆகிய துறைகளை வலுப்படுத்தும்.
- ரிலையன்ஸ், ஜியோ, ஏர்டெல், வோடஃபோன், ஐடியா, அதானி டேட்டா நெட்வொர்க்ஸ் ஆகிய நான்கு நிறுவனங்கள் இந்த ஏலத்தில் பங்கேற்றுள்ளன.
- குறைந்த அதிர்வெண், நடுத்தர அதிர்வெண், உயர் அதிர்வெண் என மூன்று வகைகளில் 5ஜி அலைக்கற்றை ஏலம் விடப்படுகிறது.
- 600, 700, 800, 900, 1,800, 2,100, 2,300 மெகா ஹெர்ட்ஸ் ஆகியவை குறைந்த அதிர்வெண் வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 3,000 மெகா ஹெர்ட்ஸ் நடுத்தர அதிர்வெண் கீழும், 26 ஜிகாஹெர்ட்ஸ் உயர் அதிர்வெண் கீழும் வகைப்படுத்தப்பட்டுள்ளன.
- 20 ஆண்டுகால பயன்பாட்டுக்கான இந்த ஏலத்தில் நிறுவனங்களின் நிதிச் சிக்கலைக் குறைப்பதற்காக, ஏலத் தொகையை 20 தவணைகளாக செலுத்த மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

SURESH' IAS ACADEMY MOST TRUSTED SINCE 2006

- இந்தியாவில் தற்போது 4ஜி பயன்பாட்டில் உள்ளது. 4ஜி-யைவிட 5ஜியின் வேகம் 10 மடங்கு அதிகமாக இருக்கும் என்று கூறப்படுகிறது.

## சூழலியல் தூதுவர்

- நமது குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு சுற்றுச்சூழலையும் நிலம், நீர், காற்று ஆகியவற்றையும் பாதுகாக்க அக்கறை எடுத்தக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.
- நமது தினசரி வாழ்வில் மரங்களையும் நதிகளையும் கடலையும், சிகரங்களையும், அனைத்து உயிரினங்களையும் பாதுகாப்பதில் மிகுந்த கவனம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கோரியுள்ளார்.
- சூழலியல் சார்ந்து தொடர்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்திய தூதுவராகவே ராம்நாத் கோவிந்த் இருந்துள்ளார்.
- ஸ்காட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் நடைபெற்ற 26-வது ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் 2030-க்குள் இந்தியாவின் கார்பன் வெளியேற்றம் 1 பில்லியன டன் ஆகக் குறைக்கப்படும் என்று அளிக்கப்பட்ட உறுதிமொழியையும் நினைவு-படுத்தினார்.

## ஐசிசிஆர்

- மத்திய கலாச்சாரத் துறையின் கீழ் செயல்படும் ஐசிசிஆர் நிறுவனத்தில், 1970-ம் ஆண்டு முதல் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களில் இந்திய பேராசிரியர்களுக்கான வருகை தரு இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- ஐசிசிஆர் மூலம் தேர்வாகும் இவர்களுக்கான ஊதியத்தை மத்தியஅரசு வழங்கும்.
- உணவு மற்றும் தங்குமிடங்களை சம்பந்தப்பட்ட நாடுகளின் கல்வி நிறுவனங்கள் வழங்குகின்றன.
- சமஸ்கிருதம், இந்தி, தமிழ், வரலாறு, பொருளாதாரம், தத்துவம், பெங்காலி நாட்டுப்புற நடனம், உருது, புத்தமதம், இந்திய கல்வி என சுமார் 11 வகை பாடப் பிரிவுகளுக்கான இருக்கைகள் உள்ளன.
- இந்திய, சமஸ்கிருதத்தை விடப் பழமையானதும் பல வெளிநாடுகளில் ஆட்சி மொழியாகவும் உள்ள தமிழுக்கு போலந்தில் மட்டும் 2 இருக்கைகள் உள்ளன.
- வார்ஸா பல்கலைக்கழகத்தில் 48 ஆண்டுகளாக இந்திய மொழிகளில் தமிழ் இருக்கை உள்ளது.
- கிராக்கூப் யாகி எலோனியன் பல்கலைக்கழகத்தில் 2008 முதல் தமிழ் இருக்கை உள்ளது.

## காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம்

- தமிழகத்தில் முதல்கட்டமாக 1,545 அரசு தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் 1.14 லட்சம் மாணவர்களுக்கு சூடான காலை சிற்றுண்டி வழங்கும் திட்டம்
- இதற்காக ரூ.33.56 கோடி நிதியை ஒதுக்கி அரசாணை பிறப்பித்துள்ளது.
- ஏழை, எளிய சமூக குழந்தைகளின் காலடிகள் கல்விச்சாலையை எட்ட முடியவில்லை என்பதை கருத்தில் கொண்டு, ஒரு நூற்றாண்டுக்கு முன்னதாகவே பள்ளியில் உணவு அளிக்கும் திட்டத்தை சென்னை மாநகராட்சி நிர்வாகம் முன்மொழிந்து நிறைவேற்றியுள்ளது.
- 1920-ம் ஆண்டு சென்னை மாநகராட்சி மன்றத் தலைவராக இருந்த சர் பிட்டி தியாகராயரால் நாட்டிலேயே முதல்முறையாக மதிய உணவுத் திட்டம் அறிமுகம் செய்யப்பட்டது.
- அதன்பின், 1957-ல் முன்னாள் முதல்வர் காமராஜரால் மதிய உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது.
- தொடர்ந்து முன்னாள் முதல்வர் எம்ஜிஆர் அறிவிப்பின்படி, 1982 ஜுலையில் சத்துணவு திட்டம் தொடங்கப்பட்டது.
- 1989-ல் சத்துணவுடன் முட்டை வழங்கும் திட்டத்தை அப்போதைய முதல்வர் கருணாநிதி அறிமுகப்படுத்தினார்.
- தற்போது வாரம் 5 முறை முட்டை வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு, சத்துணவுத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்தியாவில் 3-ல் ஒரு குழந்தை வளர்ச்சி குறைவாகவோ அல்லது அவர்கள் வயதுக்கேற்ற உயரத்தை அடையாமலோ இருப்பதற்கு முக்கிய காரணம் ஊட்டச்சத்து குறைபாடே ஆகும்.

### உணவு வகைகள்

| | |
|---|---|
| திங்கள் கிழமை | ரவா உப்புமா, காய்கறி சாம்பார், சேமியா உப்புமா, காய்கறி சாம்பார் அரிசி உப்புமா, கோதுமை உப்புமா |
| செவ்வாய் கிழமை | ரவா காய்கறி கிச்சடி, சேமியா காய்கறி கிச்சடி, கோதுமை காய்கறி கிச்சடி, சோள காய்கறி கிச்சடி |
| புதன் கிழமை | ரவா பொங்கல் காய்கறி சாம்பார், வெண்பொங்கல் காய்கறி சாம்பார் |
| வியாழக்கிழமை | சேமியா உப்புமா, காய்கறி சாம்பார், அரிசி உப்புமா, காய்கறி சாம்பார், ரவா உப்புமா, காய்கறி சாம்பார், கோதுமை ரவா உப்புமா, காய்கறி சாம்பார் |
| வெள்ளிக்கிழமை | ஏதாவது ஒரு கிச்சடி வகையுடன் ரவா கேசரி, சேமியா கேசரி வழங்கப்படும். |

- ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு வழங்கப்படும் காலை உணவுக்கான மூலப் பொருட்களின் அளவு 50 கிராம் அரிசி, அல்லது ரவை/கோதுமை ரவை/சேமியா, உள்ளூரில் அந்தந்த நாட்களில் விளையும் சிறு தானியங்கள், மற்றும் சாம்பாருக்கான பருப்பு 15 கிராம், காய்கறிகள் ஒரு வாரத்தில் குறைந்தபட்சம் 2 நாட்களாவது உள்ளூரில் கிடைக்கும் சிறுதானியங்களால் தயாரிக்கப்பட்ட காலை உணவு வழங்கலாம்.

## செஸ் ஒலிம்பியாட்

- 1924-ல் பிரான்ஸ் நாட்டில் 8-வது கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் நடந்த நேரத்தில் பாரிஸில் முதல் செஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டது.
- செஸ் ஒலிம்பியாட் போட்டியானது 30 ஆண்டுகளுக்கு பிறகு ஆசியாவில் தற்போது நடத்தப்படுகிறது. கடைசியாக 1992-ல் பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகரத்தில் நடத்தப்பட்டது.
- 1927-ம் ஆண்டு அதிகாரப்பூர்வமாக செஸ் ஒலிம்பியாட் தொடங்கப்பட்டது. லண்டனின் வெஸ்ட்மின்ஸ்டர் சென்ட்ரல் ஹாலில் நடைபெற்றது.
- இந்தியா 1956-ல் மாஸ்கோவில் நடைபெற்ற தொடரில்தான் முதன்முறையாக பங்கேற்றது.
- 1980 முதல் தொடர்ச்சியாக அனைத்து தொடர்களிலும் இந்தியா பங்கேற்றது.
- 2014-ம் ஆண்டைத் தவிர, இந்தியாவினால் பதக்கப்பட்டியலில் இடம்பிடிக்க முடியவில்லை.
- விஸ்வநாதன் ஆனந்த் ஆலோசகராக செயல்படுகிறார்.
- செஸ் ஒலிம்பியாட் வரலாற்றில் இந்தத் தொடரை இந்தியா நடத்துவது இதுவே முதல்முறை.
- செஸ் ஒலிம்பியாட்டில் ஆதிக்கம் செலுத்தும் ரஷ்யா, சீனா இம்முறை பங்கேற்கவில்லை.
- ஓபன் பிரிவில் சாம்பியனுக்கு ஹாமில்டன் ரஸ்ஸல்கோப்பையும், மகளிர் பிரிவில் வெரா மென்சிக் கோப்பையும் வழங்கப்படும்.
- ஒருங்கிணைந்த கிளாஸிபிகேன் பிரிவில் நோனா கேப்ரின்டாஷ்விலி கோப்பை தரப்படும்.
- ஒவ்வொரு ஆட்டத்துக்கும் தலா 1 1/2 மணி நேரம் ஒதுக்கப்படும்.
- இதில் 40ஆவது காய் நகர்த்தலுக்குப் பிறகு எஞ்சிய ஆட்டத்துக்கு 30 நிமிடங்கள் கூடுதலாக வழங்கப்படும்.
- 30ஆவது காய் நகர்த்தலுக்கு முன்பாக ஆட்டத்தை டிராவில் முடித்துக் கொள்ள முடியாது.
- 1924இல் பிரான்ஸ் நாட்டில் 7ஆவது கோடைகால ஒலிம்பிக் போட்டிகள் நடந்த நேரத்தில் பாரிஸில் முதல் செஸ் ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்பட்டது.
- சர்வதேச அளவில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பான விளம்பரங்களில் குடியரசுத் தலைவர், பிரதமரின் புகைப்படங்கள் இடம்பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் ஏற்கனவே ஒரு வழக்கில் உத்தரவிட்டுள்ளது.
- தமிழக அரசு சர்வதேச நிகழ்வுகளை நடத்தினால், முக்கிய விருந்தினர்களின் புகைப்படங்கள், பெயர்களை அச்சிடுவதில் உச்சநீதிமன்ற (காமன்காஸ் வழக்கு) உத்தரவுகளை கடைப்பிடிக்க வேண்டும்.
- தமிழக முதல்வர் தவிர்த்து குடியரசுத் தலைவர், பிரதமர் புகைப்படத்துடன் வைக்கப்படும் விளம்பரங்கள் சேதப்படுத்தப்படாமல் இருப்பதை மாவட்ட நிர்வாகங்கள் உறுதிப்படுத்த வேண்டும்.
- இதுபோன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாமல்லை**

- மாமல்லபுரம் 44-ஆவது செஸ் ஒலிம்பியாட்
- ஜூலை 28-ஆம் தேதி முதல் ஆகஸ்டு 10-ஆம் தேதி வரை மாமல்லபுரத்தில் நடக்க இருக்கும் செஸ் ஒலிம்பியாட்டுக்கு செஸ் வீரர்கள், பயிற்சியாளர்கள், பல்வேறு நாட்டு 'செஸ்' அமைப்பினர்.
- 1961-இல் மேனுவல் ஆரோன், இந்தியாவின் முதலாவது சர்வதேச செஸ் மாஸ்டர்
- முதலாவது உலக சாம்பியனாக விஸ்வநாதன் ஆனந்த் உயர்ந்தார்.
- **'பிராக்'** என்று அழைக்கப்படும் ஆர். பிரக்ஞானந்தா, திவ்யா தேஷ்முக், நிகால் ஸரின், ஆர்.வைஷாலி, பென்டால ஹரி கிருஷ்ணா, விதித் குஜராத்தி, கொனேரு ஹம்பி, டி.ஹரிகா என்று சர்வதேச அளவில் இந்தியாவின் இளைஞர் படை செஸ் அரங்குகளில் சாதனைகள் படைத்து வருகின்றன.
- 187 நாடுகளில் இருந்து பங்கேற்க இருக்கும் விளையாட்டு வீரர்கள். இவர்களில் 25 பேர் கொண்ட இந்திய அணியில் 7 பேர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள்.

## செஸ் ஒலிம்பியாட் போட்டி

- மாமல்லபுரத்தில் வரும் 28-ம் தேதி நடக்கவுள்ள 44-வது சர்வ தேச செஸ் ஒலிம்பியாட் போட்டி
- செங்கல்பட்டு மாவட்டம் மாமல்லபுரத்தில் 44-வது சர்வதேச ஒலிம்பியாட் செஸ் போட்டி
- 187 நாடுகளைச் சேர்ந்த 2,500 வீரர்கள் பங்கேற்க உள்ளனர்.

**தமிழ்ப்பாடவேளை குறைக்கப்படலாமா?**

- மொழிப்பாடத்துக்கான பாடவேளைகள் வாரத்துக்கு ஏழாக இருந்ததை மாற்றி, ஆறு பாடவேளைகள் போதும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- 'தமிழ்பாடத் தேர்வில் நாற்பத்தேழாயிரம் மாணவர்கள் தோல்வி' என்ற செய்தி, அனைவரையும் அதிர்ச்சியில் ஆழ்த்திருக்கும்.

**தேவை நேரடிப் பயிற்சி**

- பொதுவாக, 10 ஆம் வகுப்பு முடித்து வெளிவரும் மாணவர்கள், தமிழ்ப் பெருங்கவிகளாக வந்துவிடுவார்கள் எனும் எதிர்பார்ப்பு யாருக்கும் இருப்பதில்லை. பிழையின்றி எழுத்து திறமும், தெளிவான உச்சரிப்புடன் பேசும் திறனும் இருந்தாலே போதும் என்றுதான் எதிர்பார்க்கப்படுகிறது.

**ஊக்கமாத்திரை தந்தால் போதும்**

- தமிழைப் பிழையின்றியும் அழகாகவும் எழுதி வரும் மாணவர் ஏடுகளில் 'நன்று' என்று எழுதிக் கையொப்பமிட்டால் போதும். அது மாணவர் படிப்பில் மிகப் பெரிய உற்சாகத்தை நிகழ்த்துவதைக் கண்கூடாகக் காணலாம்.

**ஆசிரியர்க்குத் தேவை பயிற்சி**

- எழுத்துப் பிழைகளைக் களையும் பயிற்சியை இலக்கண வகுப்புப் பயிற்சியாக நினைக்காமல், உரைநடை இடையிலேயே வருமாறு செய்யலாம் என்று, பாடநூல் எழுதும் குழுவிலிருந்த போது முயன்றும் அது நடைமுறைக்கு வரவில்லை. இதற்குத்தான் அதிக நேரம் தேவைப்படும்.
- ஆனால், இதற்குத்தான் நேரம் கிடைப்பதில் சிக்கலும் நீடிக்கிறது. எந்திர கதியாகப் பாடத்தை நடத்தி முடிக்க, நேரத்தில் சிக்கல் வரும் போது எழுத்துப் பிழையைக் களையும் முயற்சி.

**வழிகாட்டும் மொழி**

- சொல் வளமும் சிந்தனை வளமும் தாய்மொழிப் பாடத்தின் வழியாக மட்டுமே சாத்தியமாகும் என்பதே நிதர்சனம். இதனை நன்கு புரிந்து கொண்டால், தாய்மொழிப் பாடம் வெற்றுப் பெருமைக்காக அல்ல, வாழ்க்கையைப் புரிந்து கொள்வதற்கு அவசியமானது என்பது புரியும்.
- அதற்குத் திட்டமிடுவதே இப்போதைய பள்ளிக் கல்விக்கு முதன்மைத் தேவை.

## செஸ் விளையாட்டின் பூர்விகம் தமிழ்நாடு

- 1927-ம் ஆண்டு முதல் சர்வதேச செஸ் ஒலிம்பியாட்டுப் போட்டி பல்வேறு நாடுகளில் நடந்தது.
- 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடக்கும் செஸ் ஒலிம்பியாட்டின் 44-வது போட்டி, பல்லவ மன்னர்களின் துறைமுகப் பட்டினமான மாமல்லபுரத்தில் நடக்கிறது.
- போட்டி ரஷியாவில்தான் நடப்பதாக இருந்தது. ஆனால், ரஷியா – உக்ரைன் போர் நடப்பதால், சர்வதேச செஸ் கூட்டமைப்பு அந்த வாய்ப்பை திரும்ப பெற்றுவிட்டது.
- கீழடியில் கிடைத்த இந்த சதுரங்க ஆட்டக்காய்களை மதிப்பிடும்போது, நிச்சயம் சதுரங்க விளையாட்டு கி.மு. 6-ம் நூற்றாண்டில், அதாவது 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்நாட்டில் விளையாடப்பட்டிருக்கிறது.
- இது அரசர்களின் விளையாட்டாக கருதப்படுகிறது. அப்போது, அரசன், அரசி, கோட்டை, மந்திரி, குதிரை, படை வீரன் என்ற பெயர்களால் இந்த காய்கள் அழைக்கப்பட்டன.
- சாளுக்கியர்களின் தலைநகராக விளங்கும் பட்டடக்கல் விருப்பாட்சர் கோவிலில் இறைவன் சதுரங்க ஆட்டம் ஆடும் சிற்பங்களை இப்போதும் காணலாம்.
- திருவாரூர் மாவட்டத்தில் நீடாமங்கலம் அருகில் பாமணி ஆற்றின் கரையில் உள்ள திருப்பூவனூர் கோவிலில் எழுந்தருளியுள்ள இறைவன் சதுரங்க வல்லபநாதர் என்று போற்றப்படுகிறார்.

## பண மோசடி தடுப்பு சட்டம்

### உறுதி செய்யப்பட்ட சட்டங்கள்

- உச்சநீதிமன்றத்தின் இந்த உத்தரவால் பண மோசடி தடுப்பு சட்டத்தின்கீழ் அமலாக்கத் துறைக்கு வழங்கப்பட்டு உள்ள பல்வேறு அதிகாரங்கள் உறுதி செய்யப்பட்டு உள்ளன.
- அவற்றின் விவரம் வருமாறு :
- சொத்துக்களை முடக்க அதிகாரம் வழங்கும் பிரிவு 8 (4)
- வாகனங்கள், பொருட்களை பறிமுதல் செய்யவும், லாக்கரை உடைத்து ஆவணங்களை கைப்பற்றவும் அதிகாரம் வழங்கும் சட்டப்பிரிவு 17(1), 18(1).
- காரணம் கூறாமல் கைது செய்ய அதிகாரத்தை வழங்கும் சட்டப்பிரிவு 19
- சிறப்பு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படும் குற்றங்கள் என வகைப்படுத்தும் சட்டப்பிரிவு 44
- ஜாமீன் வழங்க மறுக்கும் சட்டப்பிரிவு பிரிவு – 45
- கடந்த 2002ஆம் ஆண்டு ஒன்றிய அரசால், பண மோசடி தடுப்பு சட்டம் இயற்றப்பட்டு, 2005ஆம் ஆண்டு ஜூலை 1ஆம் தேதி முதல் அமல்படுத்தப்பட்டது.
- அமலாக்கத்துறைக்கு பல்வேறு புதிய அதிகாரங்கள் வழங்கப்பட்டன.
- இதில், பண மோசடி குற்றங்களில் ஈடுபடுபவர்களின் சொத்துக்களை முடக்குதல், அவர்கள் சம்பந்தப்பட்ட இடங்களில் அனுமதியின்றி சோதனை செய்தல், பொருட்களை பறிமுதல் செய்தல், தலைமறைவான குற்றவாளியை தேடுதல், ஜாமீனில் வெளியே வர முடியாத வகையில் கைது செய்தல் போன்ற அதிகாரங்கள் வழங்கப்பட்டன.
- மனுவில் அமலாக்கத் துறைக்கு வழங்கப்பட்டு உள்ள இந்த அதிகாரங்கள் இந்திய குடிமகனுக்கு அரசியல் சாசன பிரிவு 20, 21 ஆகியவை வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளை பறிப்பதாக உள்ளதால் அதை ரத்து செய்ய வேண்டும் என கோரினார்.
- அமலாக்கத் துறை பதிவு செய்யும் வழக்கில் பின்பற்றப்படும் இசிஐஆர் என்பதை (அமலாக்கத்துறை வழக்கு தகவல் அறிக்கை) போலீசார் பதிவு செய்யும் எப்ஐஆருடன் ஒப்பிட முடியாது.
- ஏனெனில், இசிஐஆர் என்பது அமலாக்கத்துறையின் உள் ஆவணமாகும்.
- குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இசிஆ வரை வழங்க வேண்டிய கட்டாயமில்லை.
- கைது செய்வதற்கான காரணங்களை மட்டும் அமலாக்கத்துறை தெரிவித்தால் போதும்.
- அமலாக்கத்துறை இயக்குநரகத்தின் கைது, பறிமுதல் மற்றும் சோதனை நடவடிக்கைக்காக நிதி மோசடி தடுப்பு சட்டத்தின் (பிஎம்எல்ஏ) கீழ் உள்ள 5, 8(4), 15, 17 மற்றும் 19 ஆகுய பிரிவுகள் அரசியலமைப்புபடி செல்லுபடியானதுதான்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- குற்றவியல் நடைமுறை சட்டத்தின்கீழ் அமலாக்கத்துறை அதிகாரிகள் காவல்துறை அதிகாரிகள் அல்ல.
- அதனால் விசாரணையின் போது, அந்த அமைப்புகளால் பதிவு செய்யப்படும் வாக்குமூலங்கள் செல்லுபடியான ஆதாரங்கள் ஆகும்.
- நிதி மோசடி வழக்கில் குற்றவாளியை கைது செய்யும் நேரத்தில் அதற்கான காரணத்தை அமலாக்கத்துறை அதிகாரிகள் தெரிவிப்பது அவசியம் அல்ல.
- அதேபோல் குற்றவாளிக்கு புகார் நகல் (இசிஐஆர்) கொடுக்க வேண்டிய அவசியம் அல்ல.
- நிதி மோசடி தடுப்பு சட்டத்தின்கீழ் நிதி மோசடி குற்றச் செயல் ஆகும்.
- புகார் நகல் (இசிஐஆர்) எப்.ஐ.ஆர் – க்கு நிகரானது அல்ல.

## 11-வது வேளாண் கணக்கெடுப்பு தொடக்கம்

- முதன்முறையாக அறிதிறன் பேசி, கையடக்க கணினி ஆகியவை மூலமாக விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.
- இந்த கணக்கெடுப்பு நடைமுறையை கடந்த 1970-71 ஆம் ஆண்டு முதல் மத்திய வேளாண் அமைச்சகம் மேற்கொண்டு வருகிறது.
- பத்தாவது வேளாண் கணக்கெடுப்பு கடந்த 2015-16 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டது.
- ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வந்த நிலையில், கரோனா பாதிப்பு காரணமாக பதினொன்றாவது கணக்கெடுப்பு தாமதமானது.
- மொத்த விவசாய பரப்பின் அளவு, நிலப்பயன்பாடு, குத்தகை, பயிரிடும் முறை என்பன உள்ளிட்ட பல்வேறு அளவீடுகளின் கீழ் தகவல்கள் சேகரிக்கப்பட்டு இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட உள்ளது.
- சர்வதேச அளவில் நடைபெறும் நிகழ்வுகள் தொடர்பான விளம்பரங்களில் குடியரசுத் தலைவர், பிரதமரின் புகைப்படங்கள் இடம்பெற வேண்டும் என உச்சநீதிமன்றம் ஏற்கனவே ஒரு வழக்கில் உத்தரவிட்டுள்ளது.
- தமிழக அரசு சர்வதே நிகழ்வுகளை நடத்தினால், முக்கிய விருந்தினர்களின் புகைப்படங்கள், பெயர்களை அச்சிடுவதில் உச்சநீதிமன்ற (காமன்காஸ் வழக்கு) உத்தரவுகளை கடைப்பிடிக்க வேண்டும்.
- தமிழக முதல்வர் தவிர்த்து குடியரசுத் தலைவர், பிரதமர் புகைப்படத்துடன் வைக்கப்படும் விளம்பரங்கள் சேதப்படுத்தப்படாமல் இருப்பதை மாவட்ட நிர்வாகங்கள் உறுதிப்படுத்த வேண்டும். இது போன்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## வாக்காளர் பட்டியல்

- வாக்காளர் பட்டியலில் 17 வயது நிறைவடைந்தாலே பெயர் சேர்க்கும் வகையில், தொழில்நுட்ப ரீதியிலான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுக்கு இந்திய தேர்தல் ஆணையம் அறிவுறுத்தியுள்ளது.
- ஆண்டுதோறும் ஜனவரி 1-ம் தேதியை தகுதி நாளாக கொண்டு, 18 வயது நிறைவடைவோரின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படுகின்றன.
- 2023-ம் ஆண்டு ஏப்ரல் 1, ஜுலை 1, அக்டோபர் 1 ஆகிய நாட்களில் 18 வயதை அடைபவர்களும் தங்கள் பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க முடியும்.

## பிரபஞ்ச ரகசியம்

- அமெரிக்காவின் நாசா விண்வெளி அமைப்பு, ஐரோப்பிய விண்வெளி முகமை கனடா விண்வெளி முகமை, விண்வெளி தொலைநோக்கி அறிவியல் நிறுவனம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்ட படங்களில் ஐந்து படங்கள் முக்கியமானவை.
- ஆதியாரம்ப பிரபஞ்ச முட்டைக்குள் குவார்க்குகள் எனும் அடிப்படை இம்மிகள் வெடித்துச் சீறிப் பாய்ந்தன.
- அடர்த்தியான திரண்ட ஈர்ப்புவிசை மிக்க அந்தத் துகள்களில் வலுவான அணுக்கரு இடைவினைகள் பெருகியபோது அண்டவெளியில் 'ஹேத்ரான் யுகம்' நிகழ்ந்தது என்கிறோம்.
- அதனைத் தொடர்ந்து, பலவீன அணுக்கரு இடைவினைகளின் 'லெப்டான் யுக'த்தின் இறுதியில் நிகழ்ந்தது ஒரு மகாவெடிப்பு.

- ஒரு நினைவுப் பொறியினும் மெலிதாக சுருக்கென்று ஒரு நொடிப் பொழுதினுள் மின்னி மறைந்தும் விட்டது.
- ‘வெடிபடும் அண்டத்து இடிபல தாளம்’ போட்டதன் சீற்றப் பரப்பில் 1,380 கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பிரபஞ்ச பொருள்களின் சிறு பகுதியை துல்லியமான ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைக்காட்டி படம்பிடித்துள்ளது.
- அண்டவெளியின் வெப்ப வாயுக்கள், அயனிகள், அணுத்துகள்கள் எல்லாம் மெல்ல மெல்ல ஆறிக் குளிர்ந்தன.
- மிகச்சிறிய அணுக்கருவான ஹைடிரஜன் அணுக்கருக்களும், அதனின் நான்கு மடங்கு எடை கொண்ட ஹீலியம் அணுக்கருக்களும் நிரம்பி அலைமோதும் பிரபஞ்சக் கடல் விரிவடைந்தது.
- விரிவடைந்த பிரபஞ்சம் தளர்ந்து சற்றுக் குளிரத் தொடங்கிற்று. பிரபஞ்ச விடியலில் அண்டவெளி எங்கும் இருள் கவ்விக்கொண்டது.
- ஆயினும் குளிர்ந்த முகில் விண்மீன்களில் நிறையீர்ப்பு விசை அதிகரித்த வண்ணம் இருந்தது.
- அந்த வாயுக்கோளங்கள் இறுதி உள்ளுக்குள் அழுத்தமுற்று அகவெப்பநிலை உயர உயர அவற்றின் புறப்பரப்பில் வெப்ப அலைகள் கிளம்பின. அகக்கனற்சி உச்சத்தை எட்டியபோது விண்மீன் ஒளிவிட ஆரம்பித்தது.
- ஹைடிரஜன் அணுக்கருக்கள் பிணைந்து ஹீலியம் அணுக்கரு உற்பத்தி வினை முடுக்கப்பட்டது.
- இருண்ட பிரபஞ்ச கருப்பைக்குள் இருந்து விண்மீன்கள் பிரசவம் ஆயின.
- விண்மீன்கள் திரண்டு வளையமிட்டு உடுமண்டலங்கள் (கேலக்ஸி) ஆகச் சூழலத் தொடங்கின. சுருண்டவை, தட்டையான நீள்வட்ட வடிவிலும் ஒழுங்கற்ற வடிவிலும் இருந்தன.
- அவற்றில் சிலவற்றின் மையப்பகுதியில் மொத்தென்று உயர்ந்த முண்டு உடுமண்டலங்கள் உருவெடுத்தன.
- அத்தகைய உடுமண்டலம் ஒன்று ‘ஆகாய கங்கை’ என்ற பெயரில் கட்டப் பெறுகிறது. ‘பால்வீதி’ என்றும் அதனை அழைக்கிறோம். அதுதான் நமக்கு தாய் மண்டலம். இருபதினாயிரம் கோடி சூரியன்கள் அடங்கிய அண்டச் சக்கரம்.
- அதன் குறுக்களவு ஒரு லட்சம் ஒளியாண்டு என்கிறோம். அதாவது, கண்ணிமைக்கும் நேரத்தில் நொடிக்கு 3 லட்சம் கிலோமீட்டர் வேகத்தில் பாயும் அசாதாரண வாகனம் இருப்பதாக வைத்துக் கெள்வோம்.
- அதில் அமர்ந்து பால்வீதி அண்டத்தின் குறுக்காகப் பயணித்தால் ஒரு விளிம்பில் இருந்து, மறு விளிம்பினை அடைவதற்கு ஒரு லட்சம் ஆண்டுகள் ஆகும்.
- பூமியிலிருந்து 313 ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ள தெற்கு விண்மீன் கூட்டமான ‘கரினா நெபுலா’ என்கிற விண்மீன் முகில் படலத்தினை வெப் தொலைக்காட்டி அற்புதமாகப் பதிவிட்டுள்ளது.
- அதில் தென்படும் அண்டவெளி செங்குத்துப் பாறைத் தோற்றங்கள் (காஸ் மிக் க்ளிஃப்ஸ்) விண்மீன்கள் உருவாக்கத்தின் ஆரம்ப கட்டங்களையும் விரைவான கட்டங்களையும் வெளிப்படுத்துகின்றன.
- கப்பல் அடித்தளம் போன்ற இந்தக் கரினா உடுக்கணத்தில் ‘அகத்தியர்’ (கானோபஸ்) விண்மீன் என்கிற ஒரு வெள்ளை நிற பெரும் பூத விண்மீன் உள்ளது.
- இரவு வானில் மிகப் பொலிவான விண்மீன்களில் இரண்டாவது பிரகாசமான நட்சத்திரம் இது. முன்னொரு காலத்தில் இதுதான் கடல் பயணிகளுக்கு விண்ணில் வழிகாட்டியாக இருந்ததாம்.
- வெப் தொலைக்காட்டி அனுப்பிய மற்றொரு படப்பதிவு, அண்டை காலத்தில் தொடக்கத்தில் உள்ள விண்மீன் திரள்களைக் கண்டுபிடிக்கும் வகையில் உள்ளது.
- ஏறத்தாழ 460 கோடி ஒளியாண்டுகள் தொலைவில் உள்ள ‘தென்புலக் கனமிகு உடுத்திரள் கண்காணிப்பில்’ சில தொலைதூர விண்மீன் திரள்களைக் கண்டறிய முடிந்தது.
- அண்டவெளிக் கருவறையில் நம் சூரிய குடும்பம் பிரசவம் ஆன அதே கால கட்டத்தினை தொன்மையான நினைவலைகள் என்றும் இங்கு அசைபோடலாம்.
- பின்னர் கோள்கள், குறுங்கோள்கள், கோளாங்கற்கள், வால்விண்மீன்கள் என அனைத்துக் குஞ்சுக் குலுவான்களும் சூரிய மையத்தைச் சுற்றத் தொடங்கின.
- வெப் தொலைக்காட்டி, விரி கோணத்தில் புறக்கோள்களைத் தேடி வலைவீசிய போது, ஃபீனிக்ஸ் உடுக்கணத்தில் ‘வாஸ்ப்-96பி’ என்று பெயரிடப்பட்ட வாயு ராட்சத வெளிக்கோள் ஒன்றினைக் கண்டுபிடித்தது.
- அந்தக் கோளின் நிறை 1,000 கோடி கோடி கோடி டன் ஆகும். அதாவது அக்கோள், பூமியைக் காட்டிலும் 160 மடங்கு எடை மிகுந்ததாகும்.
- அது 5200 - 6000 பாகை புற வெப்பம் உடைய ‘வாஸ்ப்-96’ என்று பெயர் சூட்டப் பெற்றதோர் விண்மீனை ஏறத்தாழ 67 லட்சம் கி.மீ தொலைவில் சுற்றி வருகிறது.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- விண்வெளி தொலைக்காட்டியின் நிற மாலையளவி, அந்த வேற்று கிரகத்தின் வளிமண்டலத்தில் நீர் கொண்ட மேகங்களும் மூடுபனிகளும் வீக்கமாகத் தென்படுவதை உறுதிப்படுத்தியுள்ளது.
- பூமியிலிருந்து சுமார் 1,120 ஒளி ஆண்டுகள் தொலைவில், தெற்கு வானத்தில் ஃபீனிக்ஸ் விண்மீன் உள்ளது. அது, தனது சொந்த சாம்பலில் இருந்து உயிர்த்து எழும் புராணப் பறவையான ஃபீனிக்ஸ் பெயரால் சித்தரிக்கப்படுகிறது.
- இந்த பீனிக்ஸ், பாவோ (மயில்), டுகானா (டூக்கன்), க்ரஸ் (கொக்கு) ஆகிய நான்கு விண்மீன்களும் கூட்டாக 'தெற்கு பறவைகள்' என்று அழைக்கப்படுகின்றன.
- உடுமண்டலத் திரளில், அடர்த்தியான 'இருண்ட பொருள்' ஒன்று இடம்பெறும். அது ஒரு நிறையீர்ப்பு வில்லையாக ஒளியின் பாதையை வளைக்கப் போதுமான ஈர்ப்பு விசையை உருவாக்குகிறது.
- 1936-ஆம் ஆண்டிலேயே, இத்தகைய நிறையீர்ப்பு லென்ஸ் குறித்து தீர்க்கதரிசனமாக அறிந்திருந்தவர் உலகப் புகழ்பெற்ற அறிவியல் அறிஞர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.
- அண்டவெளியின் நிறையீர்ப்பு வில்லையாகச் செயல்படும் கனத்த உடுத்திரள் வழியே அப்பாலுள்ள மங்கலான உடுத்திரள்களையும் பெரிதாக்கிக் காணலாம்.
- நாசாவின் ஜேம்ஸ் வெப் விண்வெளித் தொலைக்காட்டி அனுப்பியுள்ள மிகப்பெரிய படமாக நான்கு விண்மீன் திரள்கள் அடங்கிய 'ஸ்டீபனின் குயின்டெட்' என்கிற படம் உள்ளது.
- இந்தப் படம் நிலவின் விட்டத்தில் ஐந்தில் ஒரு பகுதி (750 கி.மீ) அளவினை உள்ளடக்கிய மகத்தான படமாகும்.
- இது 15 கோடி படக்கூறுகளைக் கொண்டுள்ளது என்பது சாதாரண செய்தியல்ல; நவீன தொழில்நுட்பத்தின் உச்சம் ஆகும்.
- வடக்கு வானில் 'பறக்கும் குதிரை' என்று சுட்டப்பெறும் 'பெகாசஸ்' விண்மீன் தொகுப்பில் காணப்படக்கூடிய இந்த நான்கு திரள்களை 1877-இல் மார்சேய் வானாய்வுகத்தில் இருந்து எட்வர்ட் ஸ்டீபன் கண்டுபிடித்தார் என்பது தனிக்குறிப்பு.
- 'பறக்கும் குதிரை' எனப்படும் 'பெகாசஸ்' விண்மீன் உடுக்கணம் விஞ்ஞானிகளுக்குக் கூட, இதற்கு முன் எப்போதும் இல்லாத நிலையில் புதிய முறையில் அறிவூட்டி இருக்கிறது.
- ஒரு கருந்துளைக்கு அருகிலுள்ள வாயு, எவ்வாறு கலக்கப்படுகிறது என்பதை அது உணர்த்துகிறது. மேலும், விண்மீன் திரள்கள் ஒன்றுக்கொன்று எவ்வாறு நட்சத்திர உருவாக்கத்தைத் துண்டி விடுகின்றன என்பதையும் வெப்தொலைக்காட்டி அனுப்பிய படங்கள் விவரிக்கின்றன.
- விண்மீன்கள் கருவறையை மட்டுமின்றி 2,000 ஒளி ஆண்டுகள் தொலைவில் ஒரு விண்மீனின் கல்லறையையும் முதல் முறையாக வெப் தொலைக்காட்டி உலகின் முழுப் பார்வைக்கு கொண்டு வந்துள்ளது.
- அதிக கனமான விண்மீன் வெடிப்பில் கருந்துளை விண்மீன் பிறக்கும். இது நொடிக்கு 3 லட்சம் கிலோமீட்டர் வேகத்தில் பாயும் ஒளியைக்கூட வெளியே விடாத அதீத நிறையீர்ப்புத் துளையாகும்.
- தெற்கு வளைய நெபுலாவில் இத்தகைய இறக்கும் விண்மீன் ஒன்றை வெப் தொலைக்காட்டியின் சக்தி வாய்ந்த அகச்சிவப்பு கருவி படம்பிடித்துள்ளது.

**இந்தியா 75**

- பல்வேறு மொழிபேசும் மக்கள் ஒற்றுமையாக வாழ மொழிவாரி மாகாணங்களை உருவாக்கிக் கொடுத்தார் பிரதமர் நேரு. இந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை இந்தி அவர்கள் மீது திணிக்கப்பட மாட்டாது என்று உறுதி அளித்தார் பிரதமர் நேரு.
- ஐந்தாண்டு திட்டங்களைக் கொண்டுவந்து அனைத்து மாநிலங்களுக்கும் பல்வேறு திட்டங்களை உருவாக்கிக் கொடுத்தார். வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தினார்.
- அனைத்து மாநிலங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களை உருவாக்கி தந்தார்.
- மதச்சார்பற்ற மனிதராக அவர் இருந்தார். சகோதரத்துவத்தை வலியுறுத்தினார்.
- நாடாளுமன்ற ஜனநாயகத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தார்.
- அனைத்து தரப்பும் விவாதம் செய்யும் களமாக நாடாளுமன்றத்தை நடத்திக் காட்டினார்.
- கூட்டாட்சி நெறிமுறைகளை அவர் அடிக்கடி பேசினார்.
- இந்தியா முழுவதும் இருந்த பல்வேறு மாநில முதலமைச்சர்களோடு அடிக்கடி பேச்சுவார்த்தை நடத்தினார். கடிதங்கள் எழுதினார்.

## இந்திய ஒற்றுமையை சிதைக்க முயற்சி

- கருத்தியல்களை மேலும் மேலும் வலிமைப்படுத்த வேண்டும். கூட்டாட்சி, மாநில தன்னாட்சி, மதச் சார்பின்மை, சமத்துவம், சகோதரத்துவம், சமதர்மம், சமூகநீதி இவற்றை நாம் வலிமைப்படுத்த வேண்டும்.
- இவை அனைத்தையும் காப்பாற்றுவதுதான் இந்தியாவை காப்பாற்றுவது ஆகும்.
- இந்தியா என்பது ஒற்றை அரசு அல்ல பல்வேறு மாநில அரசுகளின் ஒன்றியம்தான்
- இந்தியாவை காப்பற்ற வேண்டுமானால் இந்திய ஒன்றியத்துக்குள் உள்ளடங்கியுள்ள அனைத்து மாநிலங்களையும் காப்பற்ற வேண்டும்.
- மாநிலங்கள் காப்பற்றப்பட்டால்தான் இந்தியா காப்பற்றப்படும்.
- தமிழ்நாட்டின் மாபெரும் அடையாளமான பேறறிஞர் அண்ணா கூறியது போல, ஒரே போல ஆக்குவது என்பது ஒற்றுமையில் இருந்து வேறுபட்டது. ஒற்றைத்தன்மையை திணிப்பதன் மூலம் ஒற்றுமையைக் கொண்டுவர முடியாது.
- இந்தியாவில் எத்தனையோ மொழிகள் இருக்கின்றன.
- இந்தியாவுக்கு ஒற்றை மதம், அனைவர்க்குமான மதமாக இருக்க முடியாது.
- இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தமிழ்நாட்டின் பங்கு 9.22 விழுக்காடாக இருப்பதால் தமிழ்நாட்டுக்கு மட்டுமல்ல, இந்தியா முழுமைக்கும் தானே நன்மை கிடைக்கிறது.
- ஒன்றிய அரசின் மொத்த வரி வருவாயில் தமிழ்நாட்டின் பங்கு விழுக்காடு, தமிழ்நாட்டின் பங்கு என்பது இந்தியாவுக்குத்தானே நன்மை, மாநில அரசுகள் மிகச்சிறப்பாக மாநிலங்களை வழிநடத்துவதால் ஒன்றிய அரசு பலம் அடையுமே தவிர பலவீனம் அடையாது.
- இன்னும் சொன்னால், மக்களோடு நேரடியாக தொடர்பில் இருப்பவை மாநில அரசுகள் தான்.
- மக்களின் அனைத்து அன்றாடத் தேவைகளையும் பார்த்துப் பார்த்து நிறைவேற்ற வேண்டிய கடமை மாநில அரசுக்குத் தான் இருக்கிறது.
- மாநில அரசுகளை தன்னிறைவு பெற்ற அரசுகளாக வைத்திருந்தால்தான் இந்தியா மகிழ்ச்சியாக இருக்கும்.
- இந்திய அரசானது கூட்டாட்சிக் கோட்பாட்டை மதித்துச் செயல்பட வேண்டும்.
- சரக்கு மற்றும் சேவை வரி மூலமாக மாநிலங்களின் நிதி உரிமை பறிக்கப்பட்டு விட்டது.
- இழப்பீடாக தரப்படும் நிதி உரிய நேரத்தில் தரப்படுவது இல்லை. முழுமையாகவும் தருவது இல்லை.
- நீட் போன்ற நுழைவுத் தேர்வுகளால் எளியோருக்குக் கல்வி உரிமை மறுக்கப்படுகிறது.
- புதியக் கல்விக் கொள்கை என்பது கல்வியைப் பல்வேறு படி நிலைகளில் தடுப்பு போட்டு மறிக்கும் கொள்கையாக உள்ளது.
- இரட்டை ஆட்சி நடத்தப் பார்க்கிறது பாஜ. தலைமை. இவை அனைத்துக்கும் இடையில்தான் மாநிலங்களில் ஆட்சி நடத்தியாக வேண்டும்.

## சோலார் பேனல் தொடர்பான இணையதளம்

- இந்தியாவில் மின் துறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை எடுத்துக்காட்டும் விதமான 'ஒளிமயமான இந்தியா பிரகாசமான எதிர்காலம் - 2047' என்ற நிகழ்ச்சி.
- தெலுங்கானாவில் 100 மெகாவாட், ராமகுண்டம் மிதக்கும் சோலார் திட்டம், கேரளாவில் 92 மெகாவாட் காயம்குளம் மிதக்கும் சோலார் திட்டம்.
- ராஜஸ்தானில் 735 மேகாவாட் சோலார் திட்டம், லேயில் பசுமை ஹைட்ரஜன் மொபிலிட்டி திட்டம், குஜராத்தில் இயற்கை எரிவாயுடன் ஹைட்ரஜனை சேர்க்கும் திட்டம்.
- மேற்கூரையில் சோலார் பேனல் அமைப்பது தொடர்பான இணைய தளம்

## அனைவருக்கும் நீதி

- நாடு முழுவதும் 676 மாவட்ட சட்டப் பணிகள் ஆணையங்கள் செயல்பட்டு வருகின்றன.
- இந்த ஆணையங்களின் தலைவராக அந்தந்த மாவட்ட நீதிபதிகள் செயல்படுகின்றனர்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

- மாவட்ட சட்டப் பணிகள் ஆணையத்தின் தேசிய அளவிலான முதல் கூட்டம் டெல்லியில் நேற்று நடைபெற்றது.
- நீதித் துறையில் தகவல் தொழில்நுட்பத்தை முழுமையாக பயன்படுத்த வேண்டியது அவசியம்.
- மின்னணு நீதிமன்றங்கள் திட்டத்தின் கீழ் நாடு முழுவதும் மெய்நிகர் நீதிமன்றங்கள் தொடங்கப்பட்டு வருகின்றன.
- போக்குவரத்து விதிமீறல் போன்ற குற்றங்களுக்காக 24 மணி நேர நீதிமன்றங்கள் செயல்படத் தொடங்கி உள்ளன.
- மக்களின் வசதிக்காக நீதிமன்றங்களில் காணொலி வசதி விரிவுபடுத்தப்பட்டு வருகிறது.

## கொடியின் வரலாறு

- ஜனாதிபதியின் கவுரவக்கொடி என்பது, இந்தியாவில், 5,000 ஆண்டுகளுக்கு முன்பு மன்னராட்சி காலத்தில், மன்னரின் படை அணிவகுப்பில் இடம் பெற்ற கொடியாக இருந்தது.
- போரின்போது, இந்த கொடியை எதிரிகள் பறித்து விட்டால், அது மிகவும் அவமானகரமானதாக கருதப்பட்டது.
- மன்னராட்சிக்கு பின், ஆங்கிலேயர் ஆட்சியின்போது, இந்த கொடியானது, ராணுவ அணிவகுப்பில் இடம் பெற்றது.
- நாடு சுதந்திரம் அடைந்தபின், 1950ல் இந்தியாவில் இருந்த, 33 குறுநில மன்னர்களின் வண்ணகொடிகள் தனித்தனியாக பிரிக்கப்பட்டு, இந்திய ராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டன.
- ராணுவம் மற்றும் பாதுகாப்பு படைகளில் சிறந்து விளங்கும் அமைப்பை கவுரவப்படுத்தும் விதமாக, ஜனாதிபதியால் அறிமுகம் ானது.
- ஜனாதிபதியாக டாக்டர் ராஜேந்திரபிரசாத் இருந்த போது, 1951, மே 27-ல், முதல் முறையாக இந்திய கடற்படைக்கு, ஜனாதிபதியின் கவுரவக்கொடி வழங்கப்பட்டது.
- தற்போது, உத்தரபிரதேசம், டில்லி, மஹாராஷ்டிரா ஜம்மு-காஷ்மீர், திரிபுரா, குஜராத், இமாச்சல், ஹரியானா, அசாம் ஆகிய ஒன்பது மாநில போலீஸ் படைகளுக்கு ஜனாதிபதியின் கொடி கிடைத்துள்ளது.
- தென்மாநிலங்களில் முதல்முறையாக, தமிழகத்துக்கு கிடைத்துள்ளது.
- தமிழகத்துக்கான கொடியானது, அடர்நீல நிறத்தில் மஞ்சள் நிற நட்சத்திரங்கள் இணைக்கப்பட்டு, மத்தியில் தமிழக அரசின் கோபுர முத்திரை சின்னம் பொறிக்கப்பட்டுள்ளது.

SURESH'

Study Materials
TNPSC குரூப் - I 2022 A3 பாட புத்தகங்கள் (Degree Standard) TAMIL & ENGLISH
Set of Books
TNPSC குரூப் - I 2022 SCERT பாட புத்தகங்கள் பொது அறிவு
Set of Books
TNPSC குரூப் - I PRELIMS TEST SERIES மற்றும் TNPSC குரூப் - II / IIA MAINS வகுப்புகளை Online -ல் பெற
Any where Any time Any One
சுரேஷ் பாடசாலை
Online Learning Platform
Comprehensive Coaching for
TNPSC | BANK | RAILWAY | POLICE | SSC | TET
90 444 61 061, 90 444 62 062
sureshpaadasaalai@gmail.com
sureshpaadasaalai.com
Play Store App
வெற்றியின் முகவரி
SURESH' IAS ACADEMY SINCE 2006
BANK | TNPSC | SSC | RAILWAY | POLICE | TET
தூத்துக்குடி: 162-A, எட்டையபுரம் ரோடு, 99445 11344, 99941 70110
திருநெல்வேலி: 8A/1, இலந்தகுளம் ரோடு, பாளையங்கோட்டை, 98942 41422, 99948 14400
இராமநாதபுரம்: 82, புளிகாரத் தெரு, கண்ணன் கோவில் அருகில், 75503 52916, 75503 52917
மதுரை: மாஸ்டர் மஹால் பின்புறம், முடக்குச்சாலை, காளவாசல், 98431 10566, 98431 15233
விரைவில் @ சென்னை

# 02 மாநில நிகழ்வுகள்

## தமிழக எம்.எல்.ஏ. ஓட்டு மதிப்பு 176

### ரகசிய வாக்கெடுப்பு

- ரகசிய ஓட்டுப்பதிவு என்பதாலும், கொறடா உத்தரவு கிடையாது என்பதாலும், ஜனாதிபதி தேர்தலில், எம்.பி., – எம்.எல்.ஏ.,க்கள், தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு ஓட்டளிக்கலாம்.

### ஓட்டு மதிப்பு

- இந்தியாவில் அதிகபட்சமாக உத்தரபிரதேச மாநில எம்.எல்.ஏ., ஒருவரின் ஓட்டு மதிப்பு 208.
- குறைந்தபட்சமாக சிக்கிம் எம்.எல்.ஏ.இ ஒருவரின் ஓட்டு மதிப்பு ஏழு.
- அருணாசலப் பிரதேசம், மிசோரம் மாநில எம்.எல்.ஏ., ஒருவரின் ஓட்டு மதிப்பு எட்டு.

### மதிப்பு

- ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள, 1971-ம் ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கையை, தற்போதுள்ள சட்டசபை தொகுதி களின் எண்ணிக்கையை வைத்து வகுத்தால், என்ன தீர்வு கிடைக்குமோ, அதுதான் ஒரு எம்.எல்.ஏ.,வின் ஓட்டு மதிப்பு

### உரிய காரணம்

- ராஜ்யசபா, லோக் சபா எம்.பி., ஒருவரின் ஓட்டு மதிப்பு 700.
- தமிழகத்தை பொறுத்தவரை, தலைமைச் செயலகத்தில், சட்டசபை செயலர் அறை அருகில் உள்ள அரங்கில், ஓட்டுப் பதிவு நடக்கும்.
- எம்.பி.க்கள் பார்லிமென்ட் வளாகத்தில் ஓட்டளிப்பர்.

### அனுமதி

- எம்.எல்.ஏ.,க்களும்., வேறு மாநிலங்களில் ஓட்டளிப்பதாக இருந்தால், தேர்தல் கமிஷன் அனுமதி பெற வேண்டும்.
- தேர்தலில் ஓட்டுப்பதிவு இயந்திரம் பயன்படுத்தப்படாது. ஓட்டுச் சீட்டு முறையே பின்பற்றப்படும்.

### ஓட்டுச்சீட்டு

- எம்.பி.,க்கள் ஓட்டளிக்க பச்சை நிறத்திலும்,
- எம்.எல்.ஏ.,க்கள் ஓட்டளிக்க இளஞ்சிவப்பு நிறத்திலும், ஓட்டுச்சீட்டு அச்சிடப்படும்.

## கல்விக் குறியீடு தமிழகம் முன்னிலை

- மத்தியக் கல்வி அமைச்சகம் சார்பில் பி.ஜி.ஐ.டி (Performance Grading Index for Districts) எனப்படும் மாவட்டங்களுக்கான செயல்திறன் தர அட்டவணை அறிமுகமானது.

### உலகில் பெரியது

- நாடு முழுவதும் சுமார் 15 லட்சம் பள்ளிகள், 97 லட்சம் ஆசிரியர்கள், பலதரப்பட்ட சமூக பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட 26 கோடி மாணவர்களைக் கொண்டதாக இந்தியக் கல்வி முறை உள்ளது.
- இந்தியாவில் உள்ள அனைத்து மாவட்டங்களின் செயல்திறனை மதிப்பிடுவது அவசியமாகிறது. அதற்காக உருவாக்கப்பட்ட பிஜிஐ-டி-யில் மாவட்டங்களைப் பட்டியலிட பயனுள்ள வகுப்பறை தொடர்புகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மாணவர்களின் உரிமைகள், பள்ளிப் பாதுகாப்பு, குழந்தைகள் பாதுகாப்பு, டிஜிட்டல் கற்றல் மற்றும் ஆளுகை செயல்முறை என ஆறு பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டன.

- 2019-20ஆம் ஆண்டில் முதல் ஐந்து இடங்களை பஞ்சாப், சண்டிகர், தமிழ்நாடு, அந்தமான் நிக்கோபார் தீவுகள், கேரளா ஆகியவை பிடித்துள்ளன.

**தமிழகம் டாப்**

- தமிழகம் கல்வி, அணுகல், சமபங்கு, உள்கட்டமைப்பு மற்றும் ஆளுகை செயல்முறைகள் ஆகிய ஐந்து அளவுகோல்களில் நாட்டில் முன்னிலை வகிக்கிறது.

**தமிழகம் - ஸ்மார்ட் மாநிலம்**

**(1.25 லட்சம் கோடி முதலீடு ஈர்ப்பு)**

- அனைவருக்குமான, அனைத்து துறைக்குமான வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட திராவிட மாடல் மாநிலத்தை நோக்கி தொழிலதிபர்கள், உலக நிறுவனங்கள் வரத் தொடங்கியதன் அடையாளம்.
- தமிழகத்தை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளதாரமாக உயர்த்துவது, தெற்காசியாவில் முதலீடுகளுக்கு உகந்த மாநிலமாக தமிழகத்தை ஆக்குவது
- உலகின் மூலை முடுக்கெல்லாம் தமிழகத்தில் உற்பத்தி செய்ப்பட்ட பொருட்கள் சென்றடையச் செய்வது, மாநிலம் முழுவதும் முதலீடுகள் பரவலாகவும், சீராகவும் மேற்கொள்ளப்பட்டு அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி ஆகிய 4 இலக்குகளை அடைய தமிழக அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருகிறது.
- 11 நிதி நுட்பத் திட்டங்களுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டதுடன், 2 நிறுவனங்களுக்கு ஊக்கத் தொகுப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.
- காற்றாலை, சூரியசக்தி, மின்உற்பத்தியுடன் பசுமை ஹைட்ரஜன் தொழிற்சாலை தூத்துக்குடியில் கொண்டுவரப்பட்டுள்ளது. இதன்மூலம் தூத்துக்குடி புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மையமாக உருவாகும்.
- செமிகண்டக்டர் உற்பத்திக்கான உயர் தொழில்நுட்ப பூங்காவை ரூ.26,500 கோடியில் தமிழகத்தில் அமைக்க ஐஜிஎஸ்எஸ்வி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

SURESH'

## தமிழக அரசு அமைத்த மாநில கல்வி குழு

- இப்போதுள்ள பள்ளிக்கூட கல்வி முறையில் அதாவது 10+2 என்ற முறையை அப்படியே மாற்றி 5+3+3+4 என்ற முறை கூறப்பட்டு இருந்தது.
- தேசியகல்வி கொள்கை மும்மொழி கல்வித் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.
- தமிழக அரசு தமிழ், ஆங்கிலம், என்ற இரு மொழி கொள்கையையே லட்சியமாக கொண்டுள்ளது.
- டெல்லி ஐகோர்ட்டின் முன்னாள் தலைமை நீதிபதி த. முருகேசன் தலைமையில் 13 கல்வியாளர்கள் கொண்ட ஒரு குழுவை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.
- கிராமப்புறங்களில் உள்ள கல்வி நிலைமை, அடிப்படைக்கல்வி நிலைமையை ஆராய, நாகை மாவட்டம், கிச்சான்குப்பம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் இரா.பாலு இடம்பெற்று இருப்பது அனைத்து மாவட்டத்திலும் கல்வி வளர்ச்சியில் தமிழக அரசுக்கு உள்ள முனைப்பை பறைசாற்றுகிறது.
- கல்வி மற்றும் தமிழக இளைஞர்களின் எதிர்கால நலனையும் கருத்தில்கொண்டு, ஒரு சிறப்பான மாநில கல்வி கொள்கையை வகுக்க வேண்டும்.
- நவீன தொழில்நுட்பம், குழந்தைகள் பராமரிப்பு, பள்ளிக்கூட கல்வி, கல்லூரி கல்வி, உயர்கல்வி, முதியோர் கல்வி உள்பட மாறிவரும் உலகளாவிய கல்வி மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றை லட்சியமாக கொண்டு கல்வியாளர்கள் மற்றும் நிபுணர்களின் கருத்துகளை பெற்று, தேவையான சீர்திருத்தங்களை பரிந்துரை செய்ய வேண்டும்.
- தேர்வு முறையில், சீர்திருத்தம், ஆசிரியர்கள் தேர்வு மற்றும் பயிற்சியில் சீர்திருத்தல், பள்ளிக்கூடங்களில் படித்து தேர்வில் வெற்றி பெறும் அனைத்து மாணவர்களும், ஏதாவது ஒரு உயர் கல்வியில் சேருதல் உள்பட பல பரிந்துரைகளை இந்த குழு அளிக்க வேண்டும்.

- ஒரு ஆண்டில் இந்த குழு தனது இறுதி அறிக்கையை அரசுக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றும் அந்த ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வமும், படித்தவுடன் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கான பாடத்திட்டங்களும் பரிந்துரை செய்யப்பட வேண்டும். ஏற்கனவே வைரமாக இருக்கும் தமிழக கல்வியும், நமது இளைஞர்களும் மேலும் பட்டை தீட்டப்பட்டு ஒளிவிடும் வைரமாக திகழ இந்த புதிய கல்வி கொள்கையை உறுதியாக வழி வகுக்கும் என்பதே கல்வியாளர்களின் கருத்தாகும்.

## தொழில் புரிய உகந்த மாநிலம்

- முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், 2030-2031-ம் ஆண்டுக்குள் தமிழ்நாட்டை ஒரு டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரமாக அதாவது ரூ.78 லட்சம் கோடி பொருளாதாரமாக வளர்ச்சி அடையச் செய்ய வேண்டும் என்பதையே தன் லட்சியம்.
- ஆந்திரா, குஜராத்துக்கு அடுத்தபடியாக மூன்றாவது இடத்தில் இருக்கிறது.
- சிங்கப்பூரை தலைமையிடமாகக் கொண்ட ஐ.ஜி.எஸ்.எஸ் வென்ச்சர்ஸ் நிறுவனத்துக்கும், தமிழக அரசின் வழிகாட்டி நிறுவனத்துக்கும் இடையே 300 ஏக்கர் பரப்பளவில் கம்ப்யூட்டர், செல்போன், மோட்டார் வாகனம் போன்றவைகளின் உற்பத்திக்கு தேவையான 'செமி கண்டக்டர்' உயர் தொழில்நுட்ப பூங்காவை அமைப்பதற்காக ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

## தமிழக போலீசுக்கு சிறப்பு கொடி

- ஸ்காட்லாந்து போலீசுக்கு இணையாக கருதப்படும் தமிழக போலீசுக்கு பல சிறப்புகள் உண்டென்றாலும், ஜனாதிபதியின் விருது மற்றும் சிறப்பு கொடி என்று அழைக்கப்படும் தனிக்கொடி கிடைத்துள்ளது.
- இந்தியாவின் முதல் போலீஸ் துறை, 1856-ல்அப்போது மெட்ராஸ் என்று அழைக்கப்பட்ட சென்னையில்தான் உருவாக்கப்பட்டது.
- போலீஸ் துறையின் முன்னோடி சென்னை என்ற பெயர் உண்டு.
- இந்திய போலீஸ் முதல் கைரேகை பிரிவு, தடய அறிவியல் பிரிவுகள், வயர்லெஸ் அமைப்பு, கடலோர காவல் படை, கடலுக்குள் அதிவேக படகில் ரோந்து செல்லும் பணியை தொடங்கியது.
- தமிழக போலீசுக்கு மிக உயரிய ஜனாதிபதியின் சிறப்பு கொடியை வழங்க வேண்டும் என்று கருணாநிதி முதல் அமைச்சராக இருந்தபோது கேட்டதற்கிணங்க, 2009-ல் அதற்கான ஆணை தமிழக போலீஸ் துறையின் 150-வது ஆண்டு விழாவை கொண்டாடிய நேரத்தில் பிறப்பிக்கப்பட்டது.
- இத்தகைய சிறப்பு, நாட்டுக்காக சீர்மிகு சேவையாற்றிய ராணுவம், துணை ராணுவ படைகள், மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள போலீஸ் துறைக்கு வழங்கப்படுகிறது.
- இந்தியாவில் முதல் முதலாக 1951-ல் முதல் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்தால் கப்பல் படைக்கு வழங்கி பெருமை சேர்க்கப்பட்டது.
- இதுவரையில், 10 மாநிலங்களுக்கு இந்த கொடி வழங்கப்பட்டுள்ளது.
- தென் மாநிலங்களில் இந்த சிறப்பைப் பெறும் முதல் மாநிலம் தமிழ்நாடுதான்.
- ஜனாதிபதி கலர் என்று அழைக்கப்படும் விருதையும், சிறப்பு கொடியையும் முதலில் வடிவமைத்தது இந்திய ரூபாய் சின்னத்தை வடிவமைத்த கவுகாத்தி ஐ.ஐ.டியின் வடிவமைப்பு துறை பேராசிரியர் டி.உதயகுமார்தான்.
- தமிழ்நாட்டுக்கு வழங்கப்படும் கொடியை வடிவமைக்கும் பணிகளை முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனையைப் பெற்று, டி.ஜி.பி.சைலேந்திரபாபு செய்து வருகிறார்.
- தமிழக போலீசில் டி.ஜி.பி.யாக பணிபுரியும் சைலேந்திர பாபு உள்பட ஒரு லட்சத்து 31 ஆயிரத்து 491 போலீசார், அதிகாரிகள் அனைவருக்குமே மிகப்பெரிய கவுரவம் கிடைத்துள்ளது.
- அனைவரும் தோள்பட்டையில் இந்த தனிக்கொடி சின்னத்தை இனி பொறித்துக் கொள்வார்கள். இது அவர்களுக்கு தனி அந்தஸ்தை கொடுக்கும்.

### காவல்துறையில் புதிய சீருடை 'லோகோ' அறிமுகம்

- தமிழக காவல்துறையில் முதல்முறையாக காவலர் முதல் டிஜிபி வரையிலான அனைவரது சீருடையிலும் ஒரே மாதிரியான அடையாள 'லோகோ' இடம்பெற உள்ளது.
- டிஜிபியின் தோள்பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியில் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம், காலரில் ரிப்பன் இருக்கும்.
- கூடுதல் டிஜிபியின் சீருடையில், தோள்பட்டையில் ஐபிஎஸ், அசோக சின்னம், அதன் கீழ் குறுக்காக வைக்கப்பட்ட வாள், குறுந்தடி, தொப்பியல் வெள்ளி ஜரிகை ஆலிவ் இலை வடிவ ஐபிஎஸ் சின்னம் இருக்கும்.
- காவல் ஆய்வாளர்கள் சீருடையின் தோள்பட்டையில் டி.பி. (தமிழ்நாடு போலீஸ்) கயிறு, 3 ஸ்டார் இருக்கும்.
- உதவி ஆய்வாளர்களுக்கு இரண்டு ஸ்டார், தலைமைக் காவலருக்கு 3 பட்டைகள் இருக்கும்.
- ஸ்ரீவில்லிபுத்தூர் கோபுரம், அசோக சின்னம், தேசியக்கொடி, உள்ளிட்டவற்றுடன், 'தமிழ்நாடு காவல்' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏற்கனவே உள்ள அடையாளச் சின்னங்களுடன் கூடுதலாக இந்த லோகோவும் இடம்பெறும்.
- தமிழக போலீஸார் அனைவரின் சீருடையின் இடது கை பகுதியில் ஜொலிக்க வேண்டும்.
- லோகோ வடிவமைப்பை, தமிழக காவல்துறை நவீனமயமாக்கல் கூடுதல் டிஜிபி சஞ்சய் குமார் செய்துள்ளார்.
- தமிழகத்தில் 1,305 சட்டம்-ஒழுங்கு காவல் நிலையங்கள்
- 17 ரயில்வே காவல் நிலையங்கள்
- 202 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்
- 273 போக்குவரத்து மற்றும் புலனாய்வு காவல் நிலையங்கள்
- 27 புறக்காவல் நிலையங்கள்
- தமிழக காவல் துறையில் 1 லட்சத்து 17 ஆயிரத்து 942 போலீஸார் பணிபுரிகின்றனர். இவர்களில் 23,542 பேர் பெண்கள்.

SURESH'

## 36-வது உலக மக்கள்தொகை தினம்

- தமிழக மக்கள்தொகை 50 ஆண்டுகளில் இரு மடங்காக உயர்ந்துள்ளது.
- 1987 ஜுலை 11-ம் தேதி உலக மக்கள் தொகை 500 கோடியை எட்டியது. அந்நாளே உலக மக்கள் தொகை தினமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. இன்று (ஜுலை 11) 36-வது உலக மக்கள் தொகை தினமாகும்.
- நாட்டின் முதல் மக்கள்தொகை கணக்கெடுப்பு 1872-ம் ஆண்டு நடைபெற்றது.
- 1881-ம் ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்பட்டு வருகிறது.
- 16-வது மக்கள் தொகை கணக்கெடுப்பு 2021-ம் ஆண்டு நடைபெற வேண்டிய நிலையில், கரோனா பரவல் காரண மாக 2 ஆண்டுகளாக மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படாமல் உள்ளன.
- 20-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் 20 கோடியாக இருந்த நாட்டின் மக்கள்தொகை நூறாண்டுகளில் 100 கோடியாகவும்,
- மக்கள்தொகை அதிகரித்து வந்தாலும் மக்கள் பெருக்கம் (பிறப்பு வீதம்) கணிசமாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
- உலக மக்கள்தொகைப் பெருக்கம் 2016-ல் 1.14 சதவீதம், 2017-ல் 1.12 சதவீதம், 2018-ல் 1.09 சதவீதமாக இருந்தது. இது 2023-ம் ஆண்டில் 1 சதவீதமாக குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### தமிழக மக்கள் தொகை

- தமிழக மக்கள் தொகை 1901-ல் 1.92 கோடியாக இருந்தது. தொடர்ந்து, 1951-ல் 3.01 கோடி, 1961-ல் 3.3 கோடி, 1960 முதல் 1970 வரையிலான காலகட்டத்தில் 22.3 சதவீதம் அதிகரித்து, 1971-ல் 4.11 கோடியாக இருந்தது.
- அதன்பின், தீவிர குடும்ப கட்டுப்பாடு திட்டங்களால் மக்கள்தொகை பெருக்கம் ஓரளவு கட்டுப்படுத்தப்பட்டதால், 1981-ல் 4.8 கோடியானது.
- தொடர்ந்து, 1991-ல் 5.5 கோடி, 2001-ல் 6.24 கோடி, 2011-ல் 7.24 கோடியாக இருந்த தமிழக மக்கள் தொகை தற்போது

8 கோடியை கடந்திருக்கும் என மதிப்பிடப்பட்டு உள்ளது.

- கடந்த 50 ஆண்டுகளில் தமிழக மக்கள் தொகை இருமடங்காக அதிகரித்துள்ளது.
- மக்கள் தொகை பெருக்கத்தை குறைக்க அரசு புதிய திட்டங்களை அமல்படுத்த வேண்டும்.

## தமிழகத்தில் காற்றாலை மின் உற்பத்தி

- தமிழகத்தின் ஒட்டுமொத்த மின் பயன்பாட்டில் காற்றாலைகள் மூலம் கிடைக்கும் மின்சாரம் 35 சதவீதமாக உள்ளது.
- நாட்டில் மொத்தமுள்ள 25,000 காற்றலைகளில் தமிழகத்தில் மட்டும் 12,000 காற்றாலைகள் உள்ளன.
- தொடர்ந்து 7-வது நாளாக காற்றாலைகள் மூலம் தினமும் 100 மில்லியன் யூனிட் மின்சாரம் உற்பத்தியாகியுள்ளது.
- தமிழகத்தில் வழக்கமாக மே மாதம் முதல் செப்டம்பர் வரை காற்றின் வேகம் அதிகமாக இருக்கும். 6 மாதங்களில் அதிகளவு காற்றாலை மின்சாரம் உற்பத்தியாகும்.
- தமிழகத்தில் கோவை, திருப்பூர், திண்டுக்கல், கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அதிக அளவில் காற்றாலைகள் உள்ளன.
- தமிழகத்தில் 8,518 மெகாவாட் உற்பத்தி திறனுக்கு காற்றாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

## கிங்மேக்கர் காமராஜர்

- 'பெருந்தலைவர் காமராஜர்' தமிழகத்தை ஒன்பது ஆண்டு காலம் ஆட்சி செய்த இவருடைய காலம், தமிழக அரசியல் வரலாற்றில் "பொற்காலமாக" கருதப்படுகிறது.
- பள்ளிக் குழந்தைகளுக்கு இலவச மதிய உணவு திட்டத்தினை ஏற்படுத்தி, ஏழை, எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார்.
- பெரும் தலைவர், தென்னாட்டு காந்தி, படிக்காத மேதை, கர்ம வீரர், கல்விக்கண் திறந்த காமராஜர் என பல்வேறு சிறப்பு பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

SURESH'

### பிறப்பு

- காமராஜர் 1903-ம் ஆண்டு ஜூலை 15-ம் தேதி, விருதுநகரில் குமாரசாமி நாடாருக்கும், சிவகாமியம்மாவுக்கும் மகனாக பிறந்தார்.

### சுதந்திரப் போராட்டம்

- இந்திய நேஷனல் காங்கிரஸில் முழு நேர ஊழியராக, 1920ம் ஆண்டில், தனது 16வது வயதில் சேர்ந்தார். உப்பு சத்தியாகிரகத்தின் ஒரு பகுதியாக, 1930ம் ஆண்டு ராஜகோபாலாச்சாரி தலைமையில் வேதாரண்யத்தை நோக்கி நடந்த திரளணியில் பங்கேற்று, கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.
- அடுத்த ஆண்டே காந்தி இர்வின் ஒப்பந்தத்தின் அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார்.
- ஒத்துழையாமை இயக்கம், வைக்கம் சத்தியாகிரகம், நாக்பூர் கொடி சத்தியாகிரகம் போன்றவற்றில் பங்கேற்ற காமராஜர், சென்னையில் வாள் சத்தியாகிரகத்தை துவங்கி, நீல்சிலை சத்தியா கிரகத்திற்குத் தலைமைத் தாங்கினார். பல போராட்டங்களில் பங்கேற்ற அவர் 6 முறை சிறையில் அடைக்கப்பட்டு, 9 ஆண்டுகள் சிறைத்தண்டனை அனுபவித்தார்.

### அரசியல் குரு

- மிகச்சிறந்த பேச்சாளர் எனப் புகழப்பட்ட சத்திய மூர்த்தியை தன்னுடைய அரசியல் குருவாக மதித்தார்.
- இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு, முதலில் சத்திய மூர்த்தி வீட்டிற்குச் சென்று தேசியக்கொடியை ஏற்றினார்.

### தமிழக முதல்வர்

- 1953-ம் ஆண்டு ராஜாஜி கொண்டுவந்த குலக் கல்வி திட்டத்தால், எதிர்ப்புகள் கிளம்பியது.
- காமராஜர் பெருவாரியான ஓட்டுகளைப் பெற்றதால், 1953ம் ஆண்டு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றார்.


தூத்துக்குடி - 99445 11344 | திருநெல்வேலி - 98942 41422 | ராமநாதபுரம் - 75503 52916 | மதுரை - 98431 10566

SURESH' IAS ACADEMY
MOST TRUSTED SINCE 2006

**ஆற்றிய பணிகள்**

- ராஜாஜி கொண்டு வந்த குலக்கல்வித் திட்டத்தினை கைவிட்டு, அவரால் மூடப்பட்ட 6000 பள்ளிகளைத் திறந்தார். மேலும் 17000த்திற்கும் மேற்பட்ட பள்ளிகளைத் திறந்ததோடு மட்டுமல்லாமல், பள்ளிக் குழந்தைகளுக்கு "இலவச மதிய உணவு திட்டத்தினை" ஏற்படுத்தி ஏழை எளிய மக்களின் கல்வியில் முன்னேற்றத்தினை ஏற்படுத்தினார்.

**வளர்ச்சித் திட்டங்கள்**

- காமராஜர் கல்வித் துறையில் மட்டுமல்லாமல், தொழில்துறை, நீர்பாசனத் திட்டங்கள், மின் திட்டங்கள் போன்றவற்றிலும் முன்னேற்றத்தை ஏற்படுத்தினார்.
- நெய்வேலி நிலக்கரித் திட்டம், பெரம்பலூர் ரயில் பெட்டி தொழிற்சாலை, திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ், கல்பாக்கம் அணுமின் நிலையம், ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை, கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை, மேட்டூர் காகிதத் தொழிற்சாலை, சேலம் இரும்பு உருக்கு ஆலை, பாரத மிகு மின் நிறுவனம், இரயில் பெட்டித் தொழிற்சாலை என மேலும் பல தொழிற்சாலைகள் காமராஜரால் உருவாக்கப்பட்டன.
- இதைத் தவிர, மேட்டூர் காவல்வாய்த் திட்டம், பவானி திட்டம், காவேரி டெல்டா வடிகால் அபிவிருத்தி திட்டம், மணிமுத்தாறு, அமராவதி, வைகை, சாத்தனூர், கிருஷ்ணகிரி, ஆரணியாறு போன்ற நீர்ப்பாசன திட்டங்களையும் ஏற்படுத்தினர்.
- காமராஜர் ஆட்சியின் இறுதியில், தமிழகம் தொழில் வளத்தில் வட மாநிலங்களைப் பின்னுக்குத் தள்ளி, இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

## காலை சிற்றுண்டி

- தமிழகத்தில் 1 முதல் 5-ம் வகுப்பு வரையிலான அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலை வேளையில் சிற்றுண்டி வழங்கப்படும்.
- சுயஉதவிக் குழுக்கள், பஞ்சாயத்து அளவிலான கூட்டமைப்பு மூலம் அரசு தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு காலையில் சத்தான சிற்றுண்டி வழங்க வேண்டும்.
- உணவு தயாரிக்கும் பணியில் குறைந்தபட்சம் 3 ஆண்டு அனுபவத்துடன், பள்ளியில் இருந்து 1 கி.மீ சுற்றளவில் உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
- காலை உணவானது அரிசி அல்லது சிறுதானியங்கள் மூலம் தயாரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். காலை 8.15 முதல் 8.45 மணிக்குள் சிற்றுண்டி வழங்கப்பட வேண்டும்.
- அடுப்பு, சிலிண்டர், பாத்திரங்கள் ஆகியவை சமூக நலத்துறை மூலம் வழங்கப்படும்.
- மளிகை பொருட்கள், காய்கறிகளை உள்ளூர் சந்தையில் வாங்கிக் கொள்ளலாம். சத்தான சிற்றுண்டி வழங்க ஒரு குழந்தைக்கு தினசரி ரூ.8.25 வீதம் தற்காலிகமாக ஒதுக்கப்படுகிறது.
- காலை உணவு சமைக்கும் சுயஉதவி குழுவினர்களுக்கு மாதம் ரூ.2,000 வழங்கப்படும்.

## கல்வி சிறந்த தமிழ்நாடு

- 2022 - ம் ஆண்டிற்கான தேசிய உயர்கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை ஒன்றிய கல்வி, திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் 15 - 07 - 2022 அன்று வெளியிட்டுள்ளார்.
- இந்த பட்டியல் திராவிட மாடல் ஆட்சியின் கல்விக்கொள்கைக்கு மணி மகுடமாக திகழ்கிறது.
- கடந்த 2016 முதல் ஒவ்வொரு வருடமும் ஒன்றிய அரசின் கல்வித்துறை, இந்திய தேசிய உயர் கல்வி நிறுவனங்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டு வருகிறது.
- தரமான உயர் கல்வி வழங்கும் மாநிலங்களில் நம்பர் 1 தமிழகம்.
- தலைசிறந்த 100 கல்வி நிறுவனங்களில் 18 தமிழகத்தை சேர்ந்தது.
- தலைசிறந்த பல்கலைக் கழகங்களின் பட்டியலில் முதல் 100 இடத்தில் 21 இடங்கள் தமிழகத்துக்குத்தான்.

- 50 சிறந்த ஆராய்ச்சி நிறுவனங்கள் பட்டியலில் 10 இடத்தையும், 100 சிறந்த கல்லூரிகளில் 32-ஐயும் தமிழகம் பெற்றுள்ளது.
- 28 மாநிலங்கள், 8 யூனியன் பிரதேசங்களில் இருந்து குவிந்த விண்ணப்பங்களில், தரவரிசை பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளதையும், அதில் 18 சதவீதம் தமிழக உயர் கல்வி நிறுவனங்கள் பெற்றுள்ளதையும் திராவிட மாடல் கல்வியின் வெற்றி.
- தரமான கல்வி அனைவரையும் சென்றடைய வேண்டும் என்பதுதான் திராவிட மாடல் கல்வியின் அடிப்படை கொள்கை.

## தமிழ்நாடு

- தமிழக வரலாற்றில் 1967- ஆம் ஆண்டு, ஜுலை 18 எனும் நன்னாள் ஒரு பொன்னாள் ஆகும்.
- அண்ணா, நம் மாநிலத்துக்கு 'தமிழ்நாடு' எனும் பெயர் சூட்டிப் பெருமை சேர்த்தார்.
- தமிழ்நாடு என்று பெயர் சூட்ட வேண்டும் என்று வலியுறுத்தி, தியாகி சங்கரலிங்கனார் எழுபத்தெட்டு நாட்கள் (27.07.1956 முதல் 13.10.1956 வரை) உண்ணா நோன்பிருந்து உயிர் நீத்தது. தமிழக மக்களின் உள்ளத்தை உருக்கும் வரலாற்று நிகழ்வாயிற்று.
- 1957-ஆம் ஆண்டில், இந்தியாவில் மொழிவழி மாநிலங்கள் பிரிந்தபோதிருந்து, 1996-ஆம் ஆண்டு வரை, மதராஸ் மாகாணம் என்றே அழைக்கப்பட்டு வந்தது.
- அதனால்தான், தென்னக மக்கள் அனைவரையும், 'மதராசி' என்று வட இந்தியர்கள் அப்போது அழைத்து வந்தனர்.
- தமிழ்நாடு என்பது வெறும் பெயர்ச்சொல் மட்டுமன்று; அது தமிழ் மாநிலம், மக்கள், இனம் இலக்கியம், பண்பாடு போன்ற அனைத்தையும் குறிக்கும்.

### மறைமுக விற்பனைப் பண்டமாகும் பெண்ணுடல்

- ஈரோட்டில் தன் 16 வயது மகளது சினைமுட்டையைப் பணத்துக்கு விற்றிருக்கிறார் ஒரு பெண்.

### பணம் கொழிக்கும் வியாபாரம்

- செயற்கைக் கருவூட்டல் குறித்த புரிதலும் தெளிவும் இல்லாத பலரும், இந்த விஷயத்தில் மருத்துவர்களைத்தான் நம்ப வேண்டியிருக்கிறது.
- மக்களின் இந்த அறியாமை வணிக நோக்கில் செயல்படுகிறவர்களுக்கு வசதியாகிவிடுகிறது. மக்களின் பணத்தையும் பெண்களின் உடலையும் சுரண்டிக் கொழுத்து வளர்கின்றனர்.

### பார்த்தால் தெரியாதா?

- செயற்கைக் கருவூட்டல் ஒழுங்குமுறைச் சட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளின் ஒப்புதலோடு நிறைவேற்றப்பட்டது.
- விந்தணு, சினைமுட்டை தானம் அளிப்பவர்களுக்கான நெறிமுறைகளும் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.
- ஆணாக இருந்தால் 21-55 வயதுக்குள்ளும், பெண்ணாக இருந்தால் 23-35 வயதுக்குள்ளும் இருக்க வேண்டும்.
- ஒரு பெண்ணிடமிருநது ஒரே ஒரு முறைதான் சினைமுட்டையைப் பெற வேண்டும், அதிகபட்சம் ஏழு முட்டைகள் வரை பெறலாம்.

### அரசு பொறுப்பேற்க வேண்டும்

- அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் குழந்தைப் பேறின்மை சிகிச்சை மையங்களையும் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் செயற்கைக் கருவூட்டல் மையங்களையும் அமைத்தால், சிகிச்சை என்கிற பெயரில் பெண்ணின் உடல் சுரண்டப்படுவது தவிர்க்கப்படும்.
- இனப்பெருக்கம் சார்ந்த இந்த நடைமுறைகளில் பெண்ணின் உடல் பெரும் பாதிப்புக்கு ஆளாகிறது. விந்தணு தானத்தைப் போல எளிதானதல்ல சினைமுட்டைதானம்.
- குழந்தைப்பேறு தொடர்பான சிகிச்சை முறைகளில் முறைகேடு நடக்கவும் இடைத்தரகர்களின் தலையீடு அதிகரிக்கவும்

SURESH' IAS ACADEMY MOST TRUSTED SINCE 2006

வறுமை ஒரு காரணமாகச் சொல்லப்பட்டாலும் குழந்தைப்பேறு, வாரிசுரிமை, ஆண்மை, பெண்மை தொடர்பாக நம் சமூகத்தில் வேரூன்றியிருக்கும் பிற்போக்குச் சிந்தனைகளே இதுபோன்ற அறம் பிறழ்ந்த செயல்கள் நடைபெறக் காரணமாக இருக்கின்றன.

**பெண்மை எனும் பெரும்சுமை**

- ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயது மங்கத்தாயம்மா செயற்கைக் கருவூட்டல் முறையில் 2019-இல் இரட்டைப் பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்த சம்பவம் பலருக்கும் நினைவிருக்கும்.
- உலகின் மிக வயதான 'அம்மா' என அவர் புகழப்பட்டார்.

## பள்ளிக்கரணை, பிச்சாவரம் சதுப்புநிலங்கள் ராம்சர் பட்டியல்

- தமிழகத்தின் பள்ளிக்கரணை, பிச்சாவரம், கரிக்கிளி உள்ளிட்ட 5 சதுப்புநிலங்கள் சர்வதேச பாதுகாப்புக்கான 'ராம்சர்' பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.
- சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் சதுப்புநிலங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அந்தச் சதுப்பு நிலங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக ஈரானில் உள்ள ராம்சர் நகரில் 1971-ஆம் ஆண்டு சர்வதேச ஒப்பந்தம் கையொப்பமானது.
- அந்த ஒப்பந்தத்தின் கீழ் சர்வதேச அளவில் முக்கியத்துவம் வாய்ந்த சதுப்பு நிலங்களைக் கூடுதல் கவனம் செலுத்தி பாதுகாக்க உறுதியேற்கப்பட்டது.
- முக்கியமாக, சதுப்பு நிலங்களின் அழிவைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள நாடுகள் உறுதியேற்றன.
- ராம்சர் பட்டியலில் இந்தியாவில் உள்ள 49 சதுப்பு நிலங்கள் ஏற்கனவே இணைக்கப்பட்டுள்ளன.
- தமிழகத்தில் உள்ள பள்ளிக்கரணை சதுப்புநிலம், பிச்சாவரம் சதுப்பு நிலம், கரிக்கிளி பறவைகள் சரணாலயம் ஆகியவையும் மிஸோரத்தின் பாலா சதுப்புநிலம், மத்திய பிரதேசத்தின் சாக்ய நகர் சதுப்புநிலம் ஆகியவையும் ராம்சர் பட்டியலில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளன.
- சதுப்பு நிலங்களின் எண்ணிக்கை 54-ஆக அதிகரித்துள்ளது.
- ராம்சர் ஒப்பந்தம் கையொப்பமான பிப்ரவரி 2-ஆம் தேதி தேதியானது சர்வதேச சதுப்புநில தினமாக கொண்டாடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## 2026 - க்குள் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு

- 2030ம் ஆண்டுக்குள் ஒரு டிரில்லியன் டாலர் பொருளாதாரத்தை வளர்க்க வேண்டும் என்றும், 2026ம் ஆண்டுக்குள் தமிழகத்தில் 2 மில்லியன் இளைஞர்களின் திறன் மேம்பாடு அடைவதே இலக்கு.
- இல்லம்தேடிக் கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், கல்லூரிக் கனவு, அரசுப் பள்ளி மாணவிகள் உயர்கல்வி பயில மாதம் 1000 ரூபாய் நிதி உதவி, அரசுப் பள்ளி மாணவர்களுக்குத் தொழிற்படிப்புகளில் 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு, அவர்களுக்கான கட்டணங்களை அரசே ஏற்பு, டாடா நிறுவனத்துடன் இணைந்து சுமார் 3000 கோடி ரூபாய் செலவில் ஐடிஐக்கள் தொழில்நுட்ப மையங்களாகத் தரம் உயர்வு, பேராசிரியர் அன்பழகனார் பெயரில் பள்ளிகள் சீரமைப்பு, பெருந்தலைவர் காமராசர் பெயரால் கல்லூரிகள் சீரமைப்பு.
- தொழில் தொடங்க சிறந்த மாநிலங்களின் பட்டியலில் 14வது இடத்தில் இருந்து ஒரே ஆண்டில் 3வது இடத்துக்கு முன்னேறி இருக்கிறது.
- செமி-கண்டக்டர்கள், மின் வாகனங்கள், லித்தியம்-அயன் பேட்டரிகள், ஒருங்கிணைந்த சூரிய ஒளி மின்னழுத்திகள், உற்பத்தி, பசுமை ஹைட்ரஜன், தரவு மையங்கள் போன்ற துறைகள் சார்ந்த திட்டங்கள், தமிழ்நாட்டில் முதலீடுகளை மே ற்கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றன.
- இதற்குத் தேவையான அறிவுத்திறனை உருவாக்கவே 'நான் முதல்வன்' திட்டத்தை உருவாக்கி இருக்கிறோம்.
- தொழில்நுட்ப மாற்றங்கள் மற்றும் நான்காம் தலைமுறை தொழில்வளர்ச்சி என்ற அந்த அடிப்படைக்கேற்ப, நமது இளைஞர்கள் தயாராக வேண்டும் என்பதே என்னுடைய வேண்டுகோள்.

## இல்லம் தேடிக் கல்வி திட்டம்

- கொரோனா காலத்தில் 2 ஆண்டுகளாக பள்ளிக்கூடங்கள் மூடிக்கிடந்த நிலையில், மாணவர்களுக்கு கற்றலில் பெரிய தொய்வு ஏற்பட்டது.
- அதிலும் தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்வியைப் பொறுத்தமட்டில், ஆசிரியர்களிடம் நேரடியாக கல்வி கற்பதைப்போல, மாணவர்களால் ஆன்லைன் கல்வியில் முழுமையாக கற்க முடியாது.
- அதற்கான வசதிகளும் பெரும்பான்மையான ஏழை, எளிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு இல்லாத சூழ்நிலையே இருந்தது. இதனால் பெரிய அளவில் கற்றல் இழப்பு ஏற்பட்டது.
- இந்த இடைவெளியை சரிசெய்ய, தமிழக அரசால் உருவாக்கப்பட்ட திட்டம்தான் இல்லம் தேடிக் கல்வி திட்டம்.
- கடந்த ஆண்டு மே மாதம் தி.மு.க. அரசு ஆட்சிப்பொறுப்பை ஏற்றவுடன், முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிந்தையில் உதித்த அற்புதமான திட்டம்தான் இந்த சீரிய திட்டம்.
- கொரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக, 1 முதல் 8-ம் வகுப்பு வரை, பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கற்றல் இடைவெளி மற்றும் இழப்புகளை ஈடு செய்வதற்காக, தன்னார்வலர்களைக் கொண்டு, தினசரி 1 முதல் 1 மணி நேரம் (மாலை 5 மணி முதல் 7 மணி வரைக்குள்) குறைதீர் கற்றல் செயல்பாடுகளை மேற்கொண்டு மாணவர்களின் கற்றல் திறனை மேம்படுத்தும் வகையில், இல்லம் தேடிக் கல்வி திட்டம் நிறைவேற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டது.
- இந்த உன்னத திட்டத்தை 27.10.2021 அன்று விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் தாலுகா முதலியார்குப்பம் கிராமத்தில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.
- மாநில அரசின் 100 சதவீத நிதிபங்களிப்பின் கீழ் 200 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் இந்தத் திட்டம் செயல்பட்டு வருகிறது. பள்ளி வளாகங்களுக்கு எதிரே மற்றும் மாணவர்களின் வசிப்பிடம் அருகே தன்னார்வலர்களின் துணையோடு 1 முதல் 5-ம் வகுப்பு வரை ஒரு குழுவாகவும், 6 முதல் 8-ம் வகுப்பு வரை ஒரு குழுவாகவும் தன்னார்வலர்கள் மூலமாக கல்வி கற்பிக்கப்படுகிறது.
- இதற்காக தன்னார்வலர்களுக்கு ஊக்கத்தொகையும் வழங்கப்படுகிறது. அந்த பகுதியைச் சேர்ந்த பெண் தன்னார்வலர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.
- 12-ம் வகுப்பு தேர்ச்சி பெற்ற தன்னார்வலர்கள் 1 முதல் 5 வரை படிக்கும் மாணவர்களுக்கும், பட்டப்படிப்பு தகுதி கொண்ட தன்னார்வலர்கள் 6 முதல் 8-ம் வகுப்பு வரை கற்பிக்கும் தகுதி படைத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.
- தகுதி உள்ள தன்னார்வலர்களுக்கு அரசு பள்ளிக்கூட ஆசிரியர் தேர்வில் முன்னிரிமை அளிக்கப்படுகிறது.
- தற்போது, இல்லம் தேடி கல்வி திட்டத்தில் 2 லட்சம் தன்னார்வலர்கள் 34 லட்சம் குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் கல்வி கற்பித்து வருகிறார்கள்.
- டியூஷன் படிக்க வசதி இல்லாத மாணவர்களுக்கு, இந்த திட்டம் பெரிதும் கை கொடுக்கிறது. அவர்களின் கற்றல் திறனில் பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- 2 லட்சமாவது இல்லம் தேடிக் கல்வி கல்வித் திட்ட மையத்தை திருவண்ணாமலை மாவட்டம் ஆராஞ்சி ஊராட்சியில் சமீபத்தில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

TNPSC SCERT STUDY MATERIALS - DEGREE STANDARD (Tamil & English)

Set of Books
இனி சுரேஷ் புத்தகங்களுக்கு தபால் கட்டணம் முற்றிலும் இலவசம்
For Online Book purchase... www.sureshiasacademy.in
95002 39220
73392 21133